2012, July 06-19

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு

# சமகாலம்



# நில அபகரிப்பும் போராட்டங்களும்



## சம்பந்தனின் உரை ஏற்படுத்திய சலசலப்பு




## இந்திய ஜனாதிபதி தேர்தலில் கட்சிகளின் வியூகங்கள்

| | | |
|---|---|---|
| INDIA................IN₹ 50.00 | CANADA........CAN$ 10.00 | USA...........US$ 10.00 |
| SRI LANKA....SLR 150.00 | AUSTRALIA...AUS$ 10.00 | UK.............GB£ 5.00 |
| SINGAPORE...SG$ 14.00 | SWISS........CHF 10.00 | EUROPE..EU€ 5.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# WHAT WOULD YOU LIKE TO PAY FOR A Rs.1,000,000/- LIFE POLICY?

- ☑ Rs. 2000/- per year?
  (That's less than Rs. 6/- per day)
- ☑ Rs. 3000/- per year?
  (That's less than Rs. 9/- per day)
- ☑ Rs. 6000/- per year?
  (That's less than Rs. 17/- per day)



## NOW YOU CAN
With Our **Pure Life Policy**

It is time you got to know

The Hands that Protect
LIC
Life Insurance Corporation (Lanka) Ltd.

Call/Text: 0773 675 482
Tel: 0112 553 596-8
Fax: 0112 590 495
Web: www.liclanka.com

Make a selfless commitment for your loved one's protection at a price you will be more than happy to pay.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இருவாரங்களுக்கு ஒருமுறை

மலர் 01 இதழ் 01
**2012, ஜூலை 06 - 19**

A Fortnigtly Tamil News Magazine

**எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிடெட்**
185, கிராண்ட்பாஸ் ரோட், கொழும்பு–14,
இலங்கை.
**தொலைபேசி : +94 11 7322700**
**ஈ-மெயில்:** samakalam@expressnewspapers.lk

**ஆசிரியர்**
வீரகத்தி தனபாலசிங்கம்

**உதவி ஆசிரியர்கள்**
தெட்சணாமூர்த்தி மதுசூதனன்
துஷியந்தனி கனகசபாபதிப்பிள்ளை

**ஒப்பு நோக்கல்**
என்.லெப்ரின் ராஜ்

**புகைப்படங்களும்**
**பக்க வடிவமைப்பும்**
எம்.ஸ்ரீதரகுமார்

**தகவல் தொழில்நுட்பம்**
எஸ்.டி.தயாளன்

**விளம்பரம்**
எம்.செந்தில்நாதன்

**விநியோகம்**
கே.திலிப் குமார்

**உற்பத்தி பிரிவு**
எல்.ஏ.டி.ஜோசப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


எமது விருந்தினர்
ஜயந்த தனபால 06

எத்திசையில் தமிழர் அரசியல்..?
ராஜன் பிலிப்ஸ் 08

காணி நிலம் வேண்டும்
என்.சத்தியமூர்த்தி 12

ஆட்டோ ஓட்டும் அணங்குகள் 16

தொடர்ச்சியான நெருக்கடிக்குள்
மூலதனம்
பேராசிரியர் என்.சண்முகரத்தினம் 20

இந்திய ஜனாதிபதித் தேர்தல் 26

நில அபகரிப்பும் போராட்டங்களும் 32

எகிப்தின் மூன்று தூண்கள் 36

கல்வி திறனா? முதலீடா? 40

தோட்டத்தொழிலாளரின்
மூச்சுத்திணறல் 44

நூற்றாண்டு கடந்த நிலையில்
திராவிட இயக்கம்
வி.அரசு 46

தமிழ் படம் காட்டும்
பொலிஸ் சாகசம் 54

கலைஞர் பொறுப்பு 56

பேசும் உதடுகளின்
பேசாத இரகசியங்கள் 59

பனுவல் பார்வை 60

பதிவுகள் 62

கடைசி பக்கம்
நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் 64





36


08


06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு

# சமகாலம்

2012, ஜூலை 06-19


16


44


20


32


26


64


46

## ஆசிரியரிடமிருந்து...

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமையில்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டார்
அதைவணக்கஞ் செய்தல் வேண்டும்.

– மகாகவி பாரதியார்

இலங்கைத் தமிழ் இதழியல் துறைக்கு புதிய தொரு வரவாக 'சமகாலம்' செய்திச் சஞ்சிகையை எமது வாசகப் பெருமக்களின் கரங்களில் தவழவிட் டிருக்கிறோம். இரு வாரங்களுக்கு ஒரு முறை வெளி யாகவிருக்கும் இச் சஞ்சிகை இலங்கை வாழ் தமிழ் மக்களின் இன்றைய அரசியல், சமூக, பொருளாதார மற்றும் மனிதாபிமானத் தேவைகள், பிரச்சினைகள் குறித்து ஆழமான ஆய்வுத்தன்மையுடைய பார்வை யொன்றை முன்வைப்பதையும் அவர்களின் எதிர்காலப் பாதையைச் செம்மையானதாக வகுப்பதற்கு உதவக் கூடியதாக கருத்துப் பரிமாறல்களைச் செய்வதற்கான களத்தை அமைத்துக் கொடுப்பதையும் நோக்கமாகக் கொண்டதாகும்.

மாற்றமடைகின்ற உள்நாட்டு மற்றும் சர்வதேசச் சூழ் நிலைகளுக்கு ஏற்ற முறையில் பிரச்சினைகளுக்குத் தீர் வைக் காண்பதற்கு உதவியாக நிலைப்பாடுகளையும் அணுகுமுறைகளையும் திருத்தி அமைப்பதற்கு குறிப் பாக, இளஞ்சந்ததியினருக்கு அரசியல், சமூகப் பிரச்சி னைகள் குறித்துத் தெளிவான புரிதலை ஏற்படுத்தும் நன்நோக்கில் அறிவியல் ரீதியான ஆக்கங்களை வெளியிடுவதில் 'சமகாலம்' பிரத்தியேகமான கவனத் தைச் செலுத்தும்.

இலங்கைத் தமிழ் இதழியல் துறையைப் பொறுத் தவரை, செய்திச் சஞ்சிகைகளை வெளியிடுவதற்கு மேற்கொள்ளப்பட்டிருக்கக்கூடிய முன்னைய முயற்சி கள் பயனுறுதியுடைய முறையில் முன்னெடுக்கப்பட முடியாமல் போனமைக்கான அடிப்படைக்காரணிக ளைக் கருத்தூன்றி ஆராய்ந்த பின்னரே எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் சிலோன் லிமிட்டட் நிர்வாகம் 'சம காலம்' சஞ்சிகையை வெளியிடுவதற்கான தீர்மா னத்தை மேற்கொண்டது. காலத்தின் தேவையொன்றை நிறைவேற்ற வேண்டும் என்ற சமூகப்பற்றுணர்வுடன் முன்னெடுக்கப்படுகின்ற இந்த முயற்சி வெற்றி பெற தமிழ் பேசும் மக்கள் தங்களின் முழுமையான ஆத ரவையும் ஒத்துழைப்பையும் தருவார்கள் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை.

சமகாலம் தமிழ்ப் பேசும் மக்களின் எதிர்காலத்தை மனதிற்கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திச்சாரம்

## புதிதாக எதுவுமில்லை


சிவ்சங்கர் மேனன்

ஒரு நாள் விஜய மொன்றை மேற்கொண்டு கடந்த வாரம் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் கொழும்பு வந்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், பாதுகாப்புச் செயலாளர் கோதாபய ராஜபக்ஷ ஆகியோருடன் பேச்சுவார்த்தைகள் நடத்தினார்.

இன நெருக்கடிக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்கான செயன்முறைகளைப் பொறுத்தவரை ஏற்பட்டிருக்கும் முட்டுக்கட்டை நிலையைத் தகர்ப்பதற்கு அரசாங்கத் தரப்பில் முயற்சிகள் மேற்கொள்ளப்படாதமை குறித்தும் வடக்கில் இராணுவப் பிரசன்னத்தைக் குறைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருக்கின்றமை குறித்தும் இந்தியாவின் கவலையை அவர் வெளியிட்டதாக அரசியல், இராஜதந்திர வட்டாரங்கள் மூலம் அறியக்கிடைத்தது.

இலங்கைப் பிரச்சினைக்கு இலங்கையர்களே தீர்வைக்காண வேண்டும். இந்தியர்களாகிய நாம் சம்பந்தப்பட்ட சகல தரப்பினருடனும் தொடர்ந்தும் ஊடாட்டங்களைச் செய்து எமது உதவியை, ஒத்துழைப்பை வழங்க முன்வருவோம். இந்தியா எப்போதுமே சகல பிரஜைகளினதும் சமத்துவமும், நீதியும், கௌரவமும், சுயமரியாதையும் உறுதி செய்யப்படக்கூடிய ஐக்கியப்பட்ட இலங்கையையே ஆதரித்து நிற்கும் என்றும் தனது விஜயத்தின் இறுதியில் மேனன் கூறியதாக தெரிவிக்கப்படுகிறது. இந்திய அமைச்சர்களினதும் இராஜதந்திரிகளினதும் முன்னைய இலங்கை விஜயத்தின் போது கூறப்பட்டவற்றை விட மேனன் புதிதாக ஒன்றும் கூறியதாக இல்லையே.

## தொடரும் பலப்பரீட்சை

பாகிஸ்தானில் உச்சநீதிமன்றத்திற்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான பலப்பரீட்சை முடிவுக்கு வருவதாக இல்லை. ஜனாதிபதி ஆசிவ் அலி சர்தாரிக்கு எதிரான ஊழல் வழக்குகளை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என்று சுவிஸ் அரசாங்கத்தை புதிய பிரதமர் ராஜா பெர்வேஸ் அஷ்ராப் கேட்பாரா, இல்லையா என்பதை இன்னும் ஒரு வாரத்தில் அறிவிக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் காலக்கெடு விதித்திருக்கிறது.

பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைமையிலான தற்போதைய அரசாங்கம் 2013 பெப்ரவரி வரையும் பதவியில் இருக்க முடியுமானால் அந்த நாட்டில் 5 வருட கால ஆணையை முழுமையாகப் பூர்த்தி செய்த அரசாங்கம் என்ற பெருமையைப் பெறக்கூடியதாக இருக்கும். ஆனால் உச்ச நீதிமன்றத்துடனான பொருதல் நிலை முடிவுக்கு வரும் அறிகுறி தென்படுவதாக இல்லை என்பதால் அந்தப் பெருமையை பெறும் தகுதியைப் பெறுவதற்கு அரசாங்கத்திற்கு வாய்ப்பு இல்லாமல் போகுமோ என்று யோசிக்க வேண்டியிருக்கின்றது.

ஜனாதிபதிக்கு எதிரான பல கோடி டொலர்கள் சம்பந்தப்பட்ட ஊழல் வழக்குகளை மீண்டும் ஆரம்பிக்குமாறு சுவிஸ் அரசாங்கத்தைக் கேட்க வேண்டுமென்று முன்னாள் ஜனாதிபதி யூசுப் ரசா கிலானியை உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. அவர் அந்த உத்தரவை நிறைவேற்றத் தவறியதை அடுத்து நீதிமன்றத்தை அவமதித்ததாக கடந்த ஏப்ரலில் குற்றவாளியாகக் கண்டது. ஆனால் அவர் பதவி விலகவில்லை. கடந்த மாதம் 19 ஆம் திகதி நீதிமன்றம் அவரை பதவி நீக்கம் செய்தது.


பெர்வேஸ் அஷ்ரப்

பாகிஸ்தான் மக்கள் கட்சி கூட்டணி அரசாங்கம் இரு வாரங்களுக்கு முதல் அஷ்ரப்பை பிரதமராகத் தெரிவு செய்தது. அவர் பிரதமராக பதவியேற்று 5 நாட்களுக்குள்ளாகவே சர்தாரி சம்பந்தப்பட்ட ஊழல் வழக்குகளை மீண்டும் விசாரிக்குமாறு சுவிஸ் அரசாங்கத்தை பிரதமர் கேட்டுக் கொள்வாரா என்பதைக் கண்டறியுமாறு சட்டமா அதிபரை உச்ச நீதிமன்றம் கேட்டிருக்கின்றது.

## மீண்டும் ஊழல்

இந்தியாவில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாங்கம் இன்னொரு ஊழல் குற்றச்சாட்டினால் பாதிக்கப்பட்டிருக்கின்றது. சிறிய மற்றும் நடுத்தரத்தொழில் துறை மத்திய அமைச்சராக பதவி வகித்த விர்பத்ர சிங் கடந்த வாரம் பதவி விலகியிருக்கிறார். இரண்டாவது பதவிக் காலத்தில் இருக்கும் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசாங்கத்தில் இருந்து ஊழல் குற்றச்சாட்டு தொடர்பாக பதவி விலகிய மூன்றாவது அமைச்சர் இவர். ஏற்கெனவே 2 ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு ஊழல் விவகாரம் தொடர்பில் தமிழ் நாட்டைச் சேர்ந்த திராவிட முன்னேற்றக்கழகத்தின் ஆ.ராசாவும் தயாநிதி மாறனும் பதவி விலக ஏற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.


விர்பத்ர சிங்

இமாச்சல பிரதேசத்தின் முன்னாள் முதலமைச்சரான விர்பத்ர சிங் 1989 ஆம் ஆண்டில் இடம் பெற்ற ஊழல் விவகாரம் தொடர்பில் தற்போது குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறார். சந்தேகத்திற்கு இடமான பணக் கொடுக்கல், வாங்கலுடன் தொடர்புடைய விவகாரத்தில் 23 வருடங்கள் கழித்தே அவருக்கு எதிராக நீதிமன்றம் குற்றச்சாட்டுக்களை சுமத்தியிருக்கின்றது.

இமாச்சலப் பிரதேசத்தில் எதிர்வரும் டிசம்பர் மாதம் சட்ட சபைத்தேர்தல்கள் நடைபெறவிருக்கும் நிலையில் விர்பத்ர சிங் கிற்கு எதிரான வழக்கு கிளப்பக்கூடிய சர்ச்சை காங்கிரஸுக்கும் ஐக்கிய முற்போக்கு கூட்டணிக்கும் பெரும் அசௌகரியத்தை கொடுத்திருக்கிறது.

இமாச்சலப் பிரதேசத்தில் தற்போது பாரதீய ஜனதாக் கட்சியே ஆட்சியில் இருக்கின்றது. அந்த அரசாங்கத்திற்கு எதிர்வரும் சட்ட சபைத் தேர்தலில் வலிமையான சவாலொன்றை ஏற்படுத்துவதற்கு காங்கிரஸ் தீட்டியிருக்கக்கூடிய திட்டங்களுக்கு விர்பத்ர சிங் ஊழல் விவகாரம் பின்னடைவை நிச்சயம் ஏற்படுத்தும் என்பதில் சந்தேகம் இல்லை. விர்பத்ர சிங் மீண்டும் மாநில அரசியலுக்கு திரும்பும் நோக்கத்தைக் கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் 5 தடவைகள் இந்த மாநிலத்தில் பிரதமராக ஏற்கெனவே பதவி வகித்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரக்குமழலம்....

விடுதலைப் புலிகளுக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்திற்கும் இடையே வேறுபாடு கிடையாது. ஏனென்றால் இருதரப்பினருமே வட பகுதி மக்களின் வாக்குரிமையை நிராகரித்தவர்கள். வடமாகாணத் தேர்தலை நடத்த மறுப்பதன் மூலம் அரசாங்கம் வடக்குத் தமிழர்களின் வாக்குரிமையை நிராகரிக்கிறது. 2005 ஜனாதிபதித் தேர்தலில் அந்தத் தமிழர்களை வாக்களிக்க விடாமல் தடுத்ததன் மூலம் விடுதலைப் புலிகள் செய்த காரியத்தையே மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் இருப்பதை இன்றைய அரசாங்கம் செய்து கொண்டிருக்கிறது.



ரணில் விக்கிரமசிங்க
எதிர்க்கட்சித் தலைவர்

பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர கொலை செய்யப்பட்டார் என்று பேசுவதற்கு நாம் ஒரு போதும் தயங்கக் கூடாது



தினேஷ் குணவர்தன
தேசிய நீர் விநியோக வடிகாலமைப்பு அமைச்சர்

தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு வரும் போது அதில் தமக்கும் பங்கு வேண்டும் என்றும் பேச்சுவார்த்தையில் ஒரு தரப்பினர் என்றும் உரிமைக் கோரிக்கை விடுக்கும் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் தீர்வைத்தேடி தமிழ்க் கட்சிகள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நடத்தும் போராட்டங்களிலும் பங்குபெற வேண்டும்



மனோ கணேசன்
ஜனநாயக மக்கள் முன்னணி

அரசாங்கத்தையும் பிரதான எதிர்க்கட்சியையும் தற்போதைய போக்கிலேயே செயற்படத் தொடர்ந்து மக்கள் அனுமதிக்க வேண்டும். அவ்வாறு செய்தால் தான் எதிர்காலத்தில் இன்னொரு அரசியல் அணி தோன்றுவதற்கு ஏதுவான சூழ்நிலை உருவாக முடியும். நானோ எனது கட்சியோ தேர்தல்களில் போட்டியிடுவதற்குக் காலம் இன்னும் கனியவில்லை. எனது அரசியல் பயணம் மிகவும் நீண்டது. அது நிறைவு பெற பல வருடங்கள் செல்லும்.



சரத் பொன்சேகா
முன்னாள் இராணுவத் தளபதி

பௌத்த சமூகத்தின் மதத் தலைவர்கள் புத்த பெருமானால் விதந்துரைக்கப்பட்ட சட்டங்களை மாத்திரம் பின்பற்றி வாழ்கிறார்கள். ஏனையவர்களின் சட்டங்களுக்கு அவர்கள் ஒருபோதும் அடிபணியப் போவதில்லை. 2004 ஆம் ஆண்டு இலங்கையில் பௌத்த குருமார் அரசியலில் பிரவேசித்ததையடுத்து அரசியல் கலாசாரத்தில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன.



உதய கம்மன்பில
ஜாதிக ஹெல உறுமய

ஒரு அமைச்சர் என்ற வகையில் நான் அதிகாரிகள் அல்லது புத்திஜீவிகள் தவறிழைத்து விட்டால் அதில் சம்பந்தப்படுவதில்லை. ஏனென்றால் நான் தவறிழைக்கும் பட்சத்தில் அவர்கள் அதில் சம்பந்தப்படமாட்டார்கள் என்பது எனக்குத் தெரியும்.



விமல் வீரவன்ச
வீடமைப்பு அமைச்சர்

எனது உடல் ஆணுக்குரியதாக இருந்தாலும், நான் செய்ததாகக் குற்றஞ்சாட்டப்படுகின்ற காரியங்களை என்னால் செய்ய முடியாது. ஏனென்றால் சுய குறிப்பிட்ட திருநிலை அனுபவங்கள் எனது உடலில் ஏற்பட்டு விட்டன.



சுவாமி நித்தியானந்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விருந்தினர் பக்கம்

# நல்லிணக்கம் ஒரு வழிப்பாதை அல்ல

ஜயந்த தனபால

இலங்கையின் சகல இனமக்களையும் பெரும் அவலத்திற்குள்ளாக்கிய பயங்கரவாதக்கொடுமை இராணுவ ரீதியாகத்தோற்கடிக்கப்பட்டு மூன்று வருடங்களுக்கும் கூடுதலான காலம் கடந்து விட்டது. இறந்து போனவர்களின் உயிர்களை மீட்டுக் கொண்டு வரமுடியாது. ஊனமுற்றவர்கள் தங்களது இயற்கையான அவயவங்களை மீண்டும் பெற்றுவிட முடியாது. ஆனால் கட்டிடங்கள் திருத்தியமைக்கப்படுகின்றன அல்லது புதிதாகக் கட்டப்படுகின்றன. விவசாய நிலங்களில் இருந்து கண்ணி வெடிகள் மீட்டெடுக்கப்பட்டு மீண்டும் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. மீண்டும் ஏற்படுத்தப்பட்டுவருவதால் வாழ்க்கைத் தொழில் மீண்டும் புதுப்பிக்கப்படுவதால் இயல்பு வாழ்க்கை திரும்பிக் கொண்டிருக்கின்றது.

ஆனாலும், நிலைபேறான அமைதியைக் கொண்டுவரக்கூடிய அரசியல் தீர்வு ஒன்று எம்மை விட்டு தொடர்ந்தும் நழுவிக் கொண்டு செல்கின்றது. உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் எல்லோருமே மீள் குடியமர்த்தப்படவில்லை; மோதலுக்கு வழிவகுத்த அரசியல் பிரச்சினைகளும் மனக்குறைகளும் தொடர்ந்தும் தீர்த்து வைக்கப்படாமலேயே இருக்கின்றன. அதேவேளை உண்மையான மனக்குறைகள் இருக்கின்றன என்பதை சிலர் தொடர்ந்தும் மறுதலித்துக்கொண்டேயிருக்கின்றார்கள்; மனித உரிமை மீறல்கள் நேர்மையுடன் அம்பலப்படுத்தவில்லை. சகல இனங்களையும் மதக் குழுக்களையும் சேர்ந்த பிரஜைகளின் மனதில் தொடர்ந்து அச்சமும், சந்தேகமும் நிலவுகின்றது.

பாராளுமன்றத்தில் அதீத பெரும்பான்மைப்பலத்தைக் கொண்டிருக்கின்ற போதிலும் கூட, தேவையான சகலதையும் அரசாங்கம் செய்யும் என்று எதிர்பார்ப்பது பயனற்றது. நாம் ஜனரஞ்சகமான ஜனாதிபதி ஒருவரைக் கொண்டிருக்கிறோம். ஆனால் ஜனரஞ்சக அரசியல் அதன் மட்டுப்பாடுகளைக் கொண்டிருக்கின்றது. சகல அரசியல் கட்சிகளும் சிவில் சமூகமும் சுயாதீன அமைப்புகளும் நிராகரிக்க முடியாத பொறுப்புகளையும் தவிர்க்க முடியாத வகிபாகத்தையும் கொண்டிருக்கின்றன. இதன் காரணத்தினால் தான் நல்லிணக்கத்தை நோக்கிய பாதை ஒரு வழிப்பாதையாக இருக்க முடியாது. மேல் மட்டத்தில் இருந்து கீழ் மட்டத்தை நோக்கிவரும் செயல் முறையாகவும் அது இருக்க முடியாது. நல்லிணக்கம் என்பது இறுதியில் அடிமட்ட மக்களின் ஆதரவைப் பெற்றாக வேண்டும்.

இரு தலைமுறைகளினூடாக தோற்றுவிக்கப்பட்ட வன்முறைக்கலாசாரத்தை புதியதொரு சமாதானக்கலாசாரத்தினால் பதிலீடு செய்வதற்கு எமது மக்களுக்கு நாம் அறிவூட்ட வேண்டியிருக்கின்றது. பொருளாதார அபிவிருத்திக்கும் சுபிட்சத்துக்குமான வலிமையான அத்திபாரம் அதுவேயாகும். அதுவே எம்மெல்லோருக்கும் தனிப்பட்ட பாதுகாப்பையும் ஜனநாயக வெளியையும் மனித உரிமைகளையும் உறுதி செய்ய முடியும்.

ஒரு தேசம் என்ற வகையில், நாம் எல்லோரும்-பெரும்பான்மையினத்தவரான சிங்களவர்களும் சிறுபான்மை இனத்தவர்களான தமிழர்கள், முஸ்லிம்கள், பறங்கியர்கள், மலாயர்கள் மற் றும் ஏனைய குழுக்களும் மூன்று தசாப்த கால மோதலின் உடல் ரீதியானதும் உளவியல் ரீதியானதுமான சிதைவுகளை எதிர்நோக்குகிறோம். புதிய சிந்தனை மற்றும் கடும் உழைப்பினூடாக மாத்திரமே எம்மால் இதை வெற்றிகொள்ள முடியும். சகல இனக்குழுக்கள் மத்தியிலும் தீவிரவாதிகள் இருக்கிறார்கள். அவர்கள் மௌனமாக இருக்கும் எமது தேசத்தில் பெரும்பான்மை மக்களின் அபிப்பிராயத்தைப் பிரதிபலிப்பவர்கள் அல்லர். அந்தப் பெரும்பான்மையினர் சமாதானத்துடனும் இணக்கப்பாட்டுடனும் வாழ விரும்புபவர்கள். பெரும்பாலும் பன்முகத்தன்மை கொண்ட அபிவிருத்தியடைந்த நாடுகளின் சௌகரியமான சூழ்நிலைகளில் வாழ்கின்ற புகலிடம் பெயர்ந்த குழுக்கள் இனக்குரோத உணர்வுகளைத் தூண்டிவிட்டுக் கொண்டிருக்கின்றார்கள். ஆக்க பூர்வமான முறையில் செயற்பட அவர்களால் முடியும் என்றபோதும் இக்குழுக்கள் பாதகமான செயன்முறைகளிலேயே அக்கறைகாட்டுகிறார்கள். அரசாங்கமும் சகல அரசியல் கட்சிகளும் மற்றும் சிவில் சமூகமும் தங்களது சொந்த அணுகுமுறைகளைக் கையாளுகின்ற அதேவேளை, சகலர் மத்தியில் இருந்தும் குறிப்பாக தலைமைத்துவ வெற்றிடமொன்றை கொண்டிருப்பதாகத் தோன்றும் சிறுபான்மை இனத்தவர்கள் மத்தியில் இருந்து புதிய மலர்ச்சியான சிந்தனையும் செயன்முறையும் தோன்றவேண்டும். இந்த எளிமையான நடவடிக்கைகளில் இறங்கி புதிய பயணத்தை நாம் தொடங்குவோமாக.

மோதல் முடிவுக்கு வந்துவிட்டபோதும் கூட நாம் இப்பொழுது எளிதில் பற்றியெரியக்கூடிய சூழ்நிலையிலேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். பரஸ்பரம் விளைவித்த தீங்கிற்கும் காயத்திற்குமாக நாம் ஒருவர் மற்றவரைப் பார்த்து இன்னமும் மன்னிப்புக்கோரவில்லை. நாம் எல்லோரும் குற்றவாளிகள். செய்தவற்றுக்காக நாம் வருந்துகின்றோம் என்று கூறுவதிலிருந்தே உண்மையான நல்லிணக்க செயன்முறை ஆரம்பிக்க வேண்டும். ஒரு சிங்களவர் என்ற முறையில் நான், அப்பாவித் தமிழர்களுக்கு நேர்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வற்றுக்காக குறிப்பாக 1983 ஜுலையில் அவர்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைகளுக்காக வருந்துகின்றேன்.

இது போதுமானதல்ல. சொல்லாலோ அல்லது செயலாலோ ஒருவருக்கு மற்றவர் மீண்டும் ஒருபோதும் தீங்கிழைக்காது இருப்பதை நாம் உறுதி செய்யவேண்டும். கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னிலையில் சட்சியமளித்த போது பல விடயங்களுக்கு மத்தியில் பின்வருமாறு கூறினேன்; சமூக உருவாக்கத்தில் இருக்கின்ற எம்மைப்போன்ற பன்முகத் தன்மை கொண்ட பல நாடுகள் இன மற்றும் மத உறவுகள் சட்டம், இன உறவுகள் சபை என்பவற்றைக் கொண்டிருக்கின்றன. வெறுப்புணர்வைத் தூண்டுகின்ற பேச்சுக்களை நிகழ்த்துவோருக்கு எதிராகவும் இன ரீதியானதோ மத ரீதியானதோ இந்தக் குழுக்களுக்கு எதிராக வெறுப்புணர்வுப் பிரசாரங்களைச் செய்கின்றவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்படுவதை உறுதி செய்வதாக இந்த சட்டமும் சபையும் அமைந்திருக்கின்றன. இத்தகைய சட்டத்தை நாமும் கொண்டுவந்து நடைமுறைப்படுத்த வேண்டியது முக்கியமானது என்று நான் நினைக்கின்றேன். குற்றவியல் ஒழுக்கக் கோவையின் மற்றைய பகுதிகளில் இது ஏற்கெனவே உள்ளடக்கப்பட்டிருக்கின்றது என்பது எனக்குத் தெரியும். சட்ட வல்லுநர்களான நீங்கள் இதுபற்றி மேலும் கூடுதலான விடயம் அறிந்தவர்களாக இருக்கக் கூடும். ஆனால் இன உறவுகள் மற்றும் மத உறவுகள் சட்டம் ஒன்றிற்குள் அவற்றை ஒழுங்கமைப்பது அதற்கு கூடுதல் முக்கியத்துவத்தை கொடுப்பதாக அமையும். இதை உறுதிப்படுத்தக் கூடிய சபையொன்று இருக்குமானால், மேற்குலக ஜனநாயக நாடுகள் பலவற்றில் யூத எதிர்ப்பு வாதம் தடை செய்யப்பட்டிருப்பதையொத்த பாணியில் இதை உறுதிப்படுத்தலாம். இங்கும் எம்மால் அதை உறுதி செய்ய முடியும் என நான் நினைக்கிறேன். குரோதவுணர்வுகளை தூண்டுகின்றன, மனப்போக்குகள் தவறானவை என்பதை உறுதிப்படுத்த வேண்டிய தேவை எமக்கு இருக்கின்றது. அத்தகைய உணர்வுகள் தேசிய ஒருங்கிணைவைக் கட்டியெழுப்புவதற்கும் இலங்கையர் என்ற வகையில் ஒரு தேசிய அடையாளத்தை நிறுவுவதை நோக்கிய செயன்முறைகளுக்கும் உதவப்போவது இல்லை என்பதை நாம் உறுதி செய்து கொள்ளவேண்டிய தேவையிருக்கின்றது.

நாம் ஒருவர் மற்றவரின் இனத்தை அல்லது மதத்தைக்குறிப்பதற்குப் பயன்படுத்துகின்ற பேச்சுவழக்கு அடைமொழிகளை தடைசெய்வதில் இருந்து இதை ஆரம்பிப்போமாக. அத்தகைய ஒவ் வொரு அடைமொழிப்பயன்பாட்டுக்குப் பின்னாலும் கேலியும், ஆத்திரமும் இருக்கின்றது. இனவெறி மனோ பாவமும் மதச்சகிப்பு இன்மையும் அவற்றின் பின்னால் இருக்கின்றது. ஒருவரை தாக்குவதையோ அல்லது அவரது உடைமையைத் திருடுவதையோ பிழையானதாக நாம் கருதுவதைப்போன்று மேற்கூறப்பட்ட அடைமொழிப் பிரயோகங்கள் பாடசாலைகளிலும் விளையாட்டு மைதா னங்களிலும் இல்லாமல் போகுமானால் முதிர் சமுதாயத்தில் அது தொடர்ந்து வழக்கில் இருப்பதற்கான வாய்ப்பு இருக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# எத்திசையில் தமிழர் அரசியல்..?

## மட்டுநகர் மகாநாட்டு உரையில் சம்பந்தன் காட்டிய வழி



ராஜன் பிலிப்ஸ்

கடந்த மே மாத இறுதியில் இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் தங்களது 14 ஆவது மகாநாட்டை மட்டக்களப்பில் நடத்தி முடித்தனர். போரினால் சிதறுண்டு, விரக்தியின் விளிம்பில் நிற்கின்ற தமிழினத்திற்கு ஓர் அரசியல் ஆதரவாக மட்டுநகர் மகாநாடு அமைந்தது. அதேசமயத்தில் இலங்கை அரசியற் குட்டையில் சில சர்ச்சைச் சுழிப்புகளையும் அந்த மகாநாடு ஏற்படுத்திவிட்டது. குறிப்பாகத் தமிழரசுக் கட்சியினதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் தலைவராக இருக்கும் இரா.சம்பந்தனின் மகாநாட்டுத் தலைமையுரை சிங்கள அரசியல் உணர்வாளர்கள் மத்தியில் சில பல கருத்து வேறுபாடுகளைக் கிளறிவிட்டது.

இலங்கைத் தமிழ் மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையைப் பற்றி சம்பந்தன் விளம்பிய கெட்டித்தனமான வியாக்கியானமே தென்னிலங்கைக் கருத்து வியாதங்களுக்கு ஆதாரமாகியது. ஒரு புறத்தில் தமிழ் மக்கள் தமது சுயநிர்ணய உரிமையை (1) ஐக்கியப்பட்ட இலங்கைக் குட்பட்டு, (2) ஒற்றையாட்சி அமைப்பைச் சரிவரச் சீர்திருத்தி, (3) தமது பாரம்பரிய பிரதேசங்களின் அடிப்படையை அங்கீகரித்த முறையில் நிறைவேற்றிக் கொள்வதை ஏற்றுக்கொள்ளமுடியும். மறுபுறத்தில், இத்தகைய ஏற்றுக்கொள்ளல் ஏற்புடைமை தமிழ் மக்கள் வெளிப்புற ரீதியாக தமது சுயநிர்ணயிப்பைக் கோருகின்ற உரிமையைக் கைவிட்டுவிட்டதாக விளங்கிக்கொள்ளக்கூடாது. சுயநிர்ணய உரிமையின் இந்த இரண்டு அம்சங்களையும் சம்பந்தன் சேர்த்துக்கூறியதே சிங்கள உணர்வாளர்கள் மத்தியில் சலசலப்பை ஏற்படுத்திவிட்டது.

சம்பந்தன் கூறியதில் பிழையேதும் இல்லை. அவரது தர்க்கத்திலும் தவறில்லை. இரு கருத்துப்பட பேசி விட்டார் என்று கூறுவதற்கும் இடமில்லை. பிரச்சினை சம்பந்தனின் பேச்சில் இல்லை. பேச்சினை விமர்சிக்கின்றவர்களின் அரசியல் பின்னணியிலேயே பிரச்சினை தங்கியுள்ளது என்பது எனது கருத்து. தென்னிலங்கைத் தீவிரவாதிகள் சம்பந்தனின் பேச்சைத் திம்புத் தீர்மானங்களின் மீளுரைப்பு என்றும் புலம்பெயர்ந்த புலிகளின் தாளத்திற்கான ஆட்டமென்றும் அறிவற்ற வகையில் விமர்சித்துள்ளனர். தனது பேச்சினால் அரசியல் அமைப்பின் நியாயமற்ற ஆறாவது திருத்தத்திற்கு எதிராகச் செயற்பட்டு விட்டார் என்ற குற்றச்சாட்டிற்கு சம்பந்தன் ஆளாகிவிட்டார் என்ற வெறுமையான சட்டவாதத்தையும் இவர்கள் முன்வைத்துள்ளனர்.தாராள மனப்பான்மை கொண்டவர்கள் சம்பந்தனின் பேச்சு இலங்கையின் அரசியல் சதுரங்கத்தில் ஒரு கெட்டித்தனமான அசைவென்றும் இந்த நிலையில் இலங்கை அரசாங்கம் சதுரங்க எதிரசைவுகளில் ஈடுபடாமல் பொறுப்பான முறையில் தமிழர் பிரச்சினையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

போர் முடிந்து மூன்று ஆண்டுகளுக்கும் கூடுதலான காலம் கடந்துவிட்ட நிலையிலும் கூட தமிழ் அரசியல் பிரச்சினை பற்றியோ, தமிழ் மக்களது புனர்வாழ்வு பற்றியோ பொறுப்பாக ஒன்றுமே செய்யாமல் அரசாங்கம் காலம் கடத்துகின்ற வேளையில், சம்பந்தனின் பேச்சினதும் மகாநாட்டுத் தீர்மானங்களினதும் அரசியல் தாற்பரியங்களைச் சிறிது வியாசிப்பதே இச்சிறுகட்டுரையின் நோக்கமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### போருக்கு முன்னரும் பின்னரும் தமிழ் அரசியல்

தமிழ் அரசியலில் வரலாற்றுத் திருப்பங்களைச் சம்பந்தன் தனது பேச்சில் சரியாக விளக்கியுள்ளார். இலங்கைத் தமிழ் அரசியல் சாத்வீகப் போக்கில் இருந்து வன்முறைப்போராட்டத்திற்கு வழிதவறியதற்கான பெருங்காரணம் இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகளும் பெரும்பான்மைக் கட்சித் தலைவர்களின் சிறுமைத்தனமுமே தவிர வேறு எதுவும் இல்லை. வன்முறைப் போராட்டக் காலத்தில் விடுதலைப் புலிகளின் வீரப் பங்களிப்புகளை பெருமளவு தமிழர்கள் மதித்தாலும் போர் கடந்த காலத்தில் வன்முறைக்கு தமிழ் அரசியலில் இனி இடமில்லை என்பதை தமிழ் அரசியலாளரும் சிவில் சமூகத் தலைவர்களும் மறுக்கவும் முடியாது, மறக்கவும் கூடாது. வன்முறைக்கு மாத்திரமல்ல, ஜனநாயக விரோதச் செயல்களுக்கும் தமிழ் அரசியலிலும் சமூகத்திலும் இனி இடமில்லை என்பதும் தெளிவாக வேண்டும்.

வன்முறையும் ஜனநாயக விரோதமும் அரசியல் நெறிகெட்ட பயிற்சிகள் என்பதை இங்கு வலியுறுத்த வேண்டியதில்லை. நடைமுறையிலும் இவை ஆபத்தானவை என்ற உண்மையை சம்பந்தன் கூறியது போன்று சற்று வலியுறுத்தலாம்.முப்பது ஆண்டுகளாக நடைபெற்ற ஈழப்போர் என்று பலராலும் விபரிக்கப்படுகின்ற காலகட்டத்திலே உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட மாற்றங்கள் இலங்கைத் தமிழர் பிரச்சினை உள்நாட்டு ரீதியாக தீர்த்துக் கொள்ளப்படுவதை சிக்கலாக்கிவிட்டன. உலகளாவிய மாற்றங்களில் மிக முக்கியமானவை வல்லரசுகளுக்கிடையிலான குளிர்ப்போரின் (cold war) முடிவும் மனித குலம் அனைத்தையும் உள்ளடக்கிய உலக மயமாக்கல் (globalization) என்ற தோற்றப்பாட்டின் உதயமுமே. இம்மாற்றங்களின் உலகம் பரந்த அரசியல் அர்த்தம் ஜனநாயக விருத்தியும் வன்முறை ஒழிப்புமே தவிர வேறில்லை. இவ்வர்த்தம் ஒவ்வொரு சமூகத்திலும் நாட்டிலும் ஒரே வகையிலோ அல்லது ஒரே வேளையிலோ பிரதிபலிக்கப்படுமென்று கருதுவதோ எதிர்பார்ப்பதோ அறியாமையாகும். இலங்கையில் எவ்வாறு இது பிரதிபலிக்கப்படுகின்றது என்பதே எம்முள் உள்ள கேள்வி. சம்பந்தன் இந்தக் கேள்விக்குச் சரியாக மறுமொழியளித்துள்ளார் என்றே கூற வேண்டும். இலங்கையைப் பொறுத்த வரையில் 2002-2004 காலப் பகுதியில் சமாதான முயற்சிகள் உலகளாவிய மாற்றங்களின் பிரதிபலிப்பெனலாம். மறுபுறத்தில் பார்த்தால் சமாதானத் தோல்வியும் போரின் மீள் எழுச்சியும் உலகப் போக்கின் மறுதலிப்பெனலாம். போர் முடிந்து போனாலும் போரின் விளைவுகள் நாட்டை விட்டுப் போகவில்லை. வென்றவர், தோற்றவர் என்று நாடு பிரிவினையின்றிப் பிளவுபட்டுவிட்டது. போரின் பின்னால் தமிழருக்குக் கிடைத்த ஒரேயொரு வரம் இலங்கை விவகாரங்களில் சர்வதேச சமூகத்தின் தலையீடேயாகும்.

> 1976 வட்டுக் கோட்டைத் தீர்மானத்திற்கும் 36 ஆண்டுகளுக்குப் பின்னர் 2012 இல் நடைபெற்ற மட்டக்களப்பு தமிழரசுக் கட்சி மகாநாட்டிற்கும் இடையிலுள்ள அரசியல் சூழலமைவுகளின் வேறுபாடுகளைச் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும். தமிழர் விடுதலைக் கூட்டணியின் வட்டுக்கோட்டைத் தீர்மானம் தனித் தமிழ் ஈழத்தை தமிழ் அரசியலின் ஒரேயொரு குறிக்கோளாக, வெளிப்புறச் சுய நிர்ணயிப்பாகவும் ஒரு தலைப்பட்சமாகவும் வரைந்துரைத்தது. அன்றைய தீர்மானத்தில் இலங்கை அரசாங்கத்திற்கு இடமேதும் இருக்கவில்லை. மட்டக்களப்பு மகாநாட்டு நடப்புகள் இன்றைய காலகட்டத்திற்குப் பொருத்தமான முறையில் தமிழ் அரசியலை திசை திருப்பியுள்ளன



கடந்த பங்குனி மாதத்தில் ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் அமெரிக்காவும் இந்தியாவும் இணைந்து இலங்கை அரசாங்கத்தைக் கண்டித்துத் தீர்மானம் இயற்றியது இலங்கையின் வெளியுலக உறவில் ஏற்பட்ட ஒரு முக்கியமான திருப்பமென சம்பந்தன் தனது உரையில் விபரித்துள்ளார். ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தைப் புறக்கணித்து நடந்தால் தான் சர்வதேச ரீதியில் ஒரு செல்லாக்காசாகிவிட நேருமென்பதை ராஜபக்ஷ ஆட்சிக் குழு வெறுப்போடு உணர்ந்து வருகிறது. சீனாவைக் காட்டி இந்தியாவுக்குப் பொறியிட்ட கெட்டித்தனம் அமெரிக்காவில் செல்லுபடியாகாது என்ற அனுபவமும் அரசாங்கத்திற்குக் கிடைத்துவிட்டது.

உண்மை என்னவென்றால் போர் முடிந்தாலும் போரைப் பற்றிய சர்வதேசக் கண்டிப்புகள் ஓயவேயில்லை. இக்கண்டிப்புகளைச் சமாளிப்பதற்காக நல்லெண்ணம் ஏதுமின்றி, சூது நோக்கோடு மட்டுமே இலங்கை அரசாங்கம் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நிறுவியது. அக்குழுவின் பரிந்துரைகள் அரசாங்கம் எவ்வகையிலும் எதிர்பார்க்காத முறையில் அரசாங்க வண்டி மாடுகளுக்குப் போட்ட நுகப்பாரமாகிவிட்டன. திட்டமிட்ட வகையில் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை இலங்கை அரசாங்கம் செயற்படுத்த வேண்டுமென்ற சர்வதேச சமூகத்தின் கோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிக்கையைத் தட்டிக் கழிப்பது முன்னென்றும் இல்லாத விதத்தில் ராஜபக்ஷ ஆட்சிக் குழுவுக்கு பெரும் சங்கடமாகிவிட்டது. இந்நிலையில் தமிழ் அரசியல் எத்திசையில் திரும்ப வேண்டுமென்ற கேள்விக்குப் பொறுப்பான முறையில் தலைவர் சம்பந்தன் மட்டக்களப்பில் பதில் கொடுத்துள்ளார்.

**மீண்டும் ஒரு திருப்பம்**

போர் முடிந்த பின்னர் ராஜபக்ஷ அரசாங்கத்திலிருந்து தமிழருக்குக் கிடைத்தவை – இராணுவ அட்டகாசமும் ஆட்கடத்தலும் கொலையும் செய்யும் குண்டராட்டமும், புத்த மத மேலாண்மையும் நிலபறிப்பும் போன்ற இனக்கருவறுக்கும் செயல்களேயன்றி வேறு எதுவும் இல்லை. இத்தகைய அரசாங்கம் திடீரென மனம் மாறி நல்லுணர்வோடு தமிழர் பிரச்சினையைத்



தீர்க்கவும் தீவின் பல்லினங்களுக்கிடையே நல்லிணக்கத்தை பண்படுத்தவும் முயற்சிக்கும் என்ற உல்லாசக்கனவிற்கு தமிழ் அரசியலில் இடமில்லை என்பதை சம்பந்தன் தீர்க்கமாகத் தெளிவுபடுத்தியுள்ளார். இத்தகைய நிலைப்பாடு முடிவின்றித் தொடர்ந்தால் தமிழ் மக்கள் வெளிப்புறச் சுயநிர்ணயத்திற்கு வில்லங்கமாகத் தள்ளப்படுவார்கள் என்பது சம்பந்தனின் வாதம் என்பதை நான் ஏற்கனவே குறிப்பிட்டேன். அதேசமயத்தில் இலங்கை அரசாங்கத்தின் ஈனத்தனம் மாற்றப்பட முடியாதது என்பது அனுபவ ரீதியில் சர்வதேச சமூகத்திற்கு விளங்காத நிலையில் வெளிப்புற சுயநிர்ணயிப்புக்கு வெளியுலகில் ஆதரவு கிடைக்காது என்ற உண்மையைத் தமிழ் அரசியலாளரும் சிவில் சமூகத் தலைவர்களும் புரிந்துகொள்ள வேண்டுமென்றும் சம்பந்தன் வலியுறுத்தியிருக்கிறார்.

பொறுமையே இக்காலகட்டத்தில் தமிழ் அரசியல் இலக்கணமாக விளங்க வேண்டுமென்று சம்பந்தன் மீண்டும் மீண்டும் தனதுரையில் வலியுறுத்தியிருக்கிறார். பொறுத்தார் பூமியாள்வார் என்பது பழமொழி. போரின் பின்னால் பூமி ஆட்சியையல்ல தமது பூமியில் வளமாக வாழுகின்ற தகைமையையும் இழந்து வருகின்ற நிலைக்கு தமிழ் மக்கள் தள்ளப்பட்டுவிட்டனர். போர்க் கால அனுபவங்களின் பாடங்களை மறந்து பொறுமையின்றிச் செயற்பட்டால் இந்திய அரசாங்கத்தினதும் சர்வதேச சமூகத்தினதும் ஆதரவையும் தலையீட்டையும் இழந்துவிடுவோம் என்பதில் ஐயமில்லை. குறிப்பாகக் கூறுவதென்றால் ஒரு தலைப்பட்சமாக வெளிப்புற சுயநிர்ணய உரிமையைக் கோருவதற்கு வெளிநாடெங்கிலும் எதுவித ஆதரவுமில்லை.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் 'பனையாலே விழுந்தவனை மாடேற வரும்போது அந்த மாட்டை விரட்டி அவனுக்கு உதவாமல் எழுந்து நின்று நீயே வீரமாக மாட்டைத் துரத்தடா' என்று கூறுகின்ற புளித்துப்போன தேசிய வாதத்தினால் பயனேதுமில்லை. தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் கருணாநிதியின் தமிழீழ அறைகூவலை வேறு எதுவிதமாகவும் விபரிக்க முடியாதமை வருத்தத்திற்குரிய ஒரு நிலைமையாகும்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் பனையாலே விழுந்தவனை மாடேற வரும்போது அந்த மாட்டை விரட்டி அவனுக்கு உதவாமல் எழுந்து நின்று நீயே வீரமாக மாட்டைத் துரத்தடா என்று கூறுகின்ற புளித்துப்போன தேசிய வாதத்தினால் பயனேதுமில்லை. தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் கருணாநிதியின் தமிழீழ அறைகூவலை வேறு எதுவிதமாகவும் விபரிக்க முடியாதமை வருத்தத்திற்குரிய ஒரு நிலைமையாகும்

நடைமுறையில் பார்த்தால் 1976 வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்கும் 36 ஆண்டுகளுக்குப் பின்னர் 2012 இல் நடைபெற்ற மட்டக்களப்பு தமிழரசுக் கட்சி மகாநாட்டிற்கும் இடையிலுள்ள அரசியல் சூழலமைவுகளின் வேறுபாடுகளை சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். தமிழர் விடுதலைக் கூட்டணியின் வட்டுக்கோட்டைத் தீர்மானம் தனித் தமிழ் ஈழத்தை தமிழ் அரசியலின் ஒரேயொரு குறிக்கோளாக, வெளிப்புறச் சுய நிர்ணயிப்பாகவும் ஒரு தலைப்பட்சமாகவும் வரைந்துரைத்தது. அன்றைய தீர்மானத்தில் இலங்கை அரசாங்கத்திற்கு இடமேதும் இருக்கவில்லை. மட்டக்களப்பு மகாநாட்டு நடப்புகள் இன்றைய காலகட்டத்திற்குப் பொருத்தமான முறையில் தமிழ் அரசியலை திசை திருப்பியுள்ளன.

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தைப் போலன்றி மட்டக்களப்பு மகாநாட்டின் அடிப்படையான உட்புறச் சுயநிர்ணயிப்பை தமிழ் மக்கள் ஒருதலைப்பட்சமாக அடைய முடியாது. இலங்கை அரசாங்கத்தின் ஆதரவும் ஒத்துழைப்பும் இதற்கு வேண்டும். ஆனால், வள்ளுவன் கூறியது போன்று 'ஏவவும் செய்கலான் தான் தேறான் அவ்வுயிர் போஒம் அளவும் ஓர் நோய்' என்று ஒரு நோயாகிவிட்ட ராஜபக்ஷ ஆட்சிக் குழுவின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெறுவது எப்படி. இந்த இரண்டுங் கெட்ட நிலையில் என்ன செய்யலாம் என்பதை மட்டக்களப்பு மாநாட்டு தீர்மானங்கள் நடைமுறையாகக் காட்டுகின்றன.

**மட்டக்களப்புத் தீர்மானங்கள்**

மட்டக்களப்புத் தீர்மானங்களின் சிறப்பான அம்சம் நிறைவேற்றப்பட்ட பத்துத் தீர்மானங்களில் முதல் நான்கும் இன்றைய கட்டத்தில் மக்களுக்கு முக்கியமான நடைமுறைப்படுத்தக்கூடிய கோரிக்கைகளாகும். வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அரச அதிகாரப் பரவலாக்கம் அர்த்தமுள்ள முறையிலும் கூடுதல்பட்சமான முறையிலும் விரைவிலே விஸ்தரிக்கப்பட வேண்டுமென்பது முதலாவது தீர்மானமாகும். உட்புற, வெளிப்புற சுயநிர்ணயிப்பைக் குறிப்பிட்டு, அதனால் ஏற்படக்கூடிய அரசாங்கத்தின விதர்க்கத்திற்கு இடமளியாதவகையில் தீர்மானம் எழுதப்பட்டமை பாராட்டுக்குரியதாகும்.

அடுத்த மூன்று தீர்மானங்களும் புனர்வாழ்வு, பறிக்கப்பட்ட காணிகளை மீண்டும் அவற்றின் சொந்தக்காரர்களுக்கு அளித்தல், இராணுவ ஆதிக்கத்தையும் கெடுபிடிகளையும் நிற்பாட்டுதல், தொடர்ந்தும் நடைபெறுகின்ற ஆட்கள் காணாமல் போகும் சம்பவங்கள், கைதுகளை முற்றாகத் தடுத்து நிறுத்துதல் என்கிற நடைமுறையும் பிரச்சினைகட்கு உடனடியாகத் தீர்வு காண வேண்டுமென்ற கோரிக்கையையும் முன்வைத்துள்ளார்.

இவற்றினை இனியும் தட்டிக் கழிக்காது அரசாங்கம் செயற்படுத்த வேண்டுமென சர்வதேச சமூகம் வலியுறுத்த வேண்டுமென்று மகாநாட்டின் ஏழாவது தீர்மானம் கூறுகிறது. வெளியுலகின் உந்துதல் இன்றி இலங்கை அரசாங்கம் அசையவே மாட்டா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

து என்பது புதிதானதொன்றல்ல. வெளியுலகின் உந்துதல் இவ்வாறாகக் கிடைப்பதற்கு ஏற்ற வகையிலும் இலங்கையை விட்டு புலம்பெயராமல் வாழ்கின்ற தமிழ் மக்களின் சமகாலத் தேவைகளையும் அரசியல் அபிலாசைகளையும் நன்குணர்ந்த வகையிலும் புலம்பெயர்ந்த தமிழ் உலகம் செயற்பட வேண்டுமெனவும் ஆறாவது தீர்மானம் கேட்டு நிற்கிறது.

போர்க்காலத்தில் முறிக்கப்பட்ட 'தமிழ் பேசும் மக்கள்' என்ற கோட்பாட்டைத் திருத்துவிக்கும் முயற்சியையும் முஸ்லிம் மக்களினதும் மலையகத் தமிழ் மக்களினதும் கோரிக்கைகளையும் தேவைகளையும் உட்படுத்துகின்ற முயற்சியையும் சம்பந்தன் தனது தலைமையுரையில் பாராட்டத்தக்க வகையில் ஆரம்பித்து வைத்திருக்கிறார். அத்தோடு நிற்காமல் தாராள மனப்பான்மை, முற்போக்குக் குணங்கள் கொண்ட சிங்கள நண்பர்களையும் சிங்கள வரல்லாத ஏனைய இலங்கை மக்களையும் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஆதரவளிக்க முன்வர வேண்டுமென்றும் சம்பந்தன் வரவேற்றுள்ளார். பன்முகப்படுத்தப்பட்ட இத்தகைய அரசியல் முயற்சிகளை மகாநாட்டின் மற்றைய தீர்மானங்கள் நன்கு பிரதிபலிக்கின்றன.

சிறப்பாக ஐந்தாவது தீர்மானம் இலங்கை முழுவதையும் பீடித்துள்ள பொருளாதாரப் பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டுகின்றது. இந்நிலையில் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் இரண்டுங் கெட்ட தகைமையை இடித்துரைத்து அவர்களுக்குத் தேவையான நிவாரணங்களையும் தொழில் வாய்ப்புகளையும் உருப்படியாக நிறைவேற்ற வேண்டுமென்றும் அத்தீர்மானம் கூறுகின்றது. அரசாங்கத் துறையிலே ஐந்து சதவீதத்திற்கும் குறைந்த

> போர்க் காலத்தில் முறிக்கப்பட்ட 'தமிழ் பேசும் மக்கள்' என்ற கோட்பாட்டைத் திருத்துவிக்கும் முயற்சியையும் முஸ்லிம் மக்களினதும் மலையகத் தமிழ் மக்களினதும் கோரிக்கைகளையும் தேவைகளையும் உட்படுத்துகின்ற முயற்சியையும் சம்பந்தன் தனது தலைமையுரையில் பாராட்டத்தக்க வகையில் ஆரம்பித்து வைத்திருக்கிறார்


தமிழ் மக்கள் பணிபுரிகிறார்கள் என்கின்ற மனமுடைக்கும் உண்மையையும் ஐந்தாவது தீர்மானம் சுட்டிக்காட்டுகின்றது.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினால் என்னதான் செய்ய முடியாததாயினும் போரினால் தாக்குண்டு உற்றார், உறவினரை இழந்து, கண் பார்வை மற்றும் அங்கங்களை இழந்து, காணிகளைப் பறிகொடுத்துப் பரிதவிக்கின்ற பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களுக்கு நீதியும் நிவாரணமும் கேட்கும் பொறுப்பு தமிழ் அரசியலாளரின் தார்மீகப் பொறுப்பாகும். இதனை சர்வதேச விசாரணையின் மூலம் நிறைவேற்ற வேண்டுமென்று ஒன்பதாவது தீர்மானம் கூறுகின்றது. முடிவாக, முன்னுரைத்த நியாயமான ஒன்பது கோரிக்கைகளையும் அரசாங்கம் புறக்கணித்தால் இலங்கைத் தமிழரசுக் கட்சி சமாதான, சாத்வீக முறையில் ஒரு மக்கள் போராட்ட இயக்கத்தை பொருத்தமான வேளையிலும் பொருத்தமான வகையிலும் ஆரம்பிக்கத் தயங்காது என்பதனை தனது 14ஆவது மாநாட்டிலே பிரகடனப்படுத்தலை பத்தாவது தீர்மானம் உள்ளடக்கியுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்டு 63 ஆண்டுகளாகிவிட்டன. ஐந்து ஆண்டுகளுக்கு முன்னதாகவே அக்கட்சி தனது கடைசி அறப்போராட்டத்தை நிகழ்த்தியது. நீண்ட பயணத்தின் பின்னர் தமிழ் மக்கள் அரசியல் பெரு வட்டமொன்றில் தாம் ஆரம்பித்த இடத்திற்கே வந்து சேர்ந்துள்ளனர் என்று மிகைப்படாமல் கூறலாம். இரத்தமயமான இந்த வட்டத்திலிருந்து விடுபட்டு புதிதான நேர் வழியொன்றில் செல்வதற்கான வரைபடமாக (Road map) மட்டக்களப்பு மகாநாடு விளங்க வேண்டும். அதற்காக தமிழ் அரசியலாளரும் சிவில் சமூகத் தலைவர்களும் ஒன்றுபட்டு ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும். சிதறுண்ட தமிழினத்திற்கு அவர்கள் அளிக்கக்கூடிய உதவிகளே ஒற்றுமையை விடப்பெரிதான வேறொரு முயற்சியும் இல்லை.

(ராஜன் பிலிப்ஸ் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் படித்த ஒரு பொறியியலாளராவார். தற்போது கனடாவில் பணியாற்றும் இவர் மாணவ காலத்தில் இருந்தே அரசியலில் ஈடுபட்டவர். பேராதனையில் வெளியிடப்பட்ட 'தமிழ் இளைஞன்' என்ற மாதச் சஞ்சிகையின் ஆசிரியராகவும் பின்னர் யாழ்ப்பாணத்தில் வெளியாகிய ஆங்கில வார இதழான சர்ரர்டே ரிவியூவின் பதிப்புக் குழுவின் உப தலைவராகவும் செயற்பட்டவர். இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின் (MIRJE) ஆரம்பச் செயலாளராகவும் பணிபுரிந்தவர்.)

நேர விரயமோ சிரமமோ இன்றி...
ADVENTURE இல் உங்கள் விளம்பரங்களை பிரசுரிக்க...
எந்தவொரு கொமர்ஷல் வங்கிக்கிளையிலும் கட்டணத்தை செலுத்தி
E-mail ஊடாகவோ அல்லது Fax மூலமாகவோ அனுப்பலாம்
எப்படி பணம் செலுத்துவது?
சரியான தொகையை காசாக மட்டும் கொமர்ஷல் வங்கியின் எந்தவொரு கிளையிலும் செலுத்தலாம்
கணக்குரிமையாளரின் பெயர்:
Express Newspapers (Cey) Ltd.,
கணக்கு இல:, 1100005193,
Ref. Number : Adventure box






எவ்வாறு எமக்கு அனுப்புவது?
உங்கள் விளம்பரத்தை பணம் செலுத்திய வங்கிப்பிரதியுடன் Fax அல்லது E-mail மூலமாக எமக்கு அனுப்பலாம் : advertising@virakesari.lk
Fax : 011 2327827, 011 5322740
உறுதிப்படுத்திக்கொள்வது எவ்வாறு?
தயவு செய்து அழைக்கவும். 011 5322738 - Moshin, Robin

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்



என்.சத்தியமூர்த்தி



# "காணி நிலம் வேண்டும்..."

இராணுவத்தினரால் 'காணி ஆக்கிரமிப்பை' எதிர்த்து தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு தலைமையில் தொடங் கப்பட்டுள்ள மக்கள் போராட்டம் 'இனப் போர்' முடிவடைவதற்கு முன்னரான தசாப்தங்களை நினைவுறுத்துகிறது. அதிலும் குறிப்பாக, போருக்குப் பிந்திய கால கட்டத்தில் முன்னெடுக்கப்படுவதாகக் கருதப்பட்ட அரசியல் பேச்சுவார்த்தைகளை பின்தள்ளிவிட்டு, மனித உரிமை மீறல்கள் பிரச்சினையோடு ஒருங்கிணைந்து அரசுடனான பேச்சுவார்த்தையையும் உறவையும் கூட மீண்டும் பாதிக்குமோ என்ற கவலையையும் எழுப்பியுள்ளது.

காணிப்பிரச்சினை என்பது இன்று, நேற்று துவங்கியது அல்ல. 'சிங்களத் திணிப்பு' மற்றுமுள்ள இனப்பிரச்சினையோடு இணைந்த பிற விவாதங்கள் எல்லாம் துவங்குமுன்னரே காணிப் பிரச்சினை உருவாகிவிட்டது. அதுவும் இலங்கை சுதந்திரமடையும் முன்னரே காணிப்பிரச்சினை துவங்கிவிட்டது. சமகாலத்தில் அரசியல் உரிமைகள் மற்றும் அரசில் பங்களிப்பு ஆகிய பிரச்சினைகளும் பல்வேறு காலகட்டங்களில் தோன்றி வலுப்பெற்றன. ஆனால் அப்போது அரசியல் பிரச்சினை என்பது தமிழ்ச் சமுதாயத்தின் மேல்தட்டு மக்களிடையிலேயே அதிகமாகப் பேசப்பட்டு வந்தது. காணிப் பிரச்சினையோ, சாதாரண மக்களையும் பாதிப்பதாக இருந்தது.

உலகின் எந்தப் பகுதிக்குச் சென்றாலும் மண்ணாலும் பொன்னாலும் பெண்ணாலும் உறவுகள் குலைந்துள்ளன. உரிமைப் போராட்டங்கள் உருவெடுத்துள்ளன. தனி மனிதனும் தனக்கு என்று ஒரு காணி, அதற்கான உரிமை ஆகியவற்றை சட்டரீதியாக மட்டுமல்லாமல் தார்மீக அடிப்படையிலும் அதனைக்கையாண்டு வந்துள்ளான். இலங்கைப் பிரச்சினையில் இதில் மண் குறித்த போராட்டங்கள் மட்டுமே உருவாகிப்பின்னர் அதனுடன் அரசியல் உரிமை, கல்வி மற்றும் வாழ்வாதாரப் பிரச்சினைகள் சேர்ந்து போரில் முடிந்தது. ஏன், கடைசியாக அரங்கேறிய போர்கூட மாவிலாறு என்ற காணி தழுவிய விவசாய நிலங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சும் பிரச்சினையிலேயே தோன்றியது என்று கூட கருத இடமுண்டு.

இலங்கையில் தமிழ்ச் சமுதாயத்தைப் பாதிக்கும் காணிப் பிரச்சினையில் பல்வேறு அலகுகள் உள்ளன. இராணுவத்தின் பயன்பாட்டில் இருக்கும் காணிகளை உரிமையாளர்களுக்குத் திருப்பிக் கொடுக்கும் செயன்முறை எதிர்பார்க்கப்பட்ட வேகத்தில் நடைபெறவில்லை என்ற எண்ணம் பல்வேறு தரப்பினரிடையேயும் உள்ளது. தமிழர் மாநிலங்கள் உட்பட்ட நாட்டின் பாதுகாப்புக் காரணங்கள் கருதி, பல்வேறு பகுதிகளிலும் இராணுவ முகாம்கள் அமைப்பது என்பது ஒரு விடயம். அதில் பணிபுரிவோருக்கான வாழ்விடங்கள் உட்பட காணிசார்ந்த அடிப்படை வசதிகள் என்பது மற்றொரு விடயம். ஆனால் இவை இரண்டிற்கும் அப்பால் சென்று, போர்க்காலத்தில் தமிழர்களின் வாழ்விடங்களையும் விவசாய நிலங்களையும் இராணுவப் பயன்பாட்டிற்காகவோ அல்லது பிற பாதுகாப்புக் காரணங்களுக்காகவோ அரசு கையகப்படுத்தி இருந்தது.

அத்தகைய காணிகளை, போர் முடிந்த தற்போதைய காலகட்டத்தில் அதிவேகமாக தங்களது அத்தியாவசியத் தேவைகளுக்கு வேண்டிய காணிகளை மட்டும் வைத்துக்கொண்டு, பிறவற்றை அவற்றின் உரிமையாளர்களிடம் சேர்க்க வேண்டும் என்பதே தற்போதைய கோரிக்கை. அல்லாது, தற்போது பிற காணிகளில் விவசாயப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் வேளையில் தங்களது காணிகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'உயர் பாதுகாப்பு வலயம்' என்ற வளையத்திற்குள் இட்டு வைத்திருப்பதை அவற்றின் உரிமையாளர்களாலும் பயன்பாட்டாளர்களாலும் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இதில் அரசின் மெத்தனப் போக்கு அல்லது கடும்போக்கு, சாதாரண வாழ்வாதாரப் பிரச்சினைக்கு இனப் பிரச்சினையின் சாயத்தை பூசி விட்டுள்ளது.

உண்மையிலேயே இதில் பேரினவாதம் இல்லையென்றால், அந்தக் காணிகளை அரசு அவற்றின் உண்மையான உரிமையாளர்களிடம் சேர்ப்பித்துவிட்டால் அது பிரச்சினைக்கு முடிவு மட்டுமல்ல அதுவே அரசுக்கு அரசியல் ரீதியாகவும் பாதுகாப்பு ரீதியாகவும் தமிழ் மக்களில் ஒரு பகுதியினரின் ஆதரவைப் பெற்றுத் தரும். ஆனால் அரசு தொடர்ந்து இதனைச் செய்யத் தவறியதன் மூலம் தொடர்ந்து காணிப்பிரச்சினை உயிரோட்டத்துடன் இருக்க வழிசெய்து வருகிறது. அதுவே பின்னர் இனப்பிரச்சினையின் உயிர்ப்பித்த அலகாகவும் வடிவெடுப்பதற்கு வழிவகையும் செய்து வருகிறது.

காணிப்பிரச்சினையின் மற்றொரு அலகு, போர் முடிந்த பின்னர் இராணுவம் மூலம் அவர்களது குடும்பங்களுக்கும் பிற சிங்கள மக்களுக்குமாகக் கொடுக்கப்படும் தமிழ் மக்களின் நிலம் மற்றும் தமிழ் மாகாணங்களில் உள்ள அரசு உரிமையான காணி. போர் நடந்த காலகட்டத்தில் நாட்டின் பிற பாகங்களில் உள்ள அரசு உரிமையான காணிகள் நிலம் இல்லாதோருக்குப் பிரித்து வழங்கப்பட்டிருந்தது. இன்று தமிழர் பகுதிகளில் உள்ள சுமார் இரண்டு இலட்சம் ஏக்கர் காணிகள் மட்டுமே அவ்வாறு ஏழை மக்களுக்கு வழங்கப்படாதவை. தற்போது போர் முடிந்துள்ள காலகட்டத்தில்,

**இலங்கையில் இடம்பெற்று வந்த ஏறத்தாழ 30 ஆண்டுகால யுத்தம் 2009 ஆம் ஆண்டு மே மாதம் உத்தியோகபூர்வமாக முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. யாழ்ப்பாண மாவட்டத்தில் 26,340 கணவனை இழந்த பெண்கள் உட்பட வடமாகாணத்தில் சுமார் 40,000 கணவனை இழந்த பெண்கள் வாழ்ந்து வருவதாக பெண்கள் மற்றும் அபிவிருத்திக்கான நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.**

அந்தக்காணிகள் மீது அனைவரது கண்ணும் விழாதிருந்திருந்தால் தான் ஆச்சரியப்பட்டிருக்க வேண்டும். இதனை வைத்து வாக்கு வங்கி அரசியல் செய்யப்படுவது ஒருபுறம். இத்தகைய அரசியலில், சிங்கள அரசியல்வாதிகள் என்று அல்லாது, தமிழ் பேசும் அரசியல் வாதிகளும் ஈடுபடத்தான் செய்வார்கள். இதில் கட்சிச்சார்பு என்பனவெல்லாம், ஆட்சியில் இல்லாத தமிழ் அரசியல்வாதிகள், ஆட்சியில் பங்குபெறும் வரை தான்.

ஆனால் அதற்கு அப்பாற்பட்டு, பேரினவாத அடிப்படையில் மட்டுமே தமிழ் மாநிலங்களில் உள்ள அரசு காணிகள் பகிர்ந்தளிக்கப்படும் போது தான் பிரச்சினை தோன்றுகின்றது. இந்தப் பிரச்சினை அடிப்படையில் அரசில் அங்கம் வகிக்காத தமிழ்க் கட்சிகள் குறிப்பாக அதனையே அரசியலாக்கி, தங்களை ஆதரிக்கும் மக்களுக்கு மட்டுமே அரசு காணிகள் பிரித்தளிக்கப்படவில்லை என்பதையும் பேரினவாதத்தின் ஒரு பகுதியாக சித்திரிக்கிறார்களோ என்ற கேள்வியும் அவ்வப்போது எழுகிறது. மாறாக அரசியல் ரீதியாகத் அவர்கள் அரசில் பங்கு வகிக்கும் தமிழ்க் கட்சிகளின் ஆதரவாளர்களான தமிழ் மக்களுக்கு அரசு காணி கிடைக்கப் பெறுமேயானால் அதனை எதிர்ப்பதையும் ஒரு கொள்கையாகக் கொண்டிருப்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

இவ்வாறு செய்யத்தவறி, உரிமை சார்ந்த தங்களது அரசியல் பிரச்சினைகளையும் தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளையும் பிரித்து அவர்கள் கையாளத்தவறியதால்த் தானோ என்னவோ, இனப் பிரச்சினையின் ஒவ்வொரு அலகும் முடிவே இல்லாமல், முன்னேற்றமும் காணாமல் பூதாகாரமாக உருவெடுத்து வந்துள்ளன. சரியோ, தவறோ, சராசரி அரசியல்வாதிகளைப் போல் வாக்கு வங்கி அரசியல் மூலம் அரசில் பங்குபெறாமல் அதனைத் தங்களது கொள்கை அடித்தளமாக வைத்துக்கொண்டு அரசுசாரா அரசியலை அவர்கள் தொடர்ந்து செய்து வருவது ஒருபுறம் வரவேற்கத்தக்கது என்றாலும் அதனால் மட்டும் பிரச்சினைகள் தீர்ந்தபாடில்லை.

மூன்றாவது, குறிப்பாக வடக்கு மாகாண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த்தில் வழமையிலிருந்து வந்த 'தேச வழமைச் சட்டம்.' இந்தச் சட்டத்தின் மூலம் தமிழ் மக்களின் நிலம் தனது அண்டை காணி உரிமையாளர்களுக்குத் தான் முதன்முதலில் விற்பனைக்கு அளிக்கப்பட வேண்டும். அவர்கள் வேண்டாம் என்று கூறும்பட்சத்தில் மட்டுமே அந்தக் காணி பிறருக்கு விற்பனை செய்யப்படலாம். அதாவது, தமிழர்களின் நிலம் தமிழர்களிடமே பெரும்பாலும் இருக்கும்.

இதன் மூலம் தமிழர் பகுதிகளில் ஏழ்மை அல்லது அதிக ஆசை போன்ற காரணங்களால் தமிழ் மக்கள் தங்களது காணிகளைப்பிற சமூகத்தினருக்கு உரிமை மாற்றிவிடாமல் தடுக்க முடிந்தது. நாடு முழுவதுமே விவசாயம் சார்ந்த சமூகம் நிலவி வந்த காலகட்டத்தில் காணி உரிமை கிடைக்கப் பெறாமையால் பிற சமூகத்தினர் தமிழர் பகுதிகளில் குடியேறவோ அதன் மூலம் அங்குள்ள மக்கள் தொகை விகிதாசாரத்தில் மாற்றங்களை ஏற்படுத்தவோ முயலமாட்டார்கள் என்ற தத்துவத்தை உள்ளடக்கிய பிரச்சினை இது. இன்றோ, தேசவழமைச் சட்டமே செல்லாது என்று வாதிடப்படும் காலம்.

இந்தப் பின்னணியில் இன்றைய பிரச்சினைக்கு வடிகால், முதலில் உயர் மட்ட பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் போர்ப் பிரதேசங்களில் இராணுவம் கையகப்படுத்தியுள்ள காணி மற்றும் கட்டிடங்களை உரியவர்களிடம் சேர்ப்பிப்பது தான். அவ்வப்போது அரசு இத்தகைய நிலங்களில் இருந்து இராணுவம் வெளியேறியுள்ளதாக அறிவித்தாலும் அது போர்க்கால அடிப்படையில் நிகழ வேண்டும் என்ற பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் எதிர்பார்ப்பும் அர்த்தமுள்ளதே. அதுபோன்றே தமிழர் பகுதிகளில் உள்ள அரசு காணிகள் குறித்த பிரச்சினை குறித்து அரசு தமிழ் மக்களோடு அமர்ந்து ஆராய்ந்து நல்ல முடிவை எடுக்க வேண்டும். இது குறித்து இடதுசாரிக் கட்சிகள் சில நல்ல கருத்துகளை முன் வைத்துள்ளன.

அதுபோன்றே தமிழ் மக்களும் அவர்களது அரசியல் தலைமைகளும் தங்கள் கருத்துகளுக்கு வடிவம் கொடுக்க வேண்டும். அதில் போர்க்காலத்தில் கட்டாயப்படுத்தப்பட்டோர் தன்னிச்சையாகவோ போர்ப்பகுதிகளில் இருந்து வெளியேறிய முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களின் காணிகள் குறித்தும் அவர்கள் முடிவெடுக்க வேண்டும். குரல் எழுப்ப வேண்டும். அவ்வாறு இல்லாமல், இலங்கைத் தமிழ் இன மக்களின் பிரச்சினைகள் குறித்து மட்டுமே அவர்கள் குரல் கொடுத்து வந்துள்ளார்கள். அதே சமயம் முஸ்லிம் மற்றும் சிங்கள அரசியல் கட்சிகள் அவர்களது மக்களின் காணி உள்ளிட்ட உரிமைகள் குறித்துக் கேள்வி எழுப்பும் போது அதனை இனவாதமாகவோ அல்லது வாக்குரிமை அரசியலாகவோ கொச்சைப்படுத்துவது தவறானது மட்டுமல்ல,பிரச்சினைக்கு முடிவு காணும் முகமாக முன்னெடுக்கப்படும் முயற்சி என்றும் அதனைக் கொள்ள முடியும்.

காணி விவகாரத்தில் இவை தவிர தமிழர் அரசியல் தலைமை பேசாமல் விட்டுப்போன இரண்டு பிரச்சினைகள் உள்ளன. ஒன்று, நாட்டில், அதிலும் குறிப்பாகத் தமிழர் பகுதிகளில் வெகுவாகக் குறைந்து விட்டதாகக் கருதப்படும் இலங்கைத் தமிழ் மக்களின் விகிதாசாரம். மற்றொன்று அதனைத் தெரிந்து கொண்டே வெளிநாடுகளில் தொடர்ந்து வாழ்ந்து வரும் புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் , காணி குறித்த நிலைப்பாடு. இதில் முதல் பிரச்சினைக்குப் போரில் நேர்ந்த உயிர்ச்சேதம், அதனைக் காரணமாக வைத்து அரங்கேறிய புலம்பெயர்தல் மற்றும் கல்வி அறிவு மற்றும் கலாசாரக் காரணங்களால் குறைந்து வரும் தமிழ் மக்களின் பிறப்பு விகிதம் ஆகியவை காரணம்.




புலம்பெயர்ந்த தமிழர்களோ, அவர்களின் வாரிசுகளோ தங்களது நாட்டிற்குத் திரும்பி வந்து தங்களுக்கு உரிமையான காணிகளை அடுத்தடுத்த தலைமுறைகளுக்கும் பயன்படுத்தப் போகிறார்கள் என்று கருத இடமில்லை. ஒன்று, அந்தக் காணிகள் உரிமையாளர்கள் இல்லாமல் பிறருடைய கைகளில் சென்றடையலாம். அந்தப் பிறர் தமிழர்களாகத் தான் இருக்க வேண்டும் என்று எண்ணிவிட முடியாது. பெரும்பாலும் இது போன்ற விடயங்கள் முஷ்டி மோதல் மூலம் தான் முடிவு செய்யப்பட்டு வந்துள்ளன. அப்போது அரசு ஆதரவு என்பது அசுர பலமாக அமையும்.

இவ்வாறு ஆகாதிருக்க வேண்டுமானால் காணி உரிமையாளர்கள் தங்களது உரிமைகளைத் தங்களது காலத்திலேயே விற்பனை செய்தோ அல்லது தங்களுக்கு வேண்டியவர்களுக்கு பரிசளித்தோ, ஆவன செய்ய வேண்டும். நில விற்பனை என்றால் அவர்கள் தேச வழமைச் சட்டத்தின் கீழ், தங்களது காணிகளை அண்டை அயலாருக்கே விற்பனை செய்ய விரும்புவார்கள் என்று கருத இடமில்லை. இது உணர்வு குறித்த விடயமல்ல. விலை மற்றும் பணம் குறித்த விவகாரம். இதுவும் உலக வழக்கம் தான். அப்போது தமிழர் காணிகள் பிறர் கைகளுக்கு மாறுவது தடுக்க முடியாத நிதர்சனமாக மாறிவிடும்.

இந்தப் பின்னணியில் தமிழர் காணி குறித்து கவலைப்படும் தமிழ் அரசியல்வாதிகளும் அறிவுஜீவிகளும் அடுத்து வரவிருக்கும் பிரச்சினைகளையும் சேர்த்துச் சிந்தித்து அதற்கான தங்களுடைய கருத்துகளுக்கும் அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கும் வடிவம் கொடுக்கவேண்டும். அல்லாது, கடந்த காலத்தை மட்டுமே நினைவில் நிறுத்தி, நிகழ்காலப் பிரச்சினைகளையும் அவற்றுக்குத் தமிழ்ச் சமுதாயத்தின் பங்களிப்பை உள்வாங்கிக் கொள்ளாமல் வெறுமனே எதிர்மறைப் போராட்டங்களை மட்டுமே நடத்துவது எதிர்காலத்திற்கும் பயன்படாது. இது தான் அனுபவம் தந்த படிப்பினையும் கூட.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக வாழ்வியல்



# யாழ்நகரில் ஆட்டோ ஓட்டும் அணங்குகள்

துஷியந்தினி
கனகசபாபதிப்பிள்ளை


**பெண்கள் முச்சக்கர வண்டிகளைச் செலுத்துவது தொடர்பில் யாழ்ப்பாணச் சமூகத்தில் பாரிய எதிர்ப்புகள் எதுவும் கிளம்பவில்லை. மரபு ரீதியற்ற ஓர் வருமான வழியைப் பெண்கள் தெரிவு செய்து கொண்டமை பாரிய பிரச்சினையாக அமையவில்லை**



சமூகத்தில் அதிகளவான பெண்கள் குடும்பத் தலைமைப் பொறுப்பை ஏற்று வருகின்றனர். எம்மில் பலர் இது தொடர்பில் குறித்த பெண்களுக்கு உரிய மரியாதை அளிக்காத போதிலும், நாளுக்கு நாள் பெண்கள் குடும்பத் தலைமைப் பொறுப்பை ஏற்கும் சந்தர்ப்பங்கள் அதிகரித்துள்ளன. பெண்கள் ஆண்களுக்கு நிகராக கடின உழைப்பை வெளிப்படுத்துகின்றனர். எனினும், அநேக சந்தர்ப்பங்களில் ஆண்களைக்காட்டிலும் பெண்களுக்குக் குறைந்தளவு ஊதியமே வழங்கப்படுகின்றது. பெண்கள் என்ற காரணத்தினால் இவ்வாறு குறைந்த ஊதியம் வழங்கப்படுகின்றது. இலங்கையின் 21.3 மில்லியன் மொத்த சனத்தொகையில் 50.8 வீதமானவர்கள் பெண்களாகும்.

இலங்கையில் மொத்தமாக 5 மில்லியன் வீட்டு அலகுகள் காணப்படுவதாக 2009-2010ஆம் ஆண்டுக்கான வீட்டு அலகு வருமான மற்றும் செலவுக் கணிப்பீட்டுப் புள்ளி விபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதில் 1.1 மில்லியன் வீட்டு அலகுகளில் அதாவது 23 வீதமான வீட்டு அலகுகளில் குடும்பத் தலைமைப் பொறுப்பைப் பெண்கள் வகித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெரும்பான்மையான பெண் குடும்பத் தலைவிகள் 40 முதல் 59 வயதுப் பிரிவைச் சேர்ந்தவர்களாகும். குடும்பத் தலைமைப் பொறுப்பை வகிக்கும் ஐம்பது சத வீதமான பெண்கள் கணவனை இழந்தவர்கள் எனவும், 4.5 சதவீதமானவர்கள் திருமணம் முடிக்காதவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் இடம்பெற்று வந்த ஏறத்தாழ 30 ஆண்டுகால யுத்தம் 2009 ஆம் ஆண்டு மே மாதம் உத்தியோகபூர்வமாக முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. யாழ்ப்பாண மாவட்டத்தில் 26,340 கணவனை இழந்த பெண்கள் உட்பட வட மாகாணத்தில் சுமார் 40,000 கணவனை இழந்த பெண்கள் வாழ்ந்து வருவதாக பெண்கள் மற்றும் அபிவிருத்திக்கான நிறுவனம் சுட்டிக் காட்டியுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் யுத்தத்தினால் கணவனை இழந்த 42,565 பெண்கள் வாழ்ந்து வருவதாகச் சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு தெரிவித்துள்ளது. யுத்தம் இடம்பெற்ற காலத்தில் கொல்லப்பட்ட அல்லது காணாமல் போன நபர்களின் மனைவியர் பற்றிய புள்ளி விபரங்களே இங்கு தரப்பட்டுள்ளன.

'நான் மிக இளவயதிலேயே திருமண பந்தத்தில் இணைந்து கொண்டேன். எனது கணவர் 2009ஆம் ஆண்டு மே மாதம் நிறைவடைந்த இறுதிக் கட்ட யுத்தத்தில் கொல்லப்பட்டார். எனக்கு மூன்று பிள்ளைகள் இருக்கின்றார்கள். தமிழ்ச் சமூகத்தில் நிலவி வரும் மரபுகள் மற்றும் சமூக நம்பிக்கைகளின் காரணமாக என்னால் மறுமணம் செய்து கொள்ள முடியவில்லை. எனது பிள்ளைகளின் தேவைகளைத் தனித்து நின்று பூர்த்தி செய்வதில் பாரிய நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றேன். நாள்தோறும் நான் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றேன். கணவனை இழந்த காரணத்தினால் சமூகத்தில் எதிர்நோக்க வேண்டிய பல்வேறு சவால்களுக்கு நான் முகம் கொடுக்கின்றேன். கணவனை இழந்த காரணத்தினால் சில ஒடுக்குமுறைகள் என் மீது பிரயோகிக்கப்படுகின்றன. எனக்கு எந்த விதமான உதவியும் கிடையாது'' என்கிறார் வடக்கு யுத்தத்தின் போது கணவனை இழந்த இளம் பெண் ஒருவர்.

யுத்தத்தில் கணவனை இழந்த பெண்களுக்குப் போதியளவு வாழ்வாதார ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட வேண் டியது மிகவும் இன்றியமையாதது. பெண்கள் கல்வி மற்றும் ஆய்வு நிறுவனம் யாழ்ப்பாணத்தில் உள்ள 10 பெண்களுக்கு அண்மையில் முச்சக்கர வண்டிகளை வழங்கியது. இவ்வாறானதொரு முயற்சி யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்டது இதுவே முதற்தடவையாகும். யாழ்ப்பாணம், உடுவில், நல்லூர் ஆகிய பிரதேச சபைகளைச் சேர்ந்த இவர்களுக்கு முச்சக்கர வண்டிகளைச் செலுத்துவது, முதலுதவி போன்றவற்றில் 5 மாதகாலப் பயிற்சி வழங்கப்பட்டது. இவர்கள் பல குடும்ப மற்றும் சமூகச் சவால்களுக்கு மத்தியில் பாரதி கண்ட புதுமைப் பெண்ணாகத் திகழ முன்வந்தனர் என்பது வரவேற்கத்தக்கது.

இந்த நிகழ்ச்சி இரண்டு பகுதிகளைக் கொண்டது. முதல் பகுதியில் தலைமைத்துவப் பண்புகளை வளர்த்தல், ஆளுமை விருத்தி, மகளிர் உரிமை, பால்நிலைச் சமத்துவம் மற்றும் அபிவிருத்தி போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டன.

இரண்டாம் பகுதியில் முச்சக்கர வண்டி செலுத்துவது தொடர்பான பயிற்சி வழங்கப்பட்டது. முச்சக்கர வண்டிகளைக் கொள்வனவு செய்வதில் சிரமம் ஏற்பட்டமை இந்தத்திட்டத்தை முன்னெடுப்பதில் எதிர்நோக்கிய பிரதான தடையாகக் குறிப்பிட முடியும். யாழ்ப்பாணத்தில் இந்தத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி செயலணியிடமிருந்து அனுமதி கிடைக்கவில்லை. முதலில் யாழ்ப்பாணத்தில் இந்தத் திட்டத்தை முன்னெடுப்பதில் சிக்கல்களை எதிர்நோக்கினோம். எனினும், கருணையான அமைச்சர் ஒருவர் ஜனாதிபதி செயலணியிடம் பேசி, அவர்களை இணங்கச் செய்ததன் மூலம் இந்தத் திட்டத்திற்கான அனுமதியினைப் பெற்றுக் கொண்டோம்.

இந்தியத் தூதரகம் ஏற்கனவே வாக்குறுதி அளித்ததனைப் போன்று உரிய நேரத்தில் முச்சக்கர வண்டிகளை வழங்கவில்லை. முச்சக்கர வண்டிகளை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டது. இதுவே நாம் எதிர்நோக்கிய இரண்டாவது தடையாகும். இலங்கை அரசாங்கம் உரிய ஒத்துழைப்பு வழங்காமையினால் இருதரப்பு இணக்கப்பாட்டின் அடிப்படையில் முச்சக்கர வண்டிகளை வழங்கும் செயன்முறையில் தாமதம் ஏற்பட்டது.

இந்தியத் தூதரகம் புதுடில்லி மத்திய அரசாங்கத்தின் ஊடாகத் தொடர்பு கொண்டே நடவடிக்கைகளை முன்னெடுக்க நேரிட்டது. இதன் காரணமாக எண்ணத்தக்களவு கால தாமதம் ஏற்பட்டது.

> **யுத்தத்தில் கணவனை இழந்த பெண்களுக்குப் போதியளவு வாழ்வாதார ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட வேண்டியது மிகவும் இன்றியமையாதது. பெண்கள் கல்வி மற்றும் ஆய்வு நிறுவனம் யாழ்ப்பாணத்தில் உள்ள 10 பெண்களுக்கு அண்மையில் முச்சக்கர வண்டிகளை வழங்கியது. இவ்வாறானதொரு முயற்சி யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்டது இதுவே முதற் தடவையாகும்**

சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்ட மகளிர் நீண்ட காலம் காத்திருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. கிட்டத்தட்ட நான்கு மாதங்களுக்கு மேலாக கையில் அனுமதிப்பத்திரத்துடன் இந்தப் பெண்கள் காத்திருந்தனர். எதிர்பார்ப்பை இழந்த பெண்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கினர். முச்சக்கர வண்டிகளைக் கொள்வனவு செய்ய எப்படியாவது பணத்தைத் திரட்டிக்கொள்ள முடியும் என அவர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்த நான் யாழ்ப்பாணத்திற்கு விசேட பயணமொன்றை மேற்கொள்ள வேண்டியேற்பட்டது.

அவர்கள் பூரணமாக நம்பிக்கையிழந்த நிலையில் காணப்பட்டனர். தனிப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரீதியில் நான் எனது இலங்கை மற்றும் வெளிநாடுகளில் வாழும் நண்பர்கள், உறவினர்களிடம் பணத்தைத் திரட்டி ஒருவாறு முச்சக்கர வண்டிகளைக் கொள்வனவு செய்தேன் எனப் பெண்கள் கல்வி மற்றும் ஆய்வு நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரான கலாநிதி செல்வி திருச்சந்திரன் தெரிவித்தார்.

'பெண்கள் முச்சக்கர வண்டிகளைச் செலுத்துவதில் எந்தவிதமான பிழையும் கிடையாது' - மேரி பெட்ரிசியர் புஷ்பராஜ்.

'யுத்தத்தில் எனது கணவனை இழந்தேன், எனது பிள்ளைகளைப் பராமரிக்கும் நோக்கில் முச்சக்கர வண்டி செலுத்தும் தொழிலைத் தெரிவு செய்தேன்' - கவிதா சதீஸ்வரன்.

'நான் திருமணமாகாத பெண், எந்தவொரு சவாலையும் எதிர்நோக்கத் தயார்' - தர்மினி விஸ்வநாதன்.

'எனது கணவர் வன்னி யுத்தத்தில் வலது காலை இழந்தார். எனது குடும்பத்தைப் பராமரிக்கும் நோக்கில் நான் முச்சக்கர வண்டிச் சாரதித் தொழிலைச் செய்யத் தீர்மானித்தேன்' - இந்திரவதனி ரமேஸ்வரன்.

சமூகத்தின் பல்வேறு சாவல்களையும் நெருக்கடிகளையும் தாண்டி இவர்கள் யாழ்ப்பாணத்தில் முச்சக்கர வண்டிகளைச் செலுத்தும் பணிகளில் ஈடுபட்டு வருவது பாராட்டிற்குரியது.

கடுமையான வெப்பத்தையும் பொருட்படுத்தாது யாழ்ப்பாண வீதிகளில் பெண்கள் முச்சக்கர வண்டிகளைச் செலுத்துவதனை மக்கள் விசித்திரமாகவே நோக்குகின்றனர். இவர்கள் பருத்தித்துறை, காரைநகர், அல்லைப்பிட்டி, சாவகச்சேரி போன்ற தூர இடங்களுக்கான பிரயாணங்களையும் மேற்கொண்டுள்ளனர்.

'யாழ்ப்பாணத்தில் முச்சக்கர வண்டிகளைச் செலுத்தும் பெண்களுக்கு நாம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்' - மதன்.

இதேவேளை 'பொறுமையாக வாகனத்தை நிறுத்தித் திருப்ப முடியாதா?' எனத் தவறாக வாகனத்தைச் செலுத்திய லொறிச் சாரதியொருவர் பெண் முச்சக்கர வண்டிச் சாரதி ஒருவரைப் பார்த்துக் கோபத்துடன் கடிந்து கொண்டதையும் பெண் முச்சக்கர வண்டிச் சாரதியுடன் பிரயாணம் செய்யும் போது அவதானிக்க முடிந்தது.

'ஆச்சரியமாகப் பெண்கள் முச்சக்கர வண்டிகளைச் செலுத்துவது தொடர்பில் யாழ்ப்பாணச் சமூகத்தில் பாரிய எதிர்ப்புகள் எதுவும் கிளம்பவில்லை. மரபு ரீதியற்ற ஓர் வருமான வழியைப் பெண்கள் தெரிவு செய்து கொண்டமை பாரிய பிரச்சினையாக அமையவில்லை. பெண் முச்சக்கர வண்டிச் சாரதிகள் பாரியளவில் எமக்கு ஒத்துழைப்பு



வழங்கினார்கள். மிகுந்த எதிர்பார்ப்பு, சுயமுயற்சியுடன் பெண் சாரதிகள் தமது பணிகளை மேற்கொண்டனர். இந்தத் தொழிலை மேற்கொள்வதன் மூலம் சுய கௌரவத்துடன் பொருளாதார ரீதியில் தமது வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்ள முடியும் என்பதனைப் பூரணமாகப் புரிந்து கொண்டனர். முச்சக்கர வண்டி செலுத்துவது தொடர்பான சாரதிப் பயிற்சிக்கு முன்னதாக வழங்கப்பட்ட ஆளுமை விருத்தி குறித்த பயிற்சியில் அவர்களுக்குக் கிட்டிய நன்மைகளைக் கண்கூடாக நோக்க முடிந்தது. பயிற்சியில் கற்றுக்கொண்ட விடயங்களை வாழ்க்கை அனுபவமாக்கிக் கொள்ளக்கூடிய ஆற்றல் அவர்களிடம் காணப்பட்டது.

பெண்கள் வீதிகளில் முச்சக்கரவண்டிகளைச் செலுத்தும் போது சமூகத்திலிருந்து பல்வேறு விமர்சனங்களும் சவால்களும் விடுக்கப்படும் என்பதனை நாம் நன்கு அறிந்திருந்தோம். இந்தச் சவால்களை வெற்றி கொள்வதற்குத் தேவையான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் அவர்களுக்கு வழங்கினோம். எவ்வாறான அணுகுமுறைகள் மற்றும் யுக்திகளைக் கையாள வேண்டும் என்பது பற்றித் தெளிவுபடுத்தினோம். மகளிர் அபிவிருத்தி அதிகாரிகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் குறித்த பெண் முச்சக்கர வண்டிச் சாரதிகளை நாம் தொடர்புபடுத்தி, அவர்களின் மனோ வலிமையை அதிகரிக்க வழியமைத்தோம். இதற்கு மேலதிகமாக ஏதேனும் பிரச்சினைகள் எதிர்நோக்கப்பட்டால் அது தொடர்பான ஆலோசனைகளை வழங்க எமது யாழ்ப்பாண இணைப்பாளரை ஆயத்தப்படுத்தியுள்ளோம்' என கலாநிதி செல்வி திருச்சந்திரன் மேலும் தெரிவித்தார்.

இலங்கையின் ஆடைக் கைத்தொழிற்சாலைகளில் சுமார் 4,50,000 பேர் பணியாற்றுகின்றனர். நாட்டின் மொத்த ஏற்றுமதியில் 52 சதவீதம் தைத்த ஆடை ஏற்றுமதியின் மூலம் பெற்றுக் கொள்ளப்படுகின்றது.

மரபு ரீதியான பெருந்தோட்டக் கைத்தொழில்கள் மற்றும் மரபு ரீதியற்ற ஆடைக் கைத்தொழில் போன்றவற்றில் பெண்கள் பாரியளவு பங்களிப்பினை வழங்கி வருவதாகப் பெண்கள் தொடர்பான ஆய்வு நிறுவனத்தினால் 2001 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட நிழல் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**எதிர்காலத் திட்டங்கள்**

இந்தியத் தூதரகத்தின் உதவியின் மூலம் கிடைக்கப்பெற்ற முச்சக்கர வண்டிகள் மிகவும் காலம் தாழ்த்தியே கிடைக்கப்பெற்றன. இந்த முச்சக்கர வண்டிகள் கிழக்கு மாகாணத்தில் யுத்தத்தின் போது கணவனை இழந்த பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அம்பாறை மாவட்டத்தில் ஏழு முச்சக்கர வண்டிகளும், மட்டக்களப்பு மாவட்டத்தில் எட்டு முச்சக்கர வண்டிகளும் பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனத்தின் மேற்பார்வையுடன் வழங்கப்பட்டன.

பல்வேறு சவால்கள் மற்றும் நெருக்கடிகளுக்கு மத்தியில் இந்தப் பெண்கள் தமது குடும்பங்களை மிளிரச் செய்வதில் முனைப்புக் காட்டுகின்றனர். தமது குடும்பங்களை மகிழ்ச்சிப்படுத்தவும், பணம் சம்பாதிக்கவும் பெண்கள் எல்லையில்லாத் துன்பங்களையும், கடுமையான தியாகங்களையும் செய்கின்றனர். பெண்கள் போதியளவு ஓய்வு இன்றி பல்வேறு கருமங்களைத் தொடர்ச்சியாக ஆற்றுகின்றனர். பெண்கள் தொடர்ச்சியாக நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் காத்திரமான பங்களிப்பினை வழங்கி வருகின்றனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்ச்சியான நெருக்கடிக்குள் மூலதனம்

சர்வதேச விவகாரம்



முதலாளித்துவ சந்தை என்பது தனியே பொருளாதாரப் புலம் மட்டுமல்ல, அது ஒரு அரசியல் புலமும்தான்




பேராசிரியர்
என்.சண்முகரத்தினம்

2009ஆம் ஆண்டில் Michael Moore, Capitalism a love story (முதலாளித்துவம் ஒரு காதல் கதை) எனும் பெயரில் ஒரு திரைப்படத்தைத் தயாரித்து வெளியிட்டார். அவரது மற்றைய தயாரிப்புகள் போலவே இந்தப் படமும் அவருக்கே உரிய விமர்சனப் பார்வையுடன் கிண்டலும், நகைச்சுவையும், துன்பியலும் கலந்த ஒரு சிறந்த வெளியீடாக இருந்தது. சமகாலத்தில் (2006-2009) இடம் பெற்ற நிதிரீதியான நெருக்கடியின் விளைவுகளால் அமெரிக்க நடுத்தர, தொழிலாள வர்க்கங்களைச்சார்ந்த கோடிக் கணக்கானோர் தமது வீடுகளை இழந்து, தொழிலிழந்து, அடிப்படை வாழ்வசதி களையிழந்து படும் அவலங்களையும் முதலாளித்துவ வர்க்கத்தினதும் அமெரிக்க ஆட்சியாளர்களினதும் மக்கள் விரோத ஜனநாயக விரோதப் போக்கினையும் உண்மையான சம்பவங்களையும் வைத்து மிக நுட்பமாகப் படம் பிடித்துள்ளார்.

அமெரிக்க அரசியலையும், அரசாங்கத்தையும் பெரு மூலதன நிறுவனங்கள் எப்படிக்கட்டியாளுகின்றன என்பதையும் தோலுரித்துக் காட்டுகிறது இந்தப்படம். Moore தரும் முக்கியமான செய்திகளில் ஒன்று என்னவெனில், இறுதி ஆய்வில் முதலாளித்துவம் ஒரு ஜனநாயக விரோத அமைப்பு. மூலதனத்தின் நலன்கள் பாதிக்கப்படும் போது மக்களின் நலன்களும் உரிமைகளும் குறிப்பாக உழைப்புச்சக்தியை விற்று ஊதியம் பெறும் வர்க்கத்தின் நலன்களும் ஜனநாயக உரிமைகளும் பல வழிகளில் நசுக்கப்படுவது அனுபவ ரீதியான உண்மை எனலாம். போராட்டங்களுக்கூடாக நவீன ஜனநாயகம் பரவுவதற்குக் களம் அமைக்க உதவும் முதலாளித்துவம் அதை ஒதுக்கிவைக்கும் சக்திகளையும் கொண்டுள்ளது. இதுவும் அந்த அமைப்பின் முரண்பாடுகளில் ஒன்று எனலாம்.சர்வாதிகாரம், பாசிசம், அதிகாரவர்க்கவாதம் போன்றவையும் ஏகாதிபத்தியப் போர்களும் மூலதனத்தின் வரலாற்றுப் போக்கின் அம்சங்கள் என்பது பலரும் அறிந்ததே.





பொருளாதார வளர்ச்சியும் நெருக்கடிகளும் முதலாளித்துவத்தின் விருத்திப் போக்கின் தன்மைசார் வெளிப்பாடுகள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




என்பதும் இவை மூலதனக் குவியலின் இயக்கப்பாட்டிற்குரிய சுழற்சிப்போக்கின் (CyClical) விளைவுகள் என்பதும் 19ஆம் நூற்றாண்டிலிருந்தே மாக்சின் ஆய்வுக்கூடாக நன்கு அறியப்பட்ட விடயமாகும். ஆயினும் சமீப தசாப்தங்களில் மூலதனத்தின் நெருக்கடிகள் முன்னெப்போதையும் விட அடிக்கடி ஏற்படுவது வழமை ஆகிவிட்டது. 1973 இலிருந்து நூற்றுக்கணக்கான நிதி ரீதியான நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன எனும் தகவலைச் சுட்டிக்காட்டும் பேராசிரியர் David Harvey (2010) அதற்கு முன்னர் உதாரணத்துக்கு இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பின் 1945 - 1973 கால கட்டத்தில் இத்தகைய நெருக்கடிகள் மிகவும் குறைவாகவே இருந்தன என்னும் தகவலையும் ஒப்பீட்டிற்காகத் தெரியத் தருகிறார், இன்றைய காலகட்டத்தில் மூலதனம் அனுபவிக்கும் தொடர் நெருக்கடிகளும் அவற்றினால் மக்கள் படும் அல்லல்களும் முதலாளித்துவத்தின் குறிப்பிட்ட உலகமயமாக்கலின் தன்மைகளையும் காட்டுகின்றன.

மூலதனத்தின் தொடர் நெருக்கடிகள் பற்றிய விமர்சன ரீதியான விளக்கங்களைச் சில ஆய்வாளர்கள் முன்வைத்துள்ளனர். இந்த ஆய்வுகள் நவதாராளவாதத்தின் மேலாட்சி, நிதி மூலதனத்தின் அபரிமிதமான எழுச்சியும் நகர்ச்சியும், அதற்கும் உற்பத்தி மூலதனத்திற்கும் இடையிலான தொடர்பாடு, ஊகத்திற்கூடாக இலாபம் தேடும் சூதாட்டப்போக்கு, உழைப்பின் உற்பத்தித் திறனின் வளர்ச்சி தொடரும் அதேவேளை, தொழிலாளர்களின் மெய் ஊதியம் (Real wage) பல்லாண்டுகளாக ஸ்தம்பித்திருந்தமை போன்றவற்றுக்கு நியாயமான முக்கியத்துவம் கொடுக்கும் அதேவேளை, இவற்றுடன் இணைந்த அரசியல் மற்றும் சூழல்சார் அம்சங்களையும் ஆராய்ந்துள்ளன.

**நவதாராளவாதம்**

இப்பொழுது மேலாட்சி செலுத்தும் நவதாராளவாதத்தின் ஆரம்ப நிகழ்ச்சி மிகவும் பலாத்காரமான ஜனநாயக ஒழிப்பு நடவடிக்கையாக இருந்தது. அது தான் 1973ஆம் ஆண்டு ஒன்பதாம் மாதம் சிலியில் பினோச்செற் (Pinochet) தலைமையில் அமெரிக்காவின் CIA மற்றும் அந்நாட்டின் பெரும் மூலதன நிறுவனங்களின் உதவியுடன் இடம்பெற்ற இராணுவச்சதியாகும். இடதுசாரி அரசியல்வாதி சல்வடோர் அலண்டே (Salvador Allende)1970இல் ஜனாதிபதியாகத் தெரியப்பட்டு ஒரு இடதுசாரி அரசாங்கத்தை அமைத்தார். அவருடைய அரசியலும் பொருளாதாரக் கொள்கைகளும் அமெரிக்காவின் ஏகாதிபத்திய நலன்களுக்கும் உள்நாட்டு உயர்வர்க்கத்தினருக்கும் சாதகமாக அமையவில்லை. அத்துடன் அயண்டே கியூபாவுடன் நெருங்கிய உறவைக் கொண்டிருந்தார். சிலியில் இராணுவச்சதி வெற்றி பெற்று பினெச்செற்றின் சர்வாதிகார ஆட்சி நிறுவப்பட்டதும் சிக்காக்கோ பல்கலைக்கழகத்தின் நவதாராளவாதிகளின் தூய போட்டிச் சந்தைப் பொருளாதாரக் கொள்கையின் அமுலாக்கல் ஆரம்பமாகியது. அதன்பின் சிலியில் நடைபெற்றது வரலாறு என்பதைப் பலர் அறிவர்.

சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் பெறும் அடுத்த நிகழ்ச்சி 1978இல் (DengXiaopeng) டெங்சியா ஒபெங்கின் தலைமையில் சீனாவில் இடம்பெறுகிறது. டெங்கும் அவரது கட்சிக்குழுவினரும் சீனாவுக்கே உரிய முறையில் அந்த நாட்டின் பொருளாதார தாராளமயமாக்கலை ஆரம்பித்தனர். சீன அரசின் முனைப்பான பங்குடன் சீனாவின் பொருளாதாரம் துரிதமாக முதலாளித்துவப்பாதையில் முன்னேறியது. ஆனால் சீனா நவதாராளவாதத்தின் சிற்பியோ அல்லது தலைமைச் சக்தியோ ஆகவில்லை. சீனாவின் கொள்கை சிக்காக்கோ பல்கலைக்கழகம் வகுத்த நவதாராளவாதமல்ல.

உலக ரீதியில் மேலாட்சி செலுத்தும் நவதாராளவாதம் பிரித்தானியாவில் பிரதமராக வெற்றி பெற்ற மார்கரட் தச்சரின் (1979) வருகையுடனும் அமெரிக்காவில் ஜனாதிபதியான றொனால்ட் றேகன் (Ronald Reagan) (1980) வருகையுடனுமே பலமிக்க கருத்தியல் திட்டமாக உருப்பெறுகிறது. இங்கு மேலாட்சி எனும் பதத்தை கிராம்சியின் (Gramsci) Hegem-

**தட்சர், றேகன் ஆகியோரின் பார்வையில் 1970களிலிருந்து மேற்கத்திய பொருளாதாரங்களையும் உலகப் பொருளாதாரத்தையும் பாதித்துவரும் நெருக்கடிகளுக்கான மாற்றுவழி அதுவரை இருந்து வரும் கட்டுப்பாடுகளிலிருந்து சந்தைப்பொறிமுறையை விடுவிப்பதிலேயே தங்கியுள்ளது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ony எனும் கோட்பாட்டின் அர்த்தத்திலேயே நான் பயன்படுத்துகிறேன். இதன்படி மேலாட்சி என்பது கருத்தியல் ரீதியில், அறிவு ரீதியில் மற்றும் ஒழுக்கமுறை கலாசாரம் போன்றவற்றுக்கு ஊடாகப் பரந்த செல்வாக்கினைப் பெற்று அதிகாரத்தை நிலைநிறுத்தும் திட்டமாகும். இந்தத்திட்டத்தில் அதிகாரத்திற்கு உதவும் பலாத்கார இயந்திரம் பின்னணியிலேயே நிறுத்தப்படுகிறது. செல்வந்த மேற்கத்திய முதலாளித்துவ நாடுகளிலும் வளர்முக நாடுகளிலும் இந்த மேலாட்சி த்திட்டம் பலவழிகளுக்கூடாக நடைமுறைப் படுத்துகிறது.

தட்சர், றேகன் ஆகியோரின் பார்வையில் 1970களிலிருந்து மேற்கத்திய பொருளாதாரங்களையும் உலகப்பொருளாதாரத்தையும் பாதித்து வரும் நெருக்கடிகளுக்கான மாற்று வழி அதுவரை இருந்து வரும் கட்டுப்பாடுகளிலிருந்து சந்தைப்பொறிமுறையை விடுவிப்பதிலேயே தங்கியுள்ளது. சமூகப்பாதுகாப்பு, பூரண வேலைவாய்ப்பு போன்ற கெய்னீசியக் (Keynesian) கொள்கைகளை அகற்றி சந்தைப்புலத்திலே தனிமனிதர்கள் தமது நலன்களை அடையும் சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்பதே அவர்களின் கொள்கையாகியது. சுருங்கச் சொல்வதாயின் பலமான தனியுரிமை உடைமைகள், சுய போட்டிச்சந்தை, சுதந்திர வர்த்தகம் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு நிறுவன ரீதியான சட்டகத்தினுள் தனிநபரின் முயற்சி ஆளுகையும் செயற்திறனும் விடுவிக்கப்படுவதன் மூலமே மனித நன்னிலையை மிக நன்றாக முன்னேற்ற முடியும் என்பதே நவதாராளவாதத்தின் தாரக மந்திரம். ஆயினும் இந்தச் சூத்திர மயமாக்கப்பட்ட கோட்பாட்டின் கொள்கையாக்கலும் நடைமுறைகளும் இடத்துக்கு இடம், காலத்துக்குக் காலம் வேறுபடுகின்றன. எல்லா நாடுகளும் இந்தக் கொள்கையைப் பூரணமாக ஏற்றுக் கொண்டன எனச்சொல்ல முடியாது. ஆயினும் இதன் செல்வாக்கு உலக ரீதியானது எனலாம். பிரேசில்,சீனா, இந்தியா போன்ற நாடுகள் தமக்கே உரிய வழிகளில் உலக மயமாக்கலில் பங்குபற்றுகின்றன. ஆயினும் இவற்றின் தேசியப் பொருளாதாரங்கள் உலக ரீதியான நெருக்கடிகளிலிருந்து முற்றாக ஒதுங்கியிருக்க முடியாது. நவதாராளவாதத்தின் உலக ரீதியான மேலாட்சி பூரணமானதல்ல - அதன் மிருதுவான அதிகாரம் (Soft Power) செல்லுபடியாகாத சந்தர்ப்பங்களில் வல்லரசுகளின் வலிய அதிகாரம் (Hard Power) பயன்படுத்தப்படலாம்.

எது எப்படியானாலும் நவதாராளமயமாக்கல் நிதிமூலதனத்தின் அபரிமிதமான எழுச்சிக்கு வழிவகுத்தது என்பது முக்கியமான உண்மையாகும். 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்தே நிதி மூலதனம் உற்பத்தி மூலதனத்தைக் கீழ்ப்படுத்தும் போக்கு ஆரம்பமாகியது. இந்தப் போக்கு 20ஆம் நூற்றாண்டில் துரிதமடைந்தது. ஆயினும் இந்தப் போக்குகளுக்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. நவதாராளவாதம் இந்தக் கட்டுப்பாடுகளை நீக்கி நிதிமயமாக்கலுக்குப் பூரண சுதந்திரத்தை வழங்கியது.

செல்வந்த நாடுகளில் குறிப்பாக இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பின் மேற்கு ஐரோப்பாவில் நடைமுறைக்கு வந்த சமூக நலக்கொள்கைகள் மற்றும் சொத்து வருமானம் போன்றவற்றின் மீதான வரிகள் சில உற்பத்தித் துறைகளுக்கு பாதுகாப்புகள் போன்றவை மூலதனத்தின் குவியலையும் தனிமனித சுயமுயற்சியையும் பாதிக்கின்றன எனும் அடிப்படையில் அவை எல்லாவற்றையும் அகற்றி மூலதனத்தை அரச கட்டுப்பாடுகளிலிருந்து முற்றாக விடுவிக்கும் திட்டம் அமுலாக்கப்பட்டது. அதேவேளை இந்தக் கொள்கை தொழிலாளர்களின் தொழிற்சங்க செயற்பாடுகளை நசுக்கி அவர்களின் மெய் ஊதியத்தையும் வளரவிடாது செய்ய வழிவகுத்தது. றேகன் காலத்திலிருந்து அமெரிக்கத் தொழிலாளர்களின் மற்றும் நடுத்தர ஊதிய உழைப்பாளர்களின் மெய் ஊதியம் ஸ்தம்பித்த நிலையிலேயே இருந்தது. அதேவேளை, அவர்களின் உற்பத்தித்திறன் வளர்ந்தது. இது சுரண்டல் வீதத்தை அதிகரித்து உபரிப் பெறுமதியைப் பெருக்க உதவியது. இதன் விளைவு சமூக அசமத்துவமும் பிரச்சினைகளும் வளர்ந்தது மட்டுமன்று காலப்போக்கில் மூலதனத்தின் விரிவாக்கப்பட்ட மீள் உற்பத்திக்கும் பிரச்சினைகளை ஏற்படுத்தியது. இது உலக ரீதியான தாக்கங்களை ஏற்படுத்தியது.

**ஒரு புறம் பயன்படுத்தப்படாத உற்பத்திச்சாலைகளும் உற்பத்திக் கருவிகளும் மறுபுறம் ஒரு வேலையற்றோர் கூட்டம். முதலாளித்துவத்தின் நீண்ட வரலாற்றில் இந்தக் காட்சி இடம் பெறுவது இதுதான் முதற்தடவையல்ல. இதுதான் கடைசி தடவையுமல்ல. இந்தக் காட்சி மூலதனத்தின் நெருக்கடியின் தத்ரூபமான வெளிப்பாடு**

### அமெரிக்காவில் நடந்தது என்ன?

2009ஆம் ஆண்டின் மத்திய கோடை காலத்தில் அமெரிக்காவின் (USA) மூலதனச்சாதனங்களில் மூன்றில் ஒரு பகுதி பயன்படுத்தப்படாத நிலையிலிருந்த அதேவேளை, (அந்த நாட்டின்) தொழிற்படையின் 17 வீதத்தினர் வேலையற்றோ அல்லது நிர்ப்பந்தத்தால் பகுதிநேர வேலையாட்களாகவோ ஊக்கங்கெடுக்கப்பட்ட வேலையாட்களாகவோ இருந்தனர். இதைவிட பகுத்தறிவற்ற நிலை எதுவாக இருக்க முடியும் - David Harvey 2010 (The Enigma of Capital and the Crises of Capitalism) ஒரு புறம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தப்படாத உற்பத்திச்சாலைகளும் உற்பத்திக் கருவிகளும் மறுபுறம் ஒரு வேலையற்றோர் கூட்டம். முத லாளித்துவத் தின் நீண்ட வரலாற்றில் இந்தக் காட்சி இடம் பெறுவது இதுதான் முதற்தடவையல்ல. இதுதான் கடைசித் தடவையுமல்ல. இந்தக் காட்சி மூலதனத்தின் நெருக்கடியின் தத்ரூபமான வெளிப்பாடு.

2006-2009 காலத்தில் அமெரிக்காவில் தோன்றிய நெருக்கடி ஒரு தொற்றுநோய் போல் உலகமயமானது. 2006க்குமுன் சர்வதேச நிதி மூலதனம் - குறிப்பாக கிழக்காசிய மற்றும் எண்ணெய்ச் செல்வந்த நாடுகள் மேற்கத்திய நாடுகளிலிருந்து அமெரிக்காவிற்குள் இலாபம் தேடி நுழைந்தன. அங்கு துரிதமாக ஊதி வந்த வீட்டுச்சந்தையிலும் கடன் சந்தையிலும் பலவிதமான முதலீடுகள் பெருகின. ஆனால் பருத்து வந்த இந்தச் சந்தைகளோ விரைவில் வெடிக்கப்போகும் குமிழிகள் என்பதை முதலீட்டாளர்கள் கணக்கிலெடுக்கவில்லை.

இந்த நெருக்கடி பற்றிய வர்க்க ரீதியான ஆய்வுகள் சிலவெளிவந்துள்ளன. குறிப்பாக, Resnick. Wolff, Harvey போன்றோரின் வெளியீடுகளைக் குறிப்பிடலாம். இத்தகைய ஆய்வு களின் உதவியுடனும் வேறுசில கட்டு ரைகளிலிருந்து பெறக்கூடிய அடிப்படைத் தகவல்களையும் வைத்து ஒரு சுருக்கமான விளக்கத்தைத் தர முற்படுகிறேன்.

1970கள் வரை அமெரிக்க உழைப் பாளர்களின் மெய்ஊதியம் உற்பத்தித் திறனின் வளர்ச்சிக்கமைய ஓரளவு வளர்ந்து வந்தது. 1970களில் மெய் ஊதியத்தின் வளர்ச்சி ஸ்தம்பிதம் அடைந்தது. முதலாளித்துவ நிறுவனங் களின் முகாமையாளர்கள் தமது வரு வாயையும் பங்குதாரர்களின் வருமான த்தையும் அதிகரித்த அதேவேளை, தொழிலாளர்களின் அதிகரித்துவரும் ஊதிய உயர்வுக்கோரிக்கைகளை மதிக்கவில்லை. மேற்கு ஐரோப்பிய, ஜப்பானிய முதலீட்டாளர்களின் போட்டி க்கு முகம் கொடுக்கும் நோக்கில் புதிய தொழில்நுட்பங்களில் முதலீடு செய்ய முற்பட்டனர். அதேவேளை, அப்போதைய அரசாங்கம் விதித்த கம்பனிவரி, உயர் வருமானம் பெறும் செல்வந்தர் மீதான வரிகள் போன்றவற்றையும் அமெரிக்க முதலாளி வர்க்கத்தினர் எதிர்த்தனர்.

இந்தக் கட்டத்திலேதான் றேகன் ஜனாதி பதியானார். முதலாளிவர்க்கத்தின் விருப்பத் திற்கமைந்த நவதாராளக்கொள்கை அமுலு க்கு வந்தது. மூலதனத்தின் இலாபத்தைக் குறைக்கும் வரிகள் அகற்றப்பட்டன. தொழிலாளர்களின் மெய் ஊதிய வளர்ச்சி மீது மேலும் தடைகள் போடப்பட்டன. தற்காலிகமயமாக்கல் போன்ற வழிகளால் தொழிலாளர்களின் தொழிற்சங்கப்பலம் உடைக்கப்பட்டது. றேகனின் கொள்கை கள் மூலதனக்குவியல் பெருக உதவின. அதேவேளை சமூக ஏற்றத்தாழ்வுகளை மேலும் மோசமாக்கின.

மெய் ஊதியத்தின் வளர்ச்சி நின்றுவிட் டதால் தொழிலாளர்கள் பல பிரச்சி னைகளுக்குள்ளானார்கள். அவர்களின் நுகர்வுத் தேவைகள் வளர்ந்தன. பிள்ளைகளின் கல்விச் செலவுகள், மற்றைய தேவைகள் அவர்களைப் படிப்படியாக கடனாளிகளாக்கின. அவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட வேலையைச் செய்வது போன்ற வழிகளையும் பயன்படுத்தினர். பொருளாதாரப் பிரச்சினைகள் குடும்ப உறவுகளையும் பாதிக்கத்தொடங்கின. வீட் டுக்கடன் வளர்ந்து கொண்டே சென்றது. கடன் பெறுவதற்கு அவர்களிடம் இருந்த ஒரே சொத்து வீடுதான். அதை அடமானம் வைத்தே பலர் கடன் பெற்றனர். அதே வேளை பலர் வீடு வாங்கிய கடனையும் திருப்பிக்கட்ட வேண்டிய நிலையில் இருந்தனர். இதே காலகட்டத்தில் வீடு வாங்குவதற்கான கடனைப் பெறுவதை வங்கிகள் சுலபமாக்கின. கடனைத்திருப்பிக் கட்ட வல்லமை குறைந்தவர்களுக்கும் கடன் பெறும் வாய்ப்புகள் இருந்தன. இதற்கான



**அமெரிக்க அரசிற்கு சீனா பெருந்தொகையான கடனை வழங்கியுள்ளது. பெருங்கடனைக் கொடுத்தவர் அதைப் பெற்றவரை விட மனக்கலக்கமுறுவது இயல்பானதே. ஆகவே அமெரிக்க பொருளாதாரத்தை மட்டுமல்ல ஐரோப்பிய பொருளாதாரங்களையும் முதலாளித்துவ நெருக்கடிகளிலிருந்து காப்பாற்ற சீனா முன்னிற்பது சீனாவின் தேசிய நலன்கள் உலக முதலாளித்துவத்தின் ஆரோக்கியத்துடன் இணைந்திருப்பதையே காட்டுகிறது**

காரணத்தை விளக்குமுன் அமெரிக்காவின் வீட்டுக் குடும்பங்களின் மொத்தக் கடன்கள் பற்றிய புள்ளிகளைக் குறிப்பிடுதல் அவசியம். 1975இல் அமெரிக்காவின் மொத்த வீட்டுக்கடன் 734 பில்லியன் டொலர்களாயிருந்தது. இது 2006இல் 12.82 trillion (ட்ரில்லியன்) களாக ஏறிவிட்டது. 1990இல் ஒரு அமெரிக்க வீட்டுக்குடும்பத்தின் சராசரிக்கடன் அதன் செலவிடக்கூடிய வருமானத்தின் 77 வீதமாக இருந்தது. இது 2007இல் 127 வீதமாக உயர்ந்து விட்டது.

மறுபுறம் மூலதன உடைமையாளர்களின் உபரி அதாவது இலாபம் பெருகியது. கிடை த்த இலாபத்தை மீண்டும் முதலீடு செய்து இலாபம் பெறும் வாய்ப்புகளை அவர்கள் தேடினர். உபரியை மீண்டும் முதலீடு செய்யாவிட்டால் மூலதனம் மேலும் குவியமாட்டாது. ஆகவே இவர்களின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபரியின் ஒரு பகுதி வங்கிகளுக்கூடாக கடன் வழங்கவென ஒதுக்கப்பட்டது. இன்னொரு பகுதி குறுகிய காலத்தில் அதிக இலாபம் தரக்கூடிய பங்குச்சந்தை, மற்றையவை ஊகத்துறைகளில் முதலீடு செய்யப்பட்டன. பிறிதொரு பகுதியை முதலாளிகளின் நிறுவனங்களின் முகாமையாளர்களின் பங்குதாரர்களின் வருமானங்களை அதிகரிக்கப் பயன்பட்டது.

இங்கு கவனத்தில் எடுக்கவேண்டிய ஒன்று கடன் வழங்கும் முறைகளில் ஏற்பட்ட சில மாற்றங்களாகும். முன்னர் கடன் பெற விரும்பும் ஒருவர் நேரடியாக வங்கியுடன் தொடர்பு கொள்வதே வழக்கம். ஆனால் இந்தக்காலகட்டத்தில் வங்கிகளுக்கும் கடன் பெறுவோருக்கும் இடையே தரகு நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன. இவற்றின் ஊடாகவே கடன்கள் செலுத்தப்பட்டன. இந்த தரகுத்துறை ஒரு பெரிய இலாபத்துறையாக உருவெடுத்தது. வீடு வாங்கும் கடன் வசதிகள் இலகுவாக்கப்பட்டதால் குறைந்த வருமானம் பெறுவோரும் வீட்டுக்கடனைப் பெறமுடிந்தது. அவர்கள் வாங்கும் வீடுகளே அடைமானங்களாயின. இந்த அடைமானங்களை வைத்து அடைமான ஆவணச்சந்தையையும் வங்கிகளும் நிதி நிறுவனங்களும் உருவாக்கின. இவையெல்லாம் நிதி மூலதனத்தின் வளர்ச்சியையும் ஊகத்துறையின் வளர்ச்சியையும் காட்டின.

இந்தப் போக்கின் விளைவாக வீட்டுச் சந்தையும் கடன்சந்தையும் விரைவாக வளர்ந்தன. எல்லா வீடுகளின் சந்தைப் பெறுமதியும் ஏறிக்கொண்டே இருந்தது. வெளிநாட்டு முதலீட்டாளர்களும் இந்தத் துறைகளில் பங்குபற்றினர். மெய்யூதியம் வளராத போதும் வீட்டின் பெறுமதி உயர்ந்து சென்றதால் தொழிலாளர் குடும்பங்களும் தமது வீடுகளை மீண்டும் அடைமானம் வைத்துக் கடன் பெறும் வாய்ப்புக் கிடைத்தது. தரகு நிறுவனங்கள் இவர்களைக் கடன் பெறும் வகையில் ஊக்கினர். கடன் பெறுவது முன்னெப்போதையையும் விட சுலபமாகியது. ஆனால் கடனின் வட்டி அதிகரிக்கப்பட்டது. கடன்களின் வட்டி மாற்றப்படலாம் என்ற நிபந்தனை ஏற்கனவே விதிக்கப்பட்டிருந்ததால் வட்டி வீதம் உயர்த்தப்படுவதை கடன் பெற்றோரால் எதிர்க்க முடியவில்லை.

ஆனால் நிதிமூலதனத்தின் இந்தக் களியாட்டம் நீண்ட காலம் தொடரவில்லை. கடன்பட்ட பலரால் கடனைத் திருப்பிக் கட்ட முடியவில்லை.கடனைப் பெறுவது சுலபமாக இருந்தது. ஆனால் ஏறிச் செல்லும் செலவுகள் வருமானத்தை விட மிஞ்சியதால் கடனைத் திருப்பிக்கட்ட முடியவில்லை.இந்த நிலையில் இவர்கள் வீடுகளை இழந்தனர். இப்படிச் சுவீகரிக்கப்பட்ட வீடுகள் மீண்டும் வீட்டுச் சந்தைக்கு வந்தன. சந்தையில் வீடுகளின் நிரம்பல் அதிகரித்தது. ஆனால், கேள்வி வளரவில்லை. வீடுகளின் சந்தைப் பெறுமதி துரிதமாகச் சரியத் தொடங்கியது. ஒருபுறம் வீடுகளை இழந்த குடும்பங்களின் தொகை அதிகரித்தது. 2009இல் 30 இலட்சத்திற்கும் மேலான வீடுகள் சுவீகரிக்கப்பட்டன. மறுபுறம் வீட்டுச்சந்தையிலும் கடன் சந்தையிலும் செய்த முதலீடுகள் நட்டத்திற்குள்ளாகும் போக்கும் அதிகரித்தது. இது உலக பங்குச் சந்தையையும் பாதித்தது. ஒரு தொடர்ச் சங்கிலியாக நிதி மூலதனத்தின் நெருக்கடிகள் வளர்ந்தன. நுகர்வோரின் கேள்வி வளராமல் நிரம்பல் கூடுவது கட்டுப்பாடற்ற சந்தைப் பொருளாதாரத்தில் இடம்பெறுவது சாத்தியமே. வீட்டுச்சந்தை மாத்திரமல்ல வீடுகளை இழந்தோர் மற்றும் வருமானம் குறைந்தோரின் வாங்கும் சக்தியின் வீழ்ச்சியின் விளைவால் மற்றைய சந்தைகளும் பாதிப்படைந்தன. இதன் தொடர்ச்சி பெரும் உற்பத்தித்துறைகளையும் உதாரணமாக மோட்டார் வாகன உற்பத்தியைப் பாதித்தது. பெருந்தொகையானோர் வேலையிழந்தனர்.



தரகு நிறுவனங்கள் குறுகிய கால இலாபத்திற்காகப் போதிய வருமானம் இல்லாதோருக்கும் கடன் வழங்கும் வசதியைக் கொடுத்தது தவறெனும் விமர்சனங்கள் எழுந்தன. வங்கிகளும் காப்புறுதி நிறுவனங்களும் நொடிந்து வீழ்ந்தன. அடைமான ஆவணங்களில் முதலீடு செய்தவெளிநாட்டு முதலீட்டாளர்களில் வங்கிகளும் பலவிதமான நிதியங்களும் அடங்கும்.இந்தவிளையாட்டில்பங்குபற்றிய எல்லோரும் சொத்துகளின் விலைகள் தொடர்ந்து ஏறிக்கொண்டேயிருக்கும் என ஏன் நம்பினார்கள். அதனால் அவர்கள் எல்லோருமே அவ்வளவு விபரம் தெரியாதவர்களா என எண்ணத்தோன்றும். ஆனால் அதுதான் இந்த விளையாட்டின் தன்மை. நடைபெற்றதோ ஊக ரீதியான எதிர்பார்ப்பின் எதிர்மறையாக இருந்தது. ட்ரில்லியன் கணக்கில் நிதி மூலதனம் கணப்பொழுதில் மாயமானது. நெருக்கடி மோசமான பின்னர்தான் விளக்கங்களைத் தேடுகின்றனர்.

சர்வதேச மட்டத்தில் நிதிமூலதனத்தின் பெரும் ஆதிக்கத்திற்குள்ளான பொருளாதாரங்கள் பெரிதும் பாதிப்படைந்தன. உதாரணமாக ஐஸ்லாந்தின் வங்கிகள் தமது பணத்தை ஊகத்துறையில் முதலீடு செய்ததன் விளைவாக முழுக்க முழுக்க வங்குரோத்து நிலை அடைந்தன. ஐஸ்லாந்தின் பொருளாதாரம் சுலபமாக உச்சத்துக்குச் சென்ற வேகத்தையும் விடத் துரிதமாக வீழ்ச்சியடைந்தது. அமெரிக்காவில் வீழ்ச்சியடைந்த பல நிறுவனங்கள் நவதாராளவாதத்தின் விதிகளுக்கு மாறாக தேசிய மயமாக்கப்பட்டன. மேலும் அதே விதிகளுக்கு மாறாகத் தோல்வியடைந்த வங்கிகளுக்கு பில்லியன் கணக்கில் டொலர்களாக வழங்கி அரசு மீள் உயிர்கொடுத்தது. ஆனால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள், பொதுமக்கள் அத்தகைய பாதுகாப்பைப் பெறவில்லை. அரசு விதிகளை மாற்றி முதலாளித்துவ அமைப்பைப் பேணிக் காத்தது. அமைப்பு ரீதியான நெருக்கடி வரும் போது அமைப்பினை பாதுகாப்பதே அரசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ன் தலையாயக் கடமை என்பதை இது மீண்டும் படிப்பினையாகத் தந்துள்ளது.

## நெருக்கடிகளுக்கு ஊடாக வாழும் முதலாளித்துவம்

நெருக்கடிகள் முதலாளித்துவத்தின் மரணத்தின் அறிவிப்புகள் அல்ல என்பதே இதுவரையிலான வரலாற்று அனுபவம். 1990களில் ஏற்பட்ட ஆசிய நிதி நெருக்கடிகளிலிருந்து முதலாளித்துவத்தின் முகாமையாளர்கள் எவரும் எதையும் படிக்கவில்லை எனக்கருதுவோர் உண்டு. அதுமட்டுமல்ல ஆசிய நிதி நெருக்கடியையோ இந்தக் கட்டுரையின் பொருளான சமீபத்திய நெருக்கடியையோ உலகப் புகழ்பெற்ற பிரதான நீரோட்ட பொருளியலாளர்களால் முன்கூட்டியே அறிந்து கொள்ள முடியவில்லை என்பதும் பலராலும் விமர்சிக்கப்படும் விடயமாகும். இந்த விமர்சனம் நியாயமானதே. ஆனால் முதலாளித்துவத்தின் நெருக்கடிகளின் கையாள்கை அரசியல் ரீதியானது. தேசிய, சர்வதேச அதிகார உறவுகளைப் பற்றியது. அடிப்படையில் வர்க்க நலன் சார்ந்தது என்பது ஒரு முக்கிய வரலாற்றுப்பாடமாகும்.

ஒடிந்து விழும் அமெரிக்க, ஐரோப்பிய மூலதன நிறுவனங்களைப் தூக்கிவிட அந்தந்த அரசுகள் மட்டுமல்ல நெருக்கடிகளுக்குள்ளான முதலாளித்துவ அரசுகளுக்கு உதவ இன்றைய எழுந்து வரும் வல்லரசான சீனாவும் முன்வந்தது. கடந்த நிதி நெருக்கடிகளால் பெரிதும் சீனா பாதிக்கப்படவில்லை. இதற்குக் காரணம் சீனா பின்பற்றிய பொருளாதாரக் கொள்கை. அதேவேளை, அமெரிக்காவில் இடம்பெற்றுப் பரந்த நெருக்கடிகளில் இருந்து சீனா முற்றாகத் தப்பிக் கொள்ளவும் முடியாது. வட அமெரிக்காவும் மேற்கு ஐரோப்பாவும் சீனாவின் உயர் பெறுமதி ஏற்றுமதிகளின் முக்கிய சந்தைகளாகும். அத்துடன் அமெரிக்க அரசிற்கு சீனா பெருந்தொகையான கடனை வழங்கியுள்ளது. பெருங்கடனைக் கொடுத்தவர் அதைப் பெற்றவரை விட மனக்கலக்கமுறுவது இயல்பானதே. ஆகவே அமெரிக்க பொருளாதாரத்தை மட்டுமல்ல ஐரோப்பிய பொருளாதாரங்களையும் முதலாளித்துவ நெருக்கடிகளிலிருந்து காப்பாற்ற சீனா முன்னிற்பது சீனாவின் தேசிய நலன்கள் உலக முதலாளித்துவத்தின் ஆரோக்கியத்துடன் இணைந்திருப்பதையே காட்டுகிறது.

முதலாளித்துவ சந்தை என்பது தனியே ஒரு பொருளாதாரப் புலம் மட்டுமல்ல அது ஒரு அரசியல் புலமும்தான். அங்கு வெறுமனே தெரிவுச் சுதந்திரம் மட்டுமல்ல வற்புறுத்தல் மிகு மேலாதிக்கம் மேலாட்சியுடன் கூடவே நிலவுகின்றது. மேற்கத்தய அனுபவத்தைப் பார்க்கும் போது முதலாளித்துவம் அனுமதிக்கும் மட்டுப்படுத்தப்பட்ட ஜனநாயகத்தை அதன் குறுகிய எல்லைகளுக்கு அப்பால் செல்ல விடுவது என்பது அந்த அமைப்பிற்கே மாபெரும் சவாலாகும். இந்த மாற்றப்போக்குத் தானாக வரப்போவதில்லை. இதற்கு மூலதனத்தின் அதிகார உறவுகள் போட்டுள்ள தடையை உணர்வுபூர்வமான அரசியல் கூட்டுச் செயற்பாடுகளுக்கூடாகவே அகற்ற முடியும்.

அத்தகைய போராட்டமே மாற்று சமுதாயத்திற்கான ஆரம்பம். இந்த வழியிலேயே எதிர்காலம் பற்றிய, சோசலிசம் பற்றிய மீள்கற்பிதம் இடம் பெற வேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய அரசியல்

# இந்திய ஜனாதிபதித் தேர்தல்:

## அடுத்த மக்களவைத் தேர்தலை மனதிற் கொண்டு அரசியல் கட்சிகள் வியூகம்

என்.எஸ்.எம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து வரும் வாரங்களில், அண்டை நாடான இந்தியாவில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறப்போகிறது. இலங்கையைப் போன்று 'நிர்வாக' அல்லது 'நிறைவேற்று' ஜனாதிபதி அமைப்பு இந்தியாவில் கிடையாது. அங்கு, ஜனாதிபதிப் பதவி, அரசியல் சட்டத்தின் அடிப்படையில் அரசிற்கு அறிவுரை கூறவும் அரசின் தவறுகளைச் சுட்டிக்காட்டும் கடைசி கட்ட அமைப்பாக மட்டுமே உருவகப்படுத்தப் பட்டுள்ளது. இதன் காரணமாகவே அந்தப் பதவியை 'பல்லில்லாத பாம்பு' என்று கொச்சைப் படுத்துவோரும் உளர்.


இந்தியாவைப் பொறுத்தவரையில், அரசின் அதிகாரம் முழுவதுமே பிரதமர் தலைமையிலான அமைச்சரவையின் கையில்தான் உள்ளன. வெளியே, பிரதமரே அதிக அதிகாரம் கொண்டுள்ளவர் என்று தோன்றினாலும், அமைச்சரவை முடிவுகள் அனைத்துமே ஒருமித்த கருத்து அடிப்படையிலேயே எடுக்கப்பட்டு வருகின்றது. இதன் காரணமாக பிரதமர் உட்பட எந்த ஒரு அமைச்சரும் தன்னிச்சையாகச் செயல்படுவது இல்லை, முடியாது. ஆனால், அரசியல் தர்மம் கருதி, எந்த ஒரு அமைச்சரும் அமைச்சரவை கூடி விவாதித்த விடயங்களை, அதில் ஒவ்வொரு அமைச்சரும் எடுத்த நிலைப்பாடுகளையும் வெளியே கூறிக் கொண்டு திரிவதில்லை.

இதன் காரணமாகவும், அரசியல்சட்டம் அமைச்சர்களை பதவியில் அமர்த்தவும் நீக்கவும் பிரதமருக்கு அளித்துள்ள அதிகாரம் காரணமாகவும் அவரே பூதாகாரமாக உருவகப்படுத்தப்படுகிறார். ஆனால், அமைச்சரவைக்கும் அப்பால், அரசின் முடிவுகளை அவை செயல்படுத்தப்படுவதற்கு முன் மீள் பரிசோதனை செய்யும் இடத்தில் இந்திய ஜனநாயகம் ஜனாதிபதியை அமர்த்தியுள்ளது. அவர் மந்திரிசபைக் கூட்டங்களில் பங்கெடுப்பதில்லை என்பதால், எந்தவித அழுத்தங்களுக்கும் முகம் கொடுக்காமல், அவரால் அரசின் சட்ட முன் வரைவுகளையும் மற்ற முக்கிய முடிவுகளையும் எடை தூக்கிப்பார்க்க முடிகிறது.



என்றாலும், இந்திய ஜனாதிபதி தன்னிச்சையாக செயல்பட்டு, அங்கீகரிக்கப் பட்ட ஒரு சர்வாதிகாரியாக செயல்பட முடியாது. அவ்வாறு செயற்படும் வாய்ப்புக்கு அரசியல் சட்டம் இடம் கொடுக்கவும் இல்லை. அரசின் முடிவுகளை மீள் பரிசோதனை செய்யும் அதேநேரத்தில், அவரது கருத்தையும் அறிவுரையையும் அமைச்சரவை ஏற்க மறுத்தால், அமைச்சரவையின் தீர்ப்பே முடிவானது என்று அரசியல் சட்ட ஏற்பாட்டை இந்திய உச்ச நீதி மன்றமும் தெளிவாக்கி உள்ளது. இது போன்றே பாராளுமன்றமும் மாநில சட்டமன்றங்களும் நிறைவேற்றும் சட்டங்கள் குறித்து ஜனாதிபதிக்கு கருத்து வேறுபாடு இருந்தால், அவரது அறிவுறுத்தலை விட அந்தந்த அமைப்புகள் தங்கள் மீள்பரிசோதனை மூலம் எடுக்கும் தீர்மானமே முடிந்த முடிவாக இருக்கும்.

அந்த விதத்தில், ஜனநாயக நாட்டில், எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அரசின் முடிவுகள் தனியொரு மனிதனால் எடுக்கப் பட்டுவிடக் கூடாது என்பதில் இந்திய அரசியல்வாதிகளும் அவர்கள் வகுத்த அரசியல் அமைப்புச் சட்டமும் தெளிவாக உள்ளன. இதற்கும் அப்பால் சென்று, 1975ஆம் ஆண்டு நாடு எங்கிலும் பிரகடனப்படுத்தப்பட்ட 'அவசரகால நிலைமை', அரசியல் சட்டத்தில் உள்ள ஓட்டைகளால் எடுக்கப்படவில்லை. மாறாக அந்தச் சட்டத்தின் மாட்சிமையை மதிக்காத பிரதமர் இந்திரா காந்தி, அவரது அமைச்சரவைச் சகாக்கள், மற்றும் அன்றைய ஜனாதிபதி ஃபக்ருதீன் அலி அகமது ஆகியோரால் எடுக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்ட முடிவு அது.



ஆனால், இரண்டு ஆண்டுகள் சென்று, 1977-ஆம் ஆண்டு இந்திரா காந்தி அரசு பாராளுமன்றத் தேர்தலில் மக்கள் அந்த அரசை வழி நடாத்திய காங்கிரஸ் கட்சியை மட்டுமல்ல, பிரதமர் உட்பட்ட அமைச்சர்களையும் தோல்வி அடையச் செய்தனர். ஜனநாயகத்தின் மாட்சிமையை அன்றைய இந்தியா உலகளவில் பிரகடனப்படுத்தியது. அன்று முதல் இன்று வரை இந்திரா காந்தி செய்த விஷப் பரீட்சையைச் செய்ய, எந்த ஒரு பிரதமரும் அமைச்சரவையும் கனவிலும் கூட நினைத்துப்பார்க்கவில்லை என்பது ஜனநாயகத்தின் மீது இந்திய அரசியல்வாதிகளுக்கு ஏற்பட்டுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









மரியாதையையும் அந்நாட்டு மக்களுக்கு உள்ள நம்பிக்கையையும் பறைசாற்றுகிறது.

இந்தியாவின் உதாரணத்தை வைத்து நோக்கும் போது, இலங்கையின் அரசியல் சட்டத்திலும் அது சார்ந்த அரசு அமைப்பிலும் தனிமனித தலைமைக்கு 'செக்' வைக்கும் பிற அமைப்புகள் இல்லை என்றே கூறலாம். தனது சுயநலத்தைப் பொது நலமாக விளம்பரப்படுத்தி, ஜனாதிபதி ஜெயவர்தனே கொண்டுவந்த அரசியல் சட்டத்தை எதிர்த்து எதிர்க்கட்சியில் இருக்கும் போது சாடியவர்கள், தாங்கள் பதவியில் வந்த பிறகு அதனை மறந்தே போகிறார்கள். அது போன்றே பாராளுமன்ற அரசியலில் இந்திய ஜனாதிபதிக்கு உள்ள அதிகாரங்கள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதித்திட்டத்தின் கீழ் இலங்கையின் பிரதமருக்கோ அல்லது அமைச்சரவைக்கோ இல்லை என்பதும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

இத்தனை தான் என்றாலும் இந்திய ஜனாதிபதித் தேர்தல் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு அரசியல் குழப்பங்களை தோற்றுவித்திருக்கிறது. மத்தியில் ஆளும் காங்கிரஸ் கட்சி தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி சார்பில் நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி தேர்தலில் நிற்கிறார். அவரை எதிர்த்து எதிர்க் கட்சியான பாரதீய ஜனதா தலைமையில் தேசிய ஜனநாயகக் கூட்டணி முன்னாள் மக்களவை சபாநாயகர் சங்மாவை ஆதரிக்கிறது. முன்னவர் வென்றால், இந்தியாவின் கிழக்குப் பிராந்தியத்திலிருந்து ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள முதல் தலைவர் என்ற பெருமை அவர் சார்ந்த மேற்கு வங்காள மாநிலத்திற்கு கிடைக்கும்.

சங்மாவிற்கு முன் அவர் சார்ந்த வட-கிழக்கு பிராந்தியத்தில் இருந்து பலரும் ஜனாதிபதி பதவிக்கு போட்டியிட்டிருந்தாலும், அவர்களில் 'அவசரகால நிலை புகழ்' ஃபக்ருதீன் அலி அகமது மட்டுமே புது டெல்லியில் உள்ள 'ராஷ்டிரபதி பவன்' என்ற மாளிகையில் குடிபுகும் வாய்ப்பினை பெற்றார். ஐந்து ஆண்டுகள் பதவிக் காலம் என்றாலும், இடைப்பட்ட காலத்தில் உயிரிழந்தார். அந்த விதத்தில் இந்த முறை ஜனாதிபதித் தேர்தல் வடக்கு மற்றும் வட கிழக்கு ஆகிய நாட்டின் அடுத்தடுத்த இரு பகுதிகளுக்கும் இடையே நடைபெறும் போட்டி.

கடந்த காலங்களில் பெருவாரியாக ஜனாதிபதியாக பதவி ஏற்றவர்கள், தென் மாநிலங்களில் இருந்தோ அல்லது வடக்குப்பிராந்தியத்தில் இருந்தோ வந்தவர்கள். அதிலும் குறிப்பாகத் தமிழ் நாடு அல்லது சென்னை நகருடன் தொடர்பு கொண்ட தலைவர்கள் ஜனாதிபதியாகப் பல முறை தெரிவாகி உள்ளனர். டாக்டர் ராதாகிருஷ்ணன், வி.வி.கிரி, சஞ்சீவ ரெட்டி, மற்றும் தமிழர்களான ஆர்.வெங்கட்ராமன் மற்றும் அப்துல் கலாம் ஆகியோர் சென்னை நகருடன் நெருங்கிய தொடர்பு கொண்டு இருந்தவர்கள்.

இவர்களில், வி.வி.கிரி சஞ்சீவரெட்டி ஆகிய இரு ஆந்திர மாநிலத் தலைவர்கள் 1969ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் எதிரெதிராகப்போட்டியிட்டது சரித்திரப் பிரசித்தி பெற்றது. அந்தத் தேர்தலில் கிரி வெற்றி பெற்றாலும், பின்னர் 1977ஆம் ஆண்டு சஞ்சீவ ரெட்டியும் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவ்வாறு, ஒரு முறை தேர்தலில் போட்டியிட்டவர் பின்னர் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டது இந்த ஒருமுறை மட்டுமே. என்றாலும், 1969-ஆம் ஆண்டு தேர்தல் அன்றைய ஆளும் காங்கிரஸ் கட்சி உடைவதற்கு வழிவகுத்தது. அன்று பிரதமராக இருந்த இந்திராகாந்தியும் அவரை அந்தப் பதவியில் வைத்து அழகு பார்த்த தமிழ் நாட்டுத் தலைவர் காமராஜரும் அரசியலில் எதிரெதிரே பயணிக்கத்துவங்கியதும் அந்த ஜனாதிபதித் தேர்தலில் தான். அதை விட முக்கியமாக, 1969 துவங்கி இந்திரா காந்தி அரசு தலைமை எடுத்த அதிரடி முடிவுகளே பின்னர் 1975-ஆம் ஆண்டு 'எமர்ஜென்சி' அல்லது அவசரகால நிலை பிரகடனப்படுத்துவதற்கான சூழலை உருவாக்கிக் கொடுத்தது.

வடக்கிற்கும் தெற்கிற்குமாக மாறி, மாறிச் சென்று கொண்டிருந்த ஜனாதிபதி பதவி கடந்த முறை தான் முதல் முறையாக மேற்கு மற்றும் கிழக்கு ஆகிய பிராந்தியங்களுக்கு பரவி, அந்தப்பகுதிகளில் இருந்து ஜனாதிபதி வேட்பாளர்களாக பலருடைய பெயரும் அடிபடத்துவங்கியது. அப்போது தான் முதல் முறையாக கிழக்குப் பிராந்தியம், மேற்கு வங்க மாநிலத்தைச் சேர்ந்த மூத்த கம்யூனிஸ்ட் தலைவரும் மக்களவை சபாநாயகருமான சோம்நாத் சட்டர்ஜியின் பெயர் அடிபட்டது. ஆனால், ஜனாதிபதியாக மேற்குப் பிரதேசம், மஹாராஷ்டிர மாநிலத்தைச் சேர்ந்த பிரதீபா பாட்டீல் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அத்துடன் இந்தியாவின் முதல் பெண் ஜனாதிபதி என்ற பெருமையும் அவருக்கு உண்டு.

தற்போது, கிழக்கு மற்றும் வடகிழக்கு இரண்டு பிராந்தியங்களையும் விட, அரசியல், பொருளாதாரம், மக்கள் தொகை, அதனால் அதிகப்படியாக தேர்ந்தெடுக்கப்படும் பாராளுமன்ற மற்றும் மாநிலங்களில் உள்ள சட்டப்பேரவை உறுப்பினர்களின் எண்ணிக்கை ஆகிய விடயங்களில் மேற்கு, வடக்கு, தெற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






ஆகிய பகுதிகள் முக்கியம் பெற்றவை. ஆனாலும், ஜனாதிபதித் தேர்தல் என்று வந்த பிறகு, பிராந்திய அளவில் தனிப்பட்ட தலைவர்களின் தகுதிகளே வேட்பாளர் தேர்வில் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

அந்த விதத்தில், பிரணாப் முகர்ஜி, சங்மா ஆகிய இரு தலைவர்களுமே ஜனாதிபதித் தேர்தலுக்குத் தகுதி வாய்ந்தவர்கள் என்றாலும், எப்போதும் போலவே இந்த முறையும் வேட்பாளர் தேர்விலும் ஜனாதிபதித் தேர்தலிலும் அரசியலே விளையாடி உள்ளது. தேசிய அளவில், காங்கிரஸ், பாரதீய ஜனதா ஆகிய இரு கட்சிகளும் ஒருமித்த வேட்பாளரை தேர்ந்தெடுப்பதற்கு எந்தவித முயற்சியும் எடுக்கவில்லை. அதற்கு அரசியல் தான் காரணம். அவ்வாறு செய்திருந்தால், ஜனாதிபதிப் பதவிக்கு காங்கிரஸ் கூட்டணி வேட்பாளர் என்றும் ஒருமாத காலத்திற்குப் பின் காலியாகும் துணை ஜனாதிபதி பதவிக்கு பாரதீய ஜனதா ஆதரவு வேட்பாளர் என்றும் ஒருமித்த கருத்து ஏற்பட வாய்ப்பு இருந்தது.

ஆளும் காங்கிரஸ் கூட்டணி, தனது வேட்பாளராக தற்போதைய துணை ஜனாதிபதி ஹமீது அன்சாரியையோ அல்லது பிரணாப் முகர்ஜியையோ முன்னிறுத்தும் என்று பத்திரிகைகள் ஹேஷ்யம் வெளியிட்ட முதல் நாளே, மூத்த பாரதீய ஜனதாத் தலைவரும் இலங்கையில் கடந்த சில மாதங்களுக்கு முன் விஜயம் மேற்கொண்டவருமான சுஷ்மா சுவராஜ் அவர்கள் இருவரையும் கொச்சைப்படுத்திப் பேசியதே அதற்குக்காரணம். எப்போது காங்கிரஸ் கூட்டணி இவர்கள் இருவரில் ஒருவரே தனது வேட்பாளர் என்று முடிவு செய்த பிறகு, சுஷ்மாவின் கருத்துக்கு பாரதீய ஜனதா வருத்தம் தெரிவிக்காததால், பேச்சுவார்த்தை நடத்தி ஒருமித்த கருத்து உருவாக்க முயற்சி செய்வதில் அர்த்தமே இல்லை என்று காங்கிரஸ் தலைமை முடிவு செய்துவிட்டது.

ஆனால், அதை விட முக்கியமானது, தமிழ் நாட்டிலிருந்து ஜனாதிபதியாக முன்பு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்பட்ட அப்துல் கலாமை மீண்டும் வேட்பாளராக்குவதற்கு, முக்கிய இரண்டு திராவிட கட்சிகளான ஆளும் அ.இ.அ.தி.மு.க.வும் எதிரணியில் உள்ள தி.மு.க.வும் ஆதரவு அளிக்கவில்லை. அதற்கும் அரசியலே காரணம். மத்தியில் ஆளும் கூட்டணியான தி.மு.க., 'கூட்டணி தர்மத்தை' ஏற்றுக்கொண்டு, காங்கிரஸ் தலைமையின் வேட்பாளரை தனது வேட்பாளராக தத்து எடுத்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம். மேலும் அப்துல் கலாம் ஜனாதிபதியாக பதவி வகித்த காலகட்டத்தில் அன்று தமிழ்நாட்டில் ஆட்சி செய்த திராவிட முன்னேற்றக் கழக முதலமைச்சர் கருணாநிதியின் மனவருத்தத்திற்கு உள்ளானது பிறிதொரு காரணம்.

தற்போது தமிழ் நாட்டை ஆளும் அ.இ.அ.தி.மு.க. முதலமைச்சர் ஜெயலலிதாவிற்கும் அப்துல் கலாம் வேண்டாதவராகப்போய் விட்டது வேதனைக்குரிய விடயம். அதனால் தான், அவர், ஒடிசா மாநிலத்தின் ஆளும் பிஜு ஜனதாதளம் கட்சியின் முதல்வர் நவீன் பட்நாயக்கோடு சேர்ந்து சங்மாவை முதன் முதலாக ஜனாதிபதி வேட்பாளராக சிபாரிசு செய்து அறிக்கை வெளியிட்டார். காரணம், அப்துல் கலாம் உண்மையில் பாரதீய ஜனதாவின் வேட்பாளர் என்ற எண்ணம் பலரிடையேயும் பரவியது தான். அடுத்த மக்களவைத் தேர்தலுக்குப்பின், தனது தேசிய அரசியல் பயணம் குறித்து முடிவு எடுக்கும் முக்கிய கட்டத்தில் ஜெயலலிதா இருப்பார் என்று அவரது கட்சியினர் நம்புகிறார்கள். அப்போது, தனக்கு ஏற்றுக் கொள்ளும்படியான, அதே சமயம் தன்னையும் ஏற்றும் கொள்ளும்படியான ஜனாதிபதி இருந்தால் நலம் என்று பல்வேறு தரப்பினரும் கருதுகின்றனர். அதற்கு ஜெயலலிதாவும் விதிவிலக்கு அல்ல.

தற்போது, காங்கிரஸ் கூட்டணியில் இருந்து கொண்டே, மேற்கு வங்கத்தின் மம்தா பானர்ஜி தனது மாநிலத்தைச் சேர்ந்த பிரணாப் முகர்ஜியை எதிர்க்கிறார். அவர் எதிர்பார்த்ததற்கு மாறாக அப்துல் கலாம் தான் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்படாவிட்டால், போட்டியிடப்போவதில்லை என்று அறிவித்துள்ளார். அதனால், பாரதீய ஜனதா கட்சியைப் போலவே மம்தா பானர்ஜியும் ஜெயலலிதாவால் அடையாளம் காணப்பட்ட சங்மாவை ஆதரிக்கும் நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளார். ஆனால், மம்தாவால் காங்கிரஸ் கூட்டணியில் ஏற்பட்ட குழப்பங்களைக் கேலி செய்த பாரதீய ஜனதா, தனது கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஐக்கிய ஜனதாத் தளம் கட்சியின் எதிர்ப்பை எதிர்பார்க்கவில்லை.

ஐக்கிய ஜனதா தளம் கட்சியின் பீஹார் மாநில முதல்வர் நிதீஷ் குமார் பிரணாப் முகர்ஜியை ஆதரித்த கையோடு, பாரதீய ஜனதாவின் குஜராத் முதலமைச்சர் நரேந்திர மோடியை அடுத்த பிரதமராக ஆதரிக்க முடியாது என்றும் தடாலடியாக அறிவித்தார். ஆனால், பாரதீய ஜனதாத்தலைவர்களில் வேறு யாரையும் பிரதமர் பதவிக்கு ஆதரிப்பேன் என்றும் அவர் கூறவில்லை. கடந்த 2004-ஆம் ஆண்டே பத்து ஆண்டுகள் கழிந்து, 2014-ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் பாரதீய ஜனதா தனித்து ஆட்சியைப் பிடித்தால் நரேந்திர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோடி பிரதமர் ஆவார் என்றும் அல்லது கூட்டணி ஆட்சி தான் சாத்தியம் எனும் பட்சத்தில் நிதிஷ் குமாரை முன்னிறுத்தி பாரதீய ஜனதாவே பிரசாரம் செய்யும் என்றும் எழுதப்படாத ஒரு ஒப்பந்தம் இருந்தது. அதனைத் தான் இப்போது நிதிஷ்குமார் பாரதீய ஜனதாவிற்கு நினைவுபடுத்துகிறார்.

அது மட்டுமல்ல, தற்போதைய சூழலில் அடுத்து வரும் மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் அல்லது பாரதீய ஜனதா தலைமையில் கூட்டணி ஆட்சி அமைவதை விட மூன்றாவது அணி ஒன்று உருவாகி, மாநிலக் கட்சிகளின் கூட்டான ஆட்சி அமையும் வாய்ப்பே அதிகமாக உள்ளது. பிரிந்து நின்று தனது தலைமையிலோ அல்லது தனது கண்ணசைவிற்குட்பட்டோ மட்டுமே மத்தியில் அரசு அமைய வேண்டும் என்று ஜெயலலிதா, மம்தா பானர்ஜி, முலாயம் யாதவ் மற்றும் நிதிஷ்குமார் போன்ற பல்வேறு மாநிலத் தலைவர்களும் எண்ணி அரசியல் செய்து வருகின்றனர். இத்தகைய சூழ்நிலையில் அவர்கள் இரண்டு அல்லது அதிகப்படியான அணிகளாகப் பிரிந்து செயல்படுவார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

அத்தகைய சூழலில், அவர்களின் கூட்டணிகளுக்கு இடதுசாரிக் கட்சிகள், காங்கிரஸ் மற்றும் பாரதீய ஜனதா ஆகிய அணிகளில் ஒன்றோ அல்லது ஒன்றிற்கு மேற்பட்டவற்றின் ஆதரவு கட்டாயமாகலாம். அத்தகைய சூழ்நிலையில் ஜெயலலிதா தவிர மற்ற மாநிலத் தலைவர்களின் முதல் தெரிவு இடதுசாரிகளாகவே இருக்கும். அடுத்து வருவது காங்கிரஸ். ஜெயலலிதா மட்டுமே பாரதீய ஜனதா பக்கம் சாய்வார். அதனால் அவருக்கு பயனில்லை என்றால் இடதுசாரி மற்றும் காங்கிரஸ் அணிக்குத் தாவ அவர் தயங்கமாட்டார். அந்த விதத்தில் பாராளுமன்றத் தேர்தலில் ஜெயலலிதா மற்றும் நவீன் பட்நாயக்கின் ஆதரவை மனதில் நிறுத்தி பாரதீய ஜனதா ஜனாதிபதித் தேர்தலில் சங்மாவை ஆதரிக்க முடிவு எடுத்தது வேடிக்கையான விடயம்.

தற்போதைய நிலைவரப்படி ஜனாதிபதித் தேர்தலில் பிரணாப் முகர்ஜி வெற்றி உறுதியாகி உள்ளது. கடந்த 1969-ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சியின் அதிகாரபூர்வ வேட்பாளரான சஞ்சீவ ரெட்டியின் வேட்பு மனுவைத் தாக்கல் செய்து விட்டு, பிரதமர் இந்திரா காந்தி பின்னர் வி.வி.கிரியை தனது வேட்பாளராக வரிந்து கொண்டு அவரை வெற்றி பெறவும் செய்தார். அத்தகைய சூழ்நிலை தற்போது நிலவுவதற்கான அறிகுறி எதுவும் இல்லை. அந்தப் பின்னணியில் தற்போதைய ஜனாதிபதித் தேர்தல் உடனடியாக யார் ஜனாதிபதி என்ற கேள்விக்கு பதில் கண்டு பிடிப்பதை விட, அடுத்து வரவிருக்கும் மக்களவைத் தேர்தலுக்கான முஸ்தீபு மட்டுமே.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




noolaham.org | aavanaham.org

தலைப்புக் கட்டுரை

**நில அபகரிப்பு விவகாரம் தொடர்பில் பல்வேறு நிலைகளில் வீதிப்போராட்டங்களை தமிழ் அரசியல் சக்திகள் இணைந்து நடத்திவருவதற்குச் சாதகமான உணர்வு நிலை உருவானது என்ற போதிலும் இந்தச் சக்திகள் தொடர்ந்தும் போராட்டங்களை ஐக்கியப்பட்ட நிலையில் முன்னெடுப்பதற்கு அரசியல் சிந்தனை மட்டத்தில் தங்களுக்குள் எந்தக் கலந்துரையாடல்களையும் முன்னெடுப்பதில் அக்கறை காட்டாமல் இருக்கின்றன**



## தமிழ் அரசியல் சக்திகளை வீதிப்போராட்டங்களுக்கு நிர்ப்பந்திக்கும்

# நில அபகரிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரசியல் நிருபர்

இலங்கையின் உள்நாட்டுப்போர் முடிவுக்கு வந்து மூன்று வருடங்களுக்குச் சற்றுக் கூடுதலான காலம் கடந்துவிட்ட நிலையில், தமிழ்ப் பகுதிகளில் குறிப்பாக வடக்கில் தமிழ் அரசியல் சக்திகள் வீதிப்போராட்டங்களை நடத்து கின்ற சூழ்நிலை ஒன்று தோன்றியிருக்கின்றது.

போரின் முடிவுக்குப் பின்னரான காலகட்டத்தில் தமிழ் மக்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கத்திற்கு நெருக்குதலைக் கொடுக்கக்கூடியதாக எந்தவொரு கோரிக்கை தொடர்பிலும் வலுவான முறையில் குரலெழுப்ப இயலாததொரு சூழ்நிலையில் இருந்த இந்தத் தமிழ் அரசியல் சக்திகள் தற்பொழுது ஜனநாயக ரீதியான போராட்டங்களை முன்னெடுப்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன. இந்த மாற்றம் தமிழரின் சமகால அரசியலில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தக்கூடிய உள்ளார்ந்த வாய்ப்புகளைத் தாராளமாகக் கொண்டிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை.

வடக்கில் தமிழரின் நிலங்கள் இராணுவ த்தினரால் பல்வேறு காரணங்கள் கூறி அபகரிக்கப்பட்டு வருவதற்கு எதிராக கடந்த மாத ஆரம்பத்தில் யாழ்நகரில் மறியல் போராட்டம் ஒன்றை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி ஆரம்பித்தபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களும் அந்தப்போராட்டத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

தமிழ் மக்கள் எதிர்நோக்குகின்ற உடனடி மனி தாபிமானப் பிரச்சினைக்குத்தீர்வு காண்பதற்கு உருப்படியான அரசியல் செயன்முறைகளில் சிந்திக்காமல் மெத்தனமான போக்கைத் தொடர் ந்தும் கடைப்பிடித்தால் தமிழ் மக்கள் மத்தியி லிருந்து தனிமைப்படுத்தப்பட்டு விடு வோமென்ற அச்சம் இந்தப் பாராளுமன்ற உறுப் பினர்களுக்கு இருக்கின்றது.

நடைமுறைச்சாத்தியப்பாடுடைய அரசியல் கோரிக்கைகளை முன்வைத்துச் செயற்பட முன்வராத நிலையில் இருந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர்கள் தமிழ் மக்களை பெரிதும் பாதித்துக்கொண்டிருந்த நில அபகரிப்புப் பிரச்சினையைத் தங்கள் கையில் எடுக்கத் தயாரானதன் மூலம் தற்போதைய சூழ்நிலையில் தங்களுக்கு தமிழர் மத்தியில் ஏற்புடைமையை அல்லது பொருத்தப்பாட்டை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக் கது.

இதை அடுத்து நில அபகரிப்பு விவகாரம் தொடர்பில் பல்வேறு நிலைகளில் வீதிப்போராட் டங்களை தமிழ் அரசியல் சக்திகள் இணைந்து நடத்திவருவதற்குச் சாதகமான உணர்வு நிலை உருவானது என்ற போதிலும் இந்தச் சக்திகள் தொடர்ந்தும் போராட்டங்களை ஐக்கியப்பட்ட நிலையில் முன்னெடுப்பதற்கு அரசியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனை மட்டத்தில் தங்களுக்குள் எந்த கலந்துரையாடல்களையும் முன்னெடுப்பதில் அக்கறை காட்டாமல் இருக்கிறார்கள். இவர்கள் முன்னெடுக்கின்ற போராட்டங்கள் ஒரு தன்னியல்பு நிலையானதாகவே அமைந்திருக்கின்றன.

இத்தகைய உணர்வுப்போக்கில் இருந்து விடுபட்டு தமிழ் மக்களின் ஒட்டுமொத்தமான அரசியற் பிரச்சினையின் ஒரு கூறாகவே தற்போதைய போராட்ட முன்னெடுப்புகளை நகர்த்தத் தவறும்பட்சத்தில் இவை பிரயோசனமற்றதாகவே போய்முடியும்.

தென்னிலங்கையைச்சேர்ந்த சிறிய இடதுசாரிச்சக்திகளும் மனோகணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணியும் வடபகுதியில் வீதிப்போராட்டங்களில் சிரத்தையுடன் கலந்துகொண்டு தமது ஒத்துழைப்பை வழங்கிவருகின்ற




ஆயுதப்போராட்டம் முடிவுக்கு வந்த பின்னர் தமிழ்பேசும் மக்களின் இருப்பை, வாழ்விடத்தை நிலக் காட்சிகளை மாற்றியமைக்கும் அரசியல் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இனப்பிரச்சினைக்கான தீர்வு காண்பது என்னும் நிகழ்ச்சி நிரலை வேகப்படுத்தாமல் தமிழ் பேசும் மக்களது உணர்வுகளைச் சிதைக்கும் அரசியலை வெளிப்படையாக அரசு முன்னகர்த்தி வருகின்றது. இதற்கு ஆதரவாகத்தான் பல களங்களையும் பயன்படுத்தத் தொடங்கியுள்ளது

நிலைமை தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கத்திற்கு நெருக்குதல்களைக்கொடுப்பதற்கான ஒரு பரந்துபட்ட வெகுஜன இயக்கமொன்றை உருவாக்குவதற்கான ஆரோக்கியமான கூறுகளைத் தன்னகத்தே கொண்டிருப்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இது இவ்வாறிருக்க இன்று சர்வதேச சமூகத்தினதும் கவனத்தையும் ஈர்த்துள்ள தமிழரின் நில உரிமை விவகாரம் குறித்த வரலாற்று ரீதியான பின்புலத்தை இவ்விதத்தில் சற்றுத் திரும்பிப்பார்ப்பது பொருத்தமானதாக இருக்கும்.

இலங்கை வரலாற்றிலே தமிழ் பேசும் மக்களின் பாரம்பரியப் பிரதேசம் என்ற எண்ணக்கரு தமிழ் பேசும் மக்களின் தேசிய இனம் என்ற இருப்பிற்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதைத் தொடர்ந்தே வழக்கிற்கு வந்தது. இலங்கையில் சுதந்திரத்துக்குப் பின்பாக ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொண்ட சிங்களப் பெரும்பான்மை அரசாங்கங்கள் தமிழ் பேசும் மக்களின் சமூக, பொருளாதார அரசியல் நலன்களை மறுதலித்ததன் காரணமாகவே அவர்களது தாயகம் பற்றிய கோட்பாடும் அரசியல் அரங்கிலே முக்கியத்துவம் பெறலாயிற்று.

குறிப்பாகத் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரியப் பிரதேசம் என்ற கருத்து தமிழ் பேசும் மக்கள் தனியான தேசிய இனம் என்ற அரசியல் எண்ணக்கருவுடன் மிகவும் நெருங்கிய வகையிலே தொடர்பு கொண்டதாகவும் மேலெழுச்சிபெற்றது. தாங்கள் பல தலைமுறைகளாக வாழ்ந்த வடக்குக், கிழக்குப் பாரம்பரியப் பிரதேசங்களில் அரச ஆதரவிலான சிங்களக் குடியேற்றங்கள் ஆரம்பிக்கப்பட்டதனைத் தொடர்ந்து தாயகம் பற்றிய எண்ணக்கரு மிகவும் வலுப்பெற்ற ஒன்றாக மாற்றம் பெற்றது.

இப்பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட அரச ஆதரவிலான சிங்களக் குடியேற்றங்கள் தமிழ்பேசும் மக்கள் மத்தியில் வடக்குக், கிழக்கு மாகாணங்கள் தங்கள் தாயகம் என்ற கருத்தை வலுப்பெற வைத்தன. இவ்வகையில் நிலத்துடன் பிணைக்கப்பட்ட வகையிலே இனஉணர்வு ஊட்டம் பெறுவதற்கு கொழும்பு அரசாங்கங்களின் தவறான அணுகுமுறை வழிவகுத்தது. இதுவே பின்னர் வரலாறாகவும் அதன் திசைவழியைத் தீர்மானிக்கும் கருத்தியலாகவும் வடிவம் கொண்டது.

பன்மைச் சமூகங்களைக் கொண்ட நாட்டில் ஓர் இனத்தவர் பெருமளவு வாழும் பிரதேசங்களில் அவர்கள் நலன்களைப் பாதிக்கும் வகையில் மற்றோர் இனத்தவரை அரசாங்க ஆதரவில் கொண்டு சென்று குடியேற்றுவது இன மோதலுக்கும் முரண்பாடுகளுக்குமே வழிவகுக்கும். இதற்கு இலங்கை நல்ல உதாரணமாக விளங்குகின்றது.

இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்தே வடக்குக், கிழக்கு மாகாணங்களில் பெருமளவு சிங்கள மக்களைக் குடியேற்றும் தன்மை கொண்ட அரச ஆதரவிலான குடியேற்றத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. இந்த நடவடிக்கைகளுக்கு அரசு பல்வேறு காரணங்களைக் கூறிவந்தது.

குறிப்பாக உணவு உற்பத்தியில் சுய தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் புராதன நீர்ப்பாசனத் திட்டங்களைப் புனரமைத்தலும், புதிய நீர்ப்பாசனத் திட்டங்களை உருவாக்கிச் சிங்கள விவசாயிகளைக் குடியமர்த்துவதும் இத்தகைய காரணங்களில் பிரதானமாக இருந்தது. மேலும் மிகச் செறிவாக குடியடர்த்தியுள்ள சிங்களப் பகுதிகளிலிருந்து குடியடர்த்தி குறைவுடைய தீவின் வடமேற்கு, கிழக்குப் பிரதேசங்களில் குடிபெயர்வதற்கு ஊக்குவிப்பு அளிக்கப்படுவதற்கும் இத்தகைய அரச ஆதரவிலான குடியேற்றத்திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன.

வடக்குக்,கிழக்கு மாகாணங்களில் இவ்வகையில் ஏற்படுத்தப்பட்ட குடியேற்றங்களில் பெருமளவு சிங்கள மக்களே குடியமர்த்தப்பட்டன. இதனால் தமிழ், சிங்கள இன முரண்பாடுகள் வலுப்பெற்றன. 1930களில் இருந்தே முக்கியமாக டி.எஸ். சேனநாயக்கா விவசாய அமைச்சரான காலத்தில் இருந்து இலங்கையின் வரண்ட பிரதேசங்களில் காணப்பட்ட நீர்ப்பாசனத் திட்டங்களை புனரமைத்துச் சிங்கள விவசாயிகளைக் குடியேற்றும் திட்டங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்பட்டன.

தமிழ்பேசும் மக்களின் பாரம்பரியப் பிரதேசங்களில் ஏற்படுத்தப்பட்ட அரச ஆதரவிலான குடியேற்றத்திட்டங்களுக்கு பின்னணியாகக் காட்டப்பட்டவைகள் என பின்வருவனவற்றைக் கூறலாம். அவை:

1. அபிவிருத்தி
2. நிலமற்றோருக்கு நிலம் வழங்குதல்
3. தமிழ்ப்பிரதேசங்களில்தான் பயன் படுத்தப்படாத பெருமளவிலான விவசாய நடவடிக்கைகளுக்கான நிலங்கள் உள்ளன.
4. அரசாங்க வருமானம் - முதலீட்டைக் கொண்டு ஆரம்பிக்கப்படும் இத்திட்டங் களில் சிங்கள மக்களுக்குப்போதிய நிலம் வழங்கல்.

இவ்வாறு வடக்குக், கிழக்குப் பிரதேச ங்களில் மேற்கொள்ளப்பட்ட அரச ஆதர விலான குடியேற்றத்திட்டங்களுக்கு கரு த்தியல் விசைப்படுத்தல் கொடுக்கப்பட்டது. ஆனால் சமூகங்களுக்கிடையே அமைதி யின்மையையும் மோதல்களையும் முரண்பாடுகளையும் உருவாக்குவதில் இந்தக் குடியேற்றத்திட்டங்கள் வலுவாக உதவியுள்ளன.

1935ஆம் ஆண்டிலிருந்து பல்வேறுபட்ட பெயர்களிலான குடியேற்றத்திட்டங்கள் மூலம் காணிகளின் மறுபகிர்வினை அர சாங்கம் மேற்கொண்டது. அவையாவன :

1. பாரிய குடியேற்றத்திட்டங்கள்
2. உயர் நிலக் குடியேற்றத்திட்டங்கள்
3. கிராம விவசாயத்திட்டங்கள்
4. இளைஞர் குடியேற்றத்திட்டங்கள்
5. காணிக்கொடைகள் (சிறப்பு ஏற்பாடுகள்)
6. அத்துமீறிய குடியேற்றங்களை ஒழுங்கு படுத்துதல்
7. நடுத்தர மட்டத்திலான நீர்ப்பாசனத் திட் டங்கள்
8. மழை நீர்ப்பாசன பண்ணை அபிவிருத் தித்திட்டங்கள்

இவ்வாறு பல பெயர்களினால் பல்வேறு பட்ட திட்டங்கள் மூலம் அரசாங்கத்தினால் காணி பகிர்ந்தளிக்கப்பட்டு மக்கள் குடிய மர்த்தப்பட்டனர். இந்தத்திட்டமிட்ட செயற் பாடுகள் வடக்குக்,கிழக்கு வாழ் மக்களின் வாழ்விடத்தில் பாரம்பரியத்தாயகத்தில் நிலவும் இன அரசியல் அடையாளத்தை இல்லாதொழிக்கும், சிதைக்கும் எதிர் அரசியலாக அரச பயங்கரவாதமாக எழுச்சி பெற்று வந்தது.

தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டம், கிளர்ச்சி நடவடிக்கைகளின் பின்னர் அரச ஆதரவிலான திட்டமிட்ட குடியேற்றங்கள் வடக்கு, கிழக்குப் பிரதேச ங்களில் தொடர்வதை தடுத்து நிறுத்தியது. நில மீட்புப்போராட்டம், எமது மண்ணைப் பாதுகாத்தல் போன்ற எண்ணக்கருக்கள்





அரசியல் வழிமுறைக்கான உள்ளீடுகளாக தள மாற்றம் பெற்றன. தாயகப்பிரதேசம், வாழ்நிலம், பாதுகாக்கப்படுவதான உணர்வு தோற்றுவிக்கப்பட்டது.

ஆனால் வரலாற்றில் இன்று தமிழ் பேசும் ஆயுதப்போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இலங்கை அரசியல் வேறு திசைகளில் முனைப்பாக மாற்றப்பட்டபோது இனவாத அரசியல் வெவ்வேறு புதிய வடிவங்களில் மையம் கொள்ளத்தொடங்கின. மீண்டும் வடக்குக், கிழக்குப்பிரதேசங்களில் சிங்கள குடிப்ப ரம்பலை ஏற்படுத்தி தமிழ்ப் பேசும் மக்க ளின் தாயக உணர்வை அதன் பண்பாட்டு விழுமியங்களைச் சிதைக்கும் அரசியல் முனைப்பு தீவிரப் படுத்தப்பட்டுவருகின்றது. வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் நிரந்தர இராணுவ முகாம்கள், இராணு வக் குடியிருப்புகள், தனிநபர் நிலம் வாங்கல் முதலான வடிவங்களில் பாரம்பரிய நிலங்கள் வன்முறை மூலம் அபகரிக்கப்படுவதாகவோ அல்லது அரச அதிகாரம் மற்றும் இராணுவ மயமாக் கல் சார்ந்த திட்டமிட்ட குடியேற்றத் திட்டங் களாகவும் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆயுதப்போராட்டம் முடிவுக்கு வந்த பின்னர் தமிழ்பேசும் மக்களின் இருப்பை, வாழ்விடத்தை நிலக்காட்சி களை மாற்றியமைக்கும் அரசியல் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இனப்பிரச்சி னைக்கு தீர்வு காண்பது என்னும் நிகழ்ச்சி நிரலை வேகப்படுத்தாமல் தமிழ் பேசும் மக்களது உணர்வுகளைச்சிதைக்கும் அரசியலை வெளிப்படையாக அரசு முன்னகர்த்தி வருகின்றது. இதற்கு ஆதரவாகத்தான் பல களங்களையும் பயன்படுத்தத் தொடங்கியுள்ளது. தமிழ் பேசும் மக்களுக்குரிய சமூக பொருளாதார அரசியல் உரிமைகளை மட்டுமல்ல அவர்களது தனித்துவங்கள் மற்றும் தேசிய அடையாளங்கள் யாவற்றையும் இல்லாதொழிக்கும் குடியேற்றக்கொள் கையைப் புதிய வடிவில் வடக்குக், கிழக்கு மாகாணங்களில் பிரயோகிக்கும் அரச ஆதரவிலான நடவடிக்கைகள் வேகப்பட்டுள்ளன.

இன்று தமிழ்ப்பிரதேசங்களில் திட்டமிட்டு நடைபெறும் நிலப்பறிப்பு மற்றும் குடியேற்றம் போன்ற செயற்பாடுகள் தொடர்ந்தும் அமைதியற்ற சூழலை மீண்டும் உருவாக்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய கிழக்கு



முஹமட் முர்சி ஜனாதிபதியாக தெரிவான பின்னர் ஜூன் 24, 2012 இல் நாட்டு மக்களுக்கு தொலைக்காட்சி மூலம் உரையாற்ற கெய்ரோவில் எகிப்திய தொலைக்காட்சித் தலைமையகத்திற்கு வரும் காட்சி. (ராய்ட்டர்)



# எகிப்தின் மூன்று தூண்கள்

## எகிப்திய புரட்சி இப்போது ஒரு ஜனாதிபதி, ஒரு பாராளுமன்றம், ஒரு சதுக்கம் என்பவற்றை உள்ளடக்கியது



வடா கான் ஃபார்

பத்தொன்பது மாதங்களுக்கு முன்னர் அரபு வசந்தம் ஆரம்பித்ததற்குப் பிறகு அரபுலகம் அண்மைக்காலமாக மிகவும் கூடுதலான ஆர்வக்கிளர்ச்சி கொண்ட காலகட்டத்தினூடாகச் சென்றிருக்கிறது. எகிப்தின் ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை அறிவதற்காக மக்கள் மூச்சை அடக்கிக் கொண்டு தொலைக்காட்சிகளை முழித்துப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஹொஸ்னி முபாரக்கின் பிரதமரான அஹமட் சாஃபிக்கை முஸ்லிம் சகோதரத்துவக் கட்சியினதும் புரட்சிகரச் சக்திகளினதும் வேட்பாளரான முஹமட் முர்சி தோற்கடித்து விட்டதாக அறிவிக்கப்பட்ட போது மாத்திரமே அந்த மக்கள் மீண்டும் சுதந்திரமாக மூச்சுவிட ஆரம்பித்தார்கள்.

இரவு பூராவும் எகிப்தில் மாத்திரமல்ல அரபுலகம் எங்கும் ஒரே கொண்டாட்டம். பிராந்தியத்தில் எகிப்து நடுநாயகமாக இருக்கிறது என்ற காரணத்திற்காக மாத்திரமல்ல, நீண்டநாள் எதிர்பார்க்கப்பட்ட முர்சியின் வெற்றி அரபு வசந்தம் இன்னமும் உயிர்த்துடிப்புடன் இருக்கிறது என்ற செய்தியையும் முன்னாள் அரசாங்கத்தின் சக்திகளினாலும் இராணுவத்தினாலும் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தஹ்ரிர் சதுக்கத்தில் உள்ள புரட்சிவாதிகளின் உறுதிப்பாட்டின் முன்னால் தோல்வி கண்டுவிட்டன என்ற செய்தியையும் தெளிவான முறையில் உலகிற்கு அனுப்பியிருக்கிறது என்பதனால்த் தான் இந்தக் கொண்டாட்டங்கள்.

சர்வதேச சமூகத்தின் பரவலான துரோகமிழைப்புகளுக்கு மத்தியில் தினமும் தங்களது சகாக்களின் சடலங்களை எண்ணிக் கொண்டிருக்கும் சிரிய புரட்சிவாதிகளும் முர்சியின் வெற்றியைக் கொண்டாடினார்கள். ஏனென்றால், சாஃபிக் வெற்றியடைந்திருப்பாரேயானால், அது பஷார் அல்-அசாத்தின் அரசாங்கம் மேலும் கூடுதலான அடக்கு முறையைச் சொந்த மக்களுக்கு எதிராகக்கட்டவிழ்த்து விடுவதற்கு அவருக்கு உந்துதலை அளித்திருக்கும்.

டியூனீசியாவிலும், லிபியாவிலும், யேமனிலும் உள்ள புரட்சிவாதிகளும் கூட கொண்டாடினார்கள். ஏனென்றால், இந்த நாடுகள் அனுபவித்துக்கொண்டிருக்கின்ற அரசியல் மாற்றம் நொய்தானதாக இருப்பதுடன் முன்னைய ஆட்சிகளின் சக்திகள் ஜனநாயகச்செயன்முறைகளை நசுக்குவதற்கான வாய்ப்பொன்றுக்காகக் காத்துக் கொண்டு இன்னமும் விழிப்புடன் இருக்கின்றனர்.

அரபு வசந்தத்தில் பங்கேற்காத நாடுகளிலுள்ள அராபியர்களும் கூட இந்தக் கிளர்ச்சியூட்டும் யதார்த்தத்தைக் கொண்டாடினார்கள். டியூனீசியாவின் சிடி பௌசிட் நகரில் முஹமட் பௌவாசிசி தனக்குத்தானே தீ மூட்டிக் கொண்ட சம்பவத்திற்குப் பிறகு இந்தக் அராபியர்கள் தங்களைச் சூழவுள்ள நாடுகளின் நிகழ்வுப் போக்குகளை உன்னிப்பாக அவதானித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த அனுபவங்கள் முழுவதுமே அரபுக்களுக்கு அவர்களது கௌரவத்தை மீட்டுக் கொண்டுவந்திருக்கிறது. ஆழமான தாழ்வு மனப்பான்மையிலிருந்து அவர்களை விடுதலை செய்திருக்கிறது.

முர்சியின் வெற்றிக்கு முன்னரான வாரங்கள் மனக்கசப்பும் ஏமாற்றமும் நிறைந்தவையாக இருந்தன. அரபு வசந்தம் ஒரு நம்பிக்கையின் சின்னம் என்ற நிலையிலிருந்து மாறி ஒரு கெட்ட சகுனம் போன்று உணரப்படவேண்டிய சூழ்நிலை திடீரென

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உலகின் பிரதிபலிப்புகள், வீதியில் இறங்கிப் போராடும் மக்களைப் பொறுத்தவரை, அவர்களின் சந்தேகங்களை உறுதி செய்வனவாக மாத்திரமே இருந்தன.

ஏற்பட்டது. புரட்சிகரச் சக்திகளைக் குறிப்பாக முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தை இலக்கு வைத்து ஊடகப் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டன. புரட்சிவாதிகள் மத்தியில் பிளவுகள் ஏற்பட்டன. உட்சண்டைகள் பகிரங்கமாக இடம்பெற்றன. இவையெல்லாமே அரபு வசந்தம் குறித்த ஒரு நம்பிக்கையற்ற தோற்றப்பாட்டைக் காண்பிப்பதற்கான சதி முயற்சிகளின் விளைவே ஆகும்.

ஆனால், எகிப்தின் ஆயுதப் படைகளின் உயர்கவுன்சில் புரட்சி முடிவடைந்து விட்டது என்றும் சதிப்புரட்சி ஒன்றிற்கு காலம் கனிந்து விட்டது என்றும் நினைத்த போது நிலைவரத்தில் மாற்றம் ஏற்பட்டது. கவுன்சில் ஐந்து உத்தரவுகளைப் பிறப்பித்தது. பாராளுமன்றத்தைக் கலைத்தல், சட்டவாக்க அதிகாரத்தை இராணுவக் கவுன்சிலுக்கு கைமாற்றுவதற்கு வகை செய்யக்கூடிய அரசியலமைப்பு ஒன்றை உருவாக்குதல் ஆகியவை இந்த உத்தரவுகளில் அடங்கும். ஆயுதப் படைகளின் உறுப்பினர்கள் பொது மக்களைக் கைது செய்வதற்கு அமுலாக்கச் சட்டம் அனுமதித்தது.

முர்சியே வெற்றி பெறப்போகிறார் என்பது இரண்டாவது சுற்றுத் தேர்தலுக்குச் சற்று முன்னதாக ஆயுதப் படைகளின் உயர் கவுன்சிலுக்குத் தெளிவாகத் தெரிய வந்ததும் மேலும் இரு உத்தரவுகள் அவசர அவசரமாகப் பிறப்பிக்கப்பட்டன. முதலாவது, ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைக்க செயலகமொன்றை அமைத்தல், இரண்டாவது பிரதானமாக இராணுவ அதிகாரங்களை உள்ளடக்கிய உயர்மட்ட பாதுகாப்புக் கவுன்சில் ஒன்றை உருவாக்குதல்.

இராணுவத்தின் தீர்மானங்கள் எகிப்திய மக்களுக்கும் பரந்தளவில் அரபு உலகிற்கும் சீற்றத்தை ஏற்படுத்தின. ஆனால், எதிர்பாராத முறையில் அந்தத் தீர்மானங்கள் சகோதரத்துவ இயக்கத்திற்கும் புரட்சிகர சக்திகளுக்கும் பயனைத் தருபவையாக அமைந்து விட்டன. சிதறுபட்ட அலங்கோலமான நிலையிலிருந்து இந்த சக்திகள் மீண்டுவரக்கூடியதாக இருந்தது. உட்பூசல்களை வெற்றிகொண்டு புரட்சிகர சக்திகள் புரிந்துணர்வுக்கு வருவதற்கு இராணுவத்தின் தீர்மானங்கள் உதவின.

பிரதமர் பதவியை முஸ்லிம் சகோதரத்துவ உறுப்பினர் ஒருவருக்கு வழங்கப்போவதில்லை என்று முர்சி அறிவித்த போது மேற்கூறப்பட்ட மனநிலை மாற்றம் தெளிவாகத் தெரிந்தது. உப ஜனாதிபதி பதவியிலிருந்த பல்வேறு பட்ட அரசியல் சக்திகளின் உறுப்பினர்களுக்கே வழங்கப்படும் என்றும் முர்சி அறிவித்தார். இதையடுத்து புரட்சிவாதிகள் இழந்த நம்பிக்கையை மீண்டும் பெறக்கூடிய நிலை உருவானது. சகலதும் எங்கே ஆரம்பித்ததோ தா-அங்கு-தஹ்ரிர் சதுக்கத்திற்கு-மீண்டும் மக்கள் விரையும் நிலை ஏற்பட்டது. மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றம் மீண்டும் கூட்டப்பட வே ண்டும்; இராணுவத்தினால் அடுத்தடுத்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள் இரத்துச் செய்யப்படவேண்டும் என்ற தங்களது கோரிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஜூன் 29, 2012 கெய்ரோ தஹ்ரிர் சதுக்கத்தில் முர்சி உரையாற்றுவதை கேட்டுக்கொண்டிருக்கும் ஆதரவாளர்கள் (ராய்ட்டர்)

கள் நிறைவேற்றப்படும் வரை மறியல் போராட்டம் தொடரும் என்று தஹ்ரிர் சதுக்கத்திலிருந்து புரட்சிவாதிகள் பிரகடனம் செய்தார்கள்.

ஜனாதிபதியாக முர்சி பிரகடனம் செய்யப்பட்டமை எகிப்திய புரட்சி இப்போது மூன்று நிறுவனங்களைக் கொண்டிருக்கிறதென்று அர்த்தப்படுகிறது; ஜனாதிபதி, பாராளுமன்றம், தஹ்ரிர் சதுக்கம்- இவையே அந்த மூன்று நிறுவனங்களுமாகும். இவற்றில் இரு நிறுவனங்கள் அதாவது பாராளுமன்றமும், ஜனாதிபதியும் ஜனநாயகத் தேர்தல்களின் சட்டபூர்வத் தன்மையுடன் பொருந்துபவையாகும். தஹ்ரிர் சதுக்கத்தைப் பொறுத்தவரையில் அதற்கு அதன் சொந்தத்தில் ஒரு புரட்சிகர நியாயபூர்வத்தன்மை இருக்கிறது. இந்த நிறுவனங்களின் கதி ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்ததாக இருக்கிறது.

முர்சி ஜனாதிபதியாக பிரகடனம் செய்யப்பட்ட பின்னரும் கூட தஹ்ரிர் சதுக்கத்தில் தங்களது மறியல் போராட்டங்களை தொடர்வதற்கு புரட்சியாளர்களை இதுவே உந்தித்தள்ளியது. ஆயுதப் படைகளின் உயர் கவுன்சிலுடனான மோதல் முடிந்துவிடவில்லை. அந்த மோதல் புதியதொரு கட்டத்திற்கு நகர்ந்திருக்கிறது என்றுதான் கூறவேண்டும். மக்கள் அந்த புதிய கட்டத்தில் மிகுந்த மன உறுதியையும் நியாயபூர்வத் தன்மையையும் முதல் தடவையாக தங்களது ஆயுதங்களாக்கிக் கொள்கின்றார்கள். அரபு வசந்தம் அதன் வரலாற்றில்

**அரபு வசந்தம் அதன் வரலாற்றில் முன்னர் எந்தவொரு தருணத்திலும் இருந்ததை விட இப்போது கூடுதல் வலிமை வாய்ந்ததாக விளங்குகிறது. இது எகிப்தில் மாத்திரமல்ல முழு அரபுலகிலும்**

முன்னர் எந்தவொரு தருணத்திலும் இருந்ததை விட இப்போது கூடுதல் வலிமை வாய்ந்ததாக விளங்குகிறது. இது எகிப்தில் மாத்திரமல்ல முழு அரபுலகிலும்.

இந்த நிகழ்வுப் போக்குகள் தொடர்பிலான சர்வதேச சமூகத்தின் பிரதிபலிப்பு மிகவும் கவலைக்குரியதாக இருந்தது என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டியது மிகவும் அவசியமானதாகும். ஜனநாயக செயன்முறைகளை சீர்குலைப்பதற்கு ஆயுதப்படைகளின் உயர் கவுன்சில் மேற்கொண்ட முயற்சிகள் தொடர்பாக மேற்குலக அரசாங்கங்கள் பொதுவில் மௌனமாகவே இருந்தன. அமெரிக்க நிர்வாகத்திடமிருந்தும் ஐரோப்பிய ஒன்றியத்திடமிருந்தும் வந்த பயந்தாங்கொள்ளித்தனமான சமிக்ஞைகள் மாத்திரமே விதிவிலக்கானவையாக அமைந்திருந்தன.

ஏனைய அரபுலகில் இடம்பெற்று வருகின்ற ஜனநாயக மாற்றங்கள் தொடர்பிலான அணுகுமுறைகளைப் பொறுத்தவரையில் மேற்குலக அரசாங்கங்கள் இன்னமும் கூட இரட்டைத் தனமான செயற்பாடுகளிலேயே ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றன என்ற மக்களின் சந்தேகம் உறுதி செய்யப்பட்டிருக்கிறது. அந்த நாடுகள் பல தசாப்தங்களாக அரபுலகின் கொடுங்கோன்மை ஆட்சியாளர்களின் உறுதியான ஆதரவாளர்களாக விளங்கின என்பதை மக்கள் இன்னும் நினைவில் வைத்திருக்கிறார்கள். முர்சியின் வெற்றி அறிவிக்கப்பட்டு பல மணித்தியாலங்கள் கடந்த நிலையிலும் மேற்குலக அரசாங்கங்கள் எவ்வாறு மௌனம் சாதித்தன என்ற விடயம் கவனிக்கப்படாமல் போகப்போவதில்லை. எகிப்தின் சரித்திரத்தில் ஜனநாயக ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட முதலாவது ஜனாதிபதியை வாழ்த்துவதற்கு பிரான்ஸ் முன்வந்ததையடுத்தே வாஷிங்டனும் வாழ்த்தியது என்பது கவனிக்கத்தக்கது.

புரட்சியைப் பூர்த்தி செய்வதற்கு எகிப்திய மக்கள் கொண்டிருக்கும் மன உறுதி மேற்குலக அரசாங்கங்களுக்கு அவற்றின் உண்மையான நலன்கள் எங்கே தங்கியிருக்கின்றன என்பதை நிச்சயம் நினைவுறுத்தும் என்று நம்புவோமாக.தங்கள் நலன்கள் சட்டபூர்வமாகத் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கங்களில் அன்றி, உறுதிப்பாடு என்ற பெயரில் இராணுவ ஆதரவுடன் மேற்கொள்ளப்படுகின்ற பரவசங்களில் அல்ல தங்கியிருக்கின்றன என்பதை மேற்குலகம் புரிந்துகொள்ள வேண்டும்.

*த கார்டியன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Building on a legacy of diesel engine expertise**

# LANKA ASHOK LEYLAND

**proudly presents the all-new**

30 YEARS
Trusted Excellence

# LEYPOWER

## Diesel Generating Sets 05-1000 kVA

***POWERING YOUR NEEDS***

- **Silent, rugged & reliable**
- **Environment Friendly**
- **Economical operation backed by island-wide after-sales service and spares availability**




For all your power generation demands, large or small, urban or rural, simple to complex, we are equal to the Challenge..!

The aesthetically designed, silent DG sets are powered by the compact Ashok Leyland series of diesel engines, trouble free performance, ensuring minimum maintenance and low operating costs.

Backed by Island-wide After sales Service

**Ex-stock Available**

5kVA, 10kVA, 15kVA, 20kVA, 25kVA, 40kVA, 62.5kVA, 82.5kVA, 100kVA, 125kVA,

LAL

# LANKA ASHOK LEYLAND PLC

**(A Joint Venture of Government of Sri Lanka and Ashok Leyland, India)**

**39-41, Edward Lane, (off Duplication Road) Colombo 03.**
**Fax: 011 2502286 Web: www.lal.lk E-mail: mktinfo@lal.lk**

**SHOWROOMS**

Sedawatta
C/O Asian Container Terminals (Pvt) Ltd.
Lanka Ashok Leyland PLC, No: 170,
Ambathale Road, Sedawatta. Tel: 011-2547445

Vavuniya
Lanka Ashok Leyland PLC,
No: 27A, 2nd Cross Street,
Vavuniya. Tel: 024-2225808

Anuradhapura
B & D Motors - Lanka Ashok Leyland PLC,
430/B, Mathale Road, Kurundankulama,
Anuradhapura. Tel: 0712-577313

Kandy
Lanka Ashok Leyland PLC,
No: 350, D.S. Senanayaka Weediya,
Kandy. Tel: 081-7500600

**For more information Call: 011 2502532, 2590404, 2592163, 2589667, 2589661**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி- திறனா? முதலீடா?

மனித வள விவகாரம்

உ. லிப்பிகா



எல்லோருக்கும் கல்வி என்பது ஐக்கிய நாடுகளின் அழுத்தமான தீர்மானம். இவைக்கான உறுதிகள் இலங்கைத்தீவில் இல்லையா? இலங்கையில் 14 வயது வரையும் கட்டாயமாகக்கல்வி கற்க வேண்டும் என்பதும் புகட்டப்பட வேண்டும் என்பதும் சட்டம். இலவசக்கல்வி என்பது அதிக எண்ணிக்கையிலான அரசாங்கப் பாடசாலைகள் ஊடாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஆக எல்லோருக்கும் இலவசமான கல்வி எங்களது நாட்டில் உறுதி செய்யப்பட்டுள்ளது என்பது சரியா?

இலங்கையில் இலவசக் கல்வி என்பது, தரம்-1 தொடக்கம், தரம்-5 புலமைப்பரிசில் மற்றும் க.பொ.த சாதாரணதரம், க.பொ.த உயர்தரம் பின்பு பல்கலைக்கழக பட்டப்படிப்புகளை மேற்கொள்ளும் வரை ஒவ்வொரு பிரிவுகளில் வழங்கப்படுகிறது. இவ்வாறான இலவசக் கல்வியை ஒரு சிலரால் மட்டுமே சரியாகத் தொடர்ந்து பயனடையக் கூடியதாக உள்ளது.

'என் பொருளாதாரக் கஷ்டங்கள் காரணமாக தரம்-5க்குப் பின்பு பாடசாலைப்படிப்பை என்னால் மேற்கொள்ள முடியாமல் போய் விட்டது' என்று தலவாக்கலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு உடலின் சகல அவயவங்கள் மீதும் செலுத்தப்பட வேண்டிய அனைத்துக் கவனங்களும் முகத்தின் மீது மட்டும் செலுத்தப்பட்டால் அது ஆரோக்கியத்தின் இலட்சணம் ஆகாது. அதேபோன்று முழு நாட்டின் மக்களினதும் உரிமையை மறுத்து ஓரம் கட்டி ஒரு சிறிய பகுதியினருக்கு மட்டும் கல்வியின் உன்னதத்தை உறுதி செய்யும் பண்பாடு நாகரிகம்மிக்க ஒரு சமூகத்தின் பண்பாடாகாது.

ரவீந்திரநாத் தாகூர்



இரட்ணகிரி தோட்டத்தைச் சேர்ந்த, சி. கதிரேசன்(45) என்னும் தோட்டத் தொழிலாளி கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்; 'என் பெற்றோர் இருவரும் தோட்டத் தொழிலாளர்களாக இருந்தனர், அவர்களின் மாதச் சம்பளம் நாளாந்தச் செலவுகளுக்கே போதவில்லை, இதில் நானும் என் சகோதரர்களும் எவ்வாறு பாடசாலைபற்றி யோசிப்பது?' என்று கூறினார்.

ஆனால் தன்னைப்போல் இல்லாமல், தனது இரு பிள்ளைகளும் பாடசாலைப் படிப்பை மேற்கொள்வதற்காக இயலுமான வசதிகளைத் தான் செய்யத் தயார் என்பதைத் தெரிவித்து, வருங்கால இளைஞர்கள் கல்வியைக் கட்டாயமாகத் தொடர வேண்டும் என்பதை வலியுறுத்தினார்.

விஸ்வநாதன் சாந்தன் (17) என்னும் முல்லைத்தீவைச் சேர்ந்த இளை ஞன் கூறியதாவது, 'நான் தரம்-9 கற்கும் போது யுத்தச்சூழல் காரணமாக னது படிப்பை இடைநிறுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது, தற்போதும் படிப்பைத் தொடர முடியாமல் பொருளாதாரப் பிரச்சினை காரணமாக மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கிறேன்.'

குடும்பத்தில் மூத்த பிள்ளையான சாந்தன் தனது இரு சகோதரர்களுக்கும் பாடசாலைப் படிப்பை மேற்கொள்ள உதவுவதாகக் கூறினார்.

கொழும்பு கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த கி.வனிதா(24) என்பவர் தான் சாதாரணதரத்தில் சித்தி அடைந்த போதும் உயர் தரத்திற்குச் செல்லாமல் தற்போது ஒரு புடவைக்கடையில் விற்பனைப் பிரிவில் வேலை செய்வதாகக் கூறியதுடன், தான் விஞ்ஞானப் பிரிவில் உயர் கல்வியைத் தொடர விரும்பியிருந்த போதும், விஞ்ஞான உயர் பிரிவிற்கு பாடசாலைகளுக்கு கட்டாயம் எனக் கூறப்பட்ட திறமைச் சித்திகள் என்னிடம் இல்லாது இருந்ததால் நான் உயர் கல்வியைத் தொடரவில்லை. மீண்டும் ஒரு முறை சாதாரண தரப்பரீட்சை எழுதும் எண்ணமும் இருக்கவில்லை.

அத்துடன் முக்கியமாகத் தனியார், வெளிநாட்டு கல்வி நிறுவனங்களில் விஞ்ஞான உயர் கல்வியைத் தொடர எனது சாதாரண தரப் பெறுபேறுகள் போதுமாக இருந்த போதும் பல இலட்சக்கணக்கான ரூபாய் எனது பெற்றோரிடம் இல்லாததால், அதைப்பற்றி எனக்கு நினைக்கவே முடியவில்லை என்றும் கூறினார்.

நான் உயர் தரம் சித்தியடைந்திருந்த போதும் நான் விரும்பியபடி பல்கலைக்கழகச் சட்ட பீடத்துக்கு தெரிவு செய்யப்படவில்லை. சட்டக்கல்வி அனுமதியும் கிடைக்கவில்லை. லண்டன் சட்டப்படிப்பை கற்கும் எத்தனையோ நிறுவனங்கள் இருந்தபோதும், அதற்குச் செலவாகும் பத்து இலட்சங்கள் என்னிடம் இல்லாததால் அவற்றை அணுகவே இயலாது என்று பியூமி பண்டார(22) குறிப்பிட்டார்.

சுகாதார அமைச்சின் 2011ஆம் ஆண்டின் புள்ளிவிபரவியலுக்கமைய, இலங்கையின் சனத்தொகையில் ஏறக்குறைய 5.6 மில்லியன் (26 சதவீதமானோர்) இளைஞர்கள் உள்ளனர். இந்தப் பிரிவினர் இலங்கை மக்கள் தொகை வரலாற்றில் மிகப் பெரிய தொகையில் அடங்குவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் 4 மில்லியன் இளைஞர்கள் பாடசாலைக்குச் செல்வோராகவும், 50 ஆயிரமானோர் பல்கலைக்கழக உயர் கல்வியை (தனியார் உயர் கல்வி நிறுவனங்கள் உட்பட) நாடுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கைக்கல்வி முறையானது கணிதம், விஞ்ஞானம், வர்த்தகம் மற்றும் கலை என நான்கு பிரிவுகளாக க.பொ.த. உயர் தரத்தில் பிரிக்கப் பட்டுள்ளது. இதில் பல்கலைக்கழக அனுமதி பெற்றோர் மாத்திரம் பயன் அடைகிறார்களோ இல்லையோ, அவர்கள் பட்டம் பெறுகிறார்கள்.

இதில் பல்கலைக்கழக பட்டதாரிகளுக்கு உடனடி வேலை வாய்ப்பு கிடைப்பதில்லை, அவ்வாறு கிடைத்தாலும், படித்த துறையிலிருந்து வெறுபட்டோ அல்லது அதிலிருந்து சற்றுக் குறைந்த மட்டத்திலேயே வேலை வழங்கப்படுகிறது. தற்போது பல அரசாங்க மற்றும் தனியார் அலுவலகங்களில் பட்டதாரிகள் அலுவலக உதவியாளர்களாக கடமை புரிவதைக் காணக்கூடியதாக உள்ளது.

பல்கலைக்கழக அனுமதி பெறாதோர் பல்வேறு உயர் கல்விப் பாட நெறிகளை வெவ்வேறான தனியார் பல்கலைக்கழகங்களில் உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிற்குச் சென்றோ மேற்கொள்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது வர்த்தகப்பிரிவில் உயர் தரத்தை தொடர்ந்தோர், AAT, CIMA மற்றும் CIM போன்ற உயர் கல்விப் பாடநெறியை நாடுகின்றனர். கலைப்பிரிவில் கற்றோர் சட்டம், சமூகவியல் மற்றும் ஊடகத்துறை ஆகிய படிப்பைத் தொடர்கின்றனர். இதில் சட்டப்படிப்பைத் தெரிவு செய்வோர் திறந்த பல்கலைக்கழகம் மற்றும் இலங்கைச் சட்டக்கல்லூரி மூலம் இலக்கை அடைய முயல்கின்றனர். ஆனால் இவற்றில் நடைமுறையில் உள்ள நுழைவுப் பரீட்சைகளுக்குத் தோற்றுபவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதனால் நிலவும் பலத்த போட்டியின் காரணமாக அனுமதியே பெற முடியாததாலும், பெருமளவு பணம் செலவழித்து லண்டன் சட்ட பட்டங்களைப் பெற முடியாததாலும் வெறுத்தும் கழைத்தும் போய் ஒதுங்கி விடுகின்றனர்.

விஞ்ஞானம் மற்றும் கணிதப் பிரிவில் உயர் தரத்தைத் தொடர்ந்தோர், பெரும்பாலும் ஆசிரியர் தொழிலையே மேற்கொள்கின்றனர். இத்துடன் சிலர் கணினி சம்பந்தமான பாடநெறிகளையும் நாடுகின்றனர்.

இதேவேளை மேலே குறிப்பிட்ட உயர் கல்வி பாடத்தெரிவுகளில் இருந்து சற்றிலும் பொருத்தமில்லாத பாடநெறிகளைத் தெரிவு செய்வோரும் உள்ளனர்.

பூகோளமயமாக்கலின் கீழ் பல் தேசிய கம்பனிகள், பட்டதாரிகளையோ, உயர் கல்வி கற்றோரையோ பெரிதும் விரும்பி வேலைக்குச் சேர்த்துக்கொள்வதில்லை. க.பொ.த சாதாரண தரம் அல்லது உயர் தரத்தில் சித்தி பெற்றோர், ஆங்கிலத்தேர்ச்சி பெற்றோர் மற்றும் தொழில் சார் திறன் உள்ளோரை எடுத்துக் கொள்ளவே விரும்புகின்றன.

அரசாங்கப் பாடசாலைகளில் வருடாந்தம் தரம்-1க்கு உள்ளீர்க்கப்படுகின்ற மாணவர்களின் எண்ணிக்கை-ஏறக்குறைய 400,000, வருடாந்தம் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறும் பட்டதாரிகளின் எண்ணிக்கை -ஏறக்குறைய 20,000.

மனித வாழ்க்கையில் பொருள் உற்பத்தி, சேவைகளின் வழங்கல் என்பன முக்கியம் பெறுவதுடன், அந்த அடிப்படையிலேயே சமூக உறவுகள் கட்டமைக்கப்படுகின்றன. இதில் அடம் ஸ்மித்(adam smith) என்னும் பொருளியல் கோட்பாட்டாளரின்படி நிலம், உழைப்பு, மூலதனம், உற்பத்திச் சாதனங்கள் என்பவற்றைக் கொண்டதாகக் கொள்ளப்படுகிறது. உழைப்பு என்பது உடல் உழைப்பு, மூளை உழைப்பு என்பவற்றை உள்ளடக்கியதாகக் கொள்ளப்படும். இதில் ஒன்று கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ இருப்பது தராதரம் அற்றதாக இருக்கும்.

| ஆண்டு | க.பொ.த சாதாரண தரத்திற்கு விண்ணப்பித்தோர் | க.பொ.த சாதாரண தர பரீட்சார்த்திகள் | உயர் தரத்திற்கு தகுதி பெற்றோர் | க.பொ.த சாதாரண தரத்தில் சித்தியடையாதோர் |
|---|---|---|---|---|
| 2008 | 292,017 | 218,947 | 159,860 | 17, 564 |
| 2009 | 411,983 | 375,041 | 150,608 | 20,201 |
| 2010 | 394,800 | 357,293 | 182,653 | 14,963 |

| ஆண்டு | க.பொ.த உயர் தரத்திற்கு விண்ணப்பித்தோர் | க.பொ.த உயர் தர பரீட்சார்த்திகள் | பல்கலைகழக அனுமதி பெற்றோர் | க.பொ.த உயர் தரம் சித்தியடையாதோர் |
|---|---|---|---|---|
| 2008 | 198,707 | 179,472 | 112,866 | 18,347 |
| 2009 | 198,497 | 177,640 | 108,725 | 18,125 |
| 2010 | 214,022 | 195,043 | 120,281 | 19,792 |




ஆனால் எல்லா மக்களும் உடல், மூளை உழைப்பு என்பவற்றுக்கு அப்பால் கல்வியை(?) பெற்றுக்கொண்டும், பொருள் மூளை உழைப்பை நேரடியாக உடன் படுத்தாமல், செய்வதற்கு கல்வியை அடிப்படையாகக் கொள்ள வேண்டும் என்ற படிமம் எல்லா நாடுகளிலும் படிந்து உள்ளது.

இது இவ்வாறு இருக்க உடல், மூளை உழைப்புக்கு கல்வித் திறனாக அமைவதை விட உடல் உழைப்பையும் மறுத்து, மூளை உழைப்பையும் மறுத்து, உடல், மூளை உழைப்புக்கு அப்பால் பொருள்ச் சேவை உற்பத்தியில் நாட்டாண்மை செய்கின்ற கல்வி சார் சமூகம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டு ஒரு வித்தியாசமான புரிதல் இலங்கை போன்ற நாடுகளில் செல்வாக்குப் பெற்றுள்ளது. இவ்வாறு பிரசாரம் செய்வோர் எவ்வாறான முதலீட்டை மேற்கொண்டால், எந்த வகையான பட்டங்களைப் பெறலாம், எவ்வளவு சம்பாதிக்கலாம் என்று பிரசாரம் செய்து மாணவர்களைச் சேர்க்கின்றனர்.

ஆகவே இலங்கையில் கல்வி முறைமையில் பூகோளமயம் காரணமாக, கல்வி முறைக்கு அப்பால் வெளிநாட்டுக் கல்வியைத் தேடியோடும் நிலை வந்துள்ளது.

இலவசக் கல்வியின் மூலம் ஒரு வருடத்திற்கு 20 ஆயிரம் மாண வர்கள் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகின்றனர். ஆனால் அனுமதி பெறாத மிகுதி மாணவர்களுக்கு, அதாவது உயர் தரம் சித்தி அடைந்தோர் சித்தி அடையாதோரில் பணம் செலவழித்து பட்டம் எடுக்கும் வாய்ப்பு எத்தனை பேருக்கு உள்ளது?

இலங்கையில் கல்வி என்பது திறன் என்பதாக இருந்தால் ஒரு வருடத்திற்கு பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லும் 20 ஆயிரம் பேரை மட்டுமே திறனாளிகளாகக் கொள்ள முடியும். கல்வியை வாழ்க்கையைக் கொண்டு நடத்த முதலீடாகக் கொள்வதாக இருந்தால் பல்கலைக்கழகம் செல்லாத மாணவர்கள் சகலரும் அதை நாட வேண்டும். அதாவது பல பத்து இலட்சங்கள் செலவழித்து கல்வியைப் பெற்றுக் கொள்ள வேண்டி உள்ளது.

இலங்கை சனத்தொகையில் மாணவர்களில் வெளிநாட்டுக்கு போய் படிப்பது எத்தனை பேருக்கு முடியுமானது?

வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் பணம் செலவழித்து கற்போருக்கு கல்வி முதலீடாகவே உள்ளது. வருடந்தோறும் அரச பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் 20 ஆயிரம் பேருக்கு இலவசக் கல்வி என்பதால், அவர்களுக்குத் திறனாகவே உள்ளது. ஆகவே எஞ்சியிருக்கும் ஏனையோருக்கு கல்வி திறனா? முதலீடா?

உண்மையில் விஞ்ஞானபூர்வமாக கல்வி என்பது ஒரு மனிதன் தன்னுடைய வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்கான பொருள் மற்றும் சேவை உற்பத்தியில் உடல், மூளை உழைப்புக்கு உரம் ஊட்டுகின்ற உயர்ந்த வாழ்க்கைத் தரத்தையும் பண்பாட்டையும் நிலை நிறுத்துவதற்கான திறன் என்பதே உண்மை. அந்தத் திறனை வளர்த்து இலங்கையில் தரம் 1க்கு அனுமதி பெறும் மாணவ, மாணவியருக்கு இலங்கையில் இலவசக்கல்வி இருந்தாலும் எத்தனை பேருக்கு உயர் கல்வி வரை கற்க உறுதி செய்யப்படுகிறது?

கல்வியினூடாக அந்தத் திறனைப் பெற முடியாத பெரும் எண்ணிக்கையான மாணவர்களுக்கு முதலீடு செய்கின்ற துறையாகவே கல்வி இருக்கிறது.

தரம்-1க்கு அனுமதி பெறுகின்ற மாணவிகளின் எண்ணிக்கைக்கும், பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறும் பட்டதாரிகளின் எண்ணிக்கைக்கும் இடையில் பாரிய இடைவெளி இருக்கிறது. இதற்குக் காரணமாக எல்லோருக்கும் பல்கலைக்கழகத்திற்குச் செல்லும் திறமை இல்லை என்று கூறப்படுவதில் உண்மை இருப்பதாகத் தெரியவில்லை. மாறாக வாய்ப்புகளே பிரச்சினையாக இருக்கின்றன. இப்பிரச்சினையை தனியார் கல்வியை ஊக்குவிப்பதன் மூலமே தீர்க்க முடியும் என்ற சர்வதேச நாணய நிதியத்தின் வற்புறுத்தலை இலங்கை போன்ற நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளன.

இலங்கை இலவசக் கல்வியின் செயற்திறன் என்பது பூகோளமயமாதலின் சூழ்நிலையில் தனியார் கல்வியின் ஆக்கிரமிப்பினால் இல்லாமலாக்கப்பட்டு, கல்வியின் தராதரம் பணத்தினால் மதிப்பிடப்படுகிறது, கல்வி என்பது ஒரு மனிதனின் எதிர் கால உழைப்பிற்கான முதலீடாக நடைமுறையில் கட்டாயப்பட்டுள் ளது.

ஆக கல்வி என்பது உண்மையில் திறன்தான் என்றாலும் நடைமுறையில் முதலிடக் கூடியவர்களுக்கான வாய்ப்பாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது எனின் எல்லோருக்கும் கல்வி என்ற சுலோகத்தின் பயன் யாது?

www.alaris.lk

நீங்கள் அறிவீர்களா?
உங்கள் வீரியக் குறைவு மற்றும் உத்வேகமின்மை காரணமாக உங்கள் துணைவருக்கு வேதனையும் விரக்தி ஏற்படக்கூடும் என்பதை...

கவலைப்படுகிறீர்களா?
வயதாகி விட்டதால் வீரியம் குறைந்து, விவாக வாழ்க்கையை இனிதே அனுபவிக்க முடியாமல் தவிக்கிறீர்களா?

அடிமையாகிவிட்டீர்களா?
சரியான தகவல்களை அறியாமல் வெவ்வேறு மாத்திரைகளுக்கு அடிமையாகி, தீய விளைவுகளுக்கு ஆளானவர்களில் நீங்களும் ஒருவரா?

TRI BULL
TABLETS

MADE IN AUSTRALIA

தினமும் இரு மாத்திரைகள் 3-4 வாரங்களுக்கு எடுங்கள். ஆண்-பெண் இருபாலாருக்கும் உகந்தது.

எதற்கும் அடிமையாகாமல் எவ்வித பக்க விளைவுகளும் இல்லாமல் இல்லற வாழ்வை இன்பகரமாக அனுபவிக்க ட்ரைபுல் மாத்திரைகளைப் பாவியுங்கள்

Alaris
touching aspirations

மேலதிக விபரங்களுக்கு 077 3624776




உத்வேகமான தாம்பத்திய உறவுக்கு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையக நிலைவரம்



# தோட்டத்தொழிலாளரை மூச்சுத்திணற வைக்கும் பொருளாதாரச் சுமை

இ.சகாயமேரி

கடந்த பெப்ரவரி மாதம் ஏற்பட்ட எரிபொருள் விலை உயர்வு அதனோடு தொடர்பு உள்ளதோ, இல்லையோ அதனைக்காட்டி உயர்த்தப்பட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலையுயர்வு, இலங்கை ரூபாவின் பெறுமதி இறக்கம், பணவீக்கத்தின் அதிகரிப்பு என்பவற்றினால் இலங்கையின் அதிக எண்ணிக்கையான நமது மக்கள் தங்களுக்குக் கிடைக்கின்ற வருமானத்தைச் சமாளிக்க முடியாத அளவிற்கு வாழ்க்கைச் செலவைச் சுமந்து கொண்டும் புழுங்கிக் கொண்டும் இருக்கின்றனர்.

அடிப்படைத்தேவைகளான உணவு, உடை, உறையுள், சுகாதாரம், போக்குவரத்து, கல்வி, மருத்துவம் என்பன கிடைக்காமல் போராடுகின்ற நம்நாட்டு மக்களின் எண்ணிக்கை அதிகமாகும்.

இலங்கையிலேயே மிகவும் குறைவான நாளாந்த வருமானம் பெறுகின்றவர்கள் என்றால் அது நமது பெருந்தோட்டத் தொழிலாளர்களேயாவர். அவர்கள் பற்றி தொழிற்சங்கவாதிகள், அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தொலைக்காட்சியில் படம் காட்டுபவர்கள் நிறையவே பேசுகின்றனர், எழுதுகின்றனர், படமும் காட்டுகின்றனர்.

இவையெல்லாம் நமது பெருந்தோட்டத் தொழிலாளர்களைப் பயன்படுத்தி, தொழிற்சங்கங்கள் நடத்துபவர்களும், அவர்களின் வாக்குகளைப் பயன்படுத்தி பிரதேசசபை, மாகாண சபைகளில் அங்கம் வகிக்கவிரும்புபவர்களினது, 'பராசக்தி வசனங்களை' நம்பி நம்பியே ஏமாந்த இரசிகர்களாகிவிட்டனர் நமது மலையகத் தோட்டத்தொழிலாளர்கள்.

நம் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் குடும்பங்களிலிருந்து முறையான கல்வியைக் கற்றுத் தேர்ந்தவர்களும், மேலே குறிப்பிட்டவர்கள் போன்று, அவர்களுடன் சேர்ந்தோ, சேராமலோ அந்தச் சமூகத்தின் எஜமானர்களாக இருக்கின்ற, இருக்க விரும்புகின்ற நிலையையே காண முடிகிறது.


எங்கள் தொழிலாளர்களின் குடும்பங்களில் இருந்து முச்சக்கரவண்டி ஓட்டுபவர்களும், கடைகளில் வேலை செய்பவர்களும், ஆசிரியர்களும், ஏனைய அரசாங்க அலுவலர்களும் இருப்பதாலும், லயங்களில் தொலைக்காட்சிகளும், டிஸ்க் அண்டனாக்களும் இருப்பதாலும், அவர்கள் அபிவிருத்தி அடைந்துவிட்டதாகக் கூறுபவர்கள், அந்தச் சமூகத்தில் எல்லோருக்கும் மலசலகூடங்கள் இல்லை என்பதையும், கழிவுநீர் வடிகால்கள் இல்லையென்பதையும் ஏற்றுக்கொள்ள வெட்கம் அடைகின்றனர்.

வங்கிகளில் கடனெடுத்தே மலசல கூடங்கள் அமைக்கின்றனர். (வீடு கட்ட கடன் வாங்கினாலும் பரவாயில்லை) வங்கியில் கடன் வாங்கி இருப்பதை மறைக்க முயற்சிக்கின்றனர். இவ்வாறான சமூகத்தில் தற்போதைய வாழ்க்கைச் செலவை வெளிச்சத்துக்கு கொண்டுவருவது என்பதே மலையகத்துக்குப் புரட்சியாக இருக்கும்.

நமது தொழிலாளர் சமூகம் இவ்வாறான சுமைக்குள் இருப்பதையே அவமானமாகக் கருதும் மலையகத்தைச் சேர்ந்த வாய்ச்சவ

பெருந்தோட்டத் தொழிலாளர்களைப் பயன்படுத்தி, தொழிற்சங்கங்கள் நடத்துபவர்களும், அவர்களின் வாக்குகளைப் பயன்படுத்தி பிரதேச சபை, மாகாண சபைகளில் அங்கம் வகிக்க விரும்புபவர்களினதும், 'பராசக்தி வசனங்களை' நம்பி நம்பியே ஏமாந்த இரசிகர்களாகிவிட்டனர் நமது மலையகத் தோட்டத்தொழிலாளர்கள்





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



டால் காரர்களின் வியாக்கியானங்களைத் தவிர்த்துப்பார்த்தால், பொருளாதாரச் சுமை தாங்க முடியாமல் இருக்கும் குடும்பங்களின் அவலமும் எண்ணிக்கையுமே அதிகம்.

அந்த அவலங்களின் சில அவதானிப்புகளைக் கொண்டுவருவதற்கு நான் முயற்சிக்கின்றேன். சாதாரண உதவியாளர்களாக வேலை செய்வோருக்கு ரூ.1000 நாட் சம்பளமாக வழங்கப்படுகிறது. ஆனால் நமது மலையகத்தின் தோட்டத்தொழிலாளர்களுக்கு ரூ.515 நாட் சம்பளமாகும்.

இதிலே கவனத்தில் கொள்ள வேண்டிய விடயம் என்னவென்றால், 60 சதவீதமான வெளிநாட்டு வருவாயை நமது தொழிலாளர்களே பெற்றுத்தருகிறார்கள்.

நாவலப்பிட்டி பார்கேபிள் தோட்டத்தைச்சேர்ந்த ரி.மகாலக்ஷ்மி தமக்கு வழங்கப்படும் நாட் சம்பளமான ரூ.515, மாதச்சம்பளமாக வழங்கப்படும் போது ரூ.7000 கிடைப்பதாகவும், அது வாழ்க்கைச்செலவுகளுக்கு போதுமற்றது என்றும் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,நானும் எனது கணவரும் தோட்டத்திலேயே வேலை செய்கின்றோம், எங்களுக்கு மூன்று பிள்ளைகள் உள்ளனர். ஆனால் எங்கள் இருவரது சம்பளமும் அதிகரித்துள்ள வாழ்க்கைச்செலவுக்கு ஏற்றவாறு இல்லை. நாங்கள் வாங்கும் சம்பளம் ஒவ்வொரு மாதமும் ஒரே அளவாக இருக்காது.நாம் வேலை செய்யும் நாட்களுக்கு ஏற்றவாறே எமக்கு நாட்கூலி வழங்கப்படும். வேலைக்குச் செல்லாமல் இருந்தால் அன்றைய சம்பளம் வழங்கப்படாது.

மகாலக்ஷ்மி வழங்கிய செலவுப் பட்டியலின் படி,

ஒரு போத்தல் மண்ணெண்ணெய்-ரூ.130
ஒரு கிலோ கோதுமை மா-ரூ.100
ஒரு கிலோ நாட்டரிசி-ரூ.165
ஒரு கிலோ சீனி - ரூ.100
ஒரு கிலோ எல்லா வகை மரக்கறி-ரூ.500
மருத்துவச்செலவு-ரூ.1000
படிப்புச்செலவு-750

மேலும் இப்பெண் கூறியதாவது,ஒரு நாளுக்கு மூன்று தடவைகள் ரொட்டி உண்ண வேண்டிய சந்தர்ப்பம் உள்ளது, அப்போது கோதுமை மாவை கூடுதலாகக் கொள்வனவு செய்ய வேண்டி ஏற்படுகிறது. ஆகவே செலவும் அதிகரிக்கிறது.

அவர் கூறினார், தான் வாழும் தோட்டத்தில்,சில சில்லறைக் கடைகளில் மேலே கூறிய பொருட்களை ரூ.10 அல்லது ரூ.20ஆல் கூட்டி விற்பதாகவும் கேட்டால், வாகனச்செலவைக்காட்டுகிறனர் என்றும் கூறினார்.


'நான் மட்டுமே எனது வீட்டில் வேலைக்குச் செல்கிறேன்.என் மனைவி சுகயீனமற்றவர், இரண்டு பிள்ளைகள் உள்ளனர். அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவு எங்களை மிகக்கடினமான கட்டத்துக்குக் கொண்டு சென்றுள்ளது' என்று வாகட்ட புலவைச் சேர்ந்த அ.கதிரேசன் என்னும் தொழிலாளி கூறினார்.

கோதுமை மாவையும், மண்ணெண்ணெய்யையும் கூடுதலாகக் கொள்வனவு செய்யும் எங்களுக்கு பொருட்களின் விலை அதிகரிப்பு பெரும் சுமையாக உள்ளது என்றும் கூறினார்.

வீ.கீதா, 10ஆம் வகுப்பு படிக்கும் இராகலையைச் சேர்ந்த மாணவி கூறியதாவது, 'எங்கள் வீட்டில் மின்சார வசதி இல்லை, நானும் எனது சகோதரியும் மண்ணெண்ணெய் விளக்கிலேயே எமது படிப்பு சம்பந்தமான பாட வேலைகளைச் செய்ய வேண்டி இருக்கிறது, பாவனையும் அதிகரிக்கிறது. ஆனால் மண்ணெண்ணெய் விலை கூடியிருப்பதால், எங்கள் பெற்றோருக்கு அதனை வாங்க முடியாமல் உள்ளது' என்று கூறினார்.

கே.பெருமாள், பூண்டுலோயாவைச் சேர்ந்த தொழிலாளி கூறியதாவது, சாராயம் போன்றவற்றின் விலை அடிக்கடி கூட்டப்படுவதாலும், தோட்டத்தொழிலாளிகளான எங்களது வாழ்க்கைச்செலவு அதிகரிக்கிறது என்ற உண்மையை மறைப்பதற்கு இல்லை. உண்மையில் நாளாந்தம் சாராயம் குடிக்கும் 70 சதவீத தோட்டத்தொழிலாளிகளில் நானும் ஒருவன். சாரயம் குடிப்பது சரியா பிழையா என்பதற்கு அப்பால், தோட்டப்புறத்தில் சாராய விற்பனையில் அரசாங்கத்திற்கு வருமானம் கிடைக்கிறது, விலையுயர்வதால் எங்களுக்குச் செலவு அதிகரிக்கிறது.

இதேவேளை நமது சமூகத்தில் இருந்து வந்த மலையகத்தைச்சேர்ந்த பெரிய ஆய்வுகளைச் செய்து பி.எச்.டி.பட்டப்படிப்புகளை மேற்கொண்டு, தங்களை முற்போக்குவாதிகள் என்று சொல்லிக்கொண்டு தங்களுடைய சொத்துகளின் எண்ணிக்கையை ஒன்றுக்கு மேல் ஒன்றாக உயர்த்துபவர்களும் எமது சமூகத்தில் வாழ்கிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் வரலாறு

# நூற்றாண்டு கடந்த நிலையில் திராவிட இயக்கம்

## பதிவுகள் – விளைவுகள்





வீ.அரசு

திராவிடம் என்ற சொல், இடத்தையும் அதில் வாழும் மக்களையும் அவர்கள் பேசும் மொழியையும் அடையாளப் படுத்துவதாக அமைகிறது. நூற்றுக் கணக்கான மொழிகளைப் பேசும் மக்கள், இந்திய உபகண்டத்தில் வாழ்கிறார்கள். ஆனால் இவை அனைத்திற்கும் மூலமாய் இருப்பது திராவிட



பெரியாருடன் அண்ணா

மொழிக்குடும்பமும் இந்தோ-ஆரிய மொழிக்குடும்பமும் ஆகும். ஆதிக் குடிகள் பேசும் மொழிகளைக் கொண்ட இன்னொரு மொழிக்குடும்பமும் இருக்கிறது. இதில் இந்தோ - ஆரிய மொழிக்குடும்பம் ஐரோப்பிய மொழிகளோடு தொடர்புடையது. திராவிட மொழிக்குடும்பத்திற்கு அவ்வகையான தொடர்பில்லை. திராவிட மொழிக்குடும்பத்தின் மூல மொழியிலிருந்து உருவான மொழி தமிழ். இதைப்போலவே பின்னர் சுமார் முப்பது மொழிகள் உருப்பெற்றுள்ளன. இதில் கன்னடம், தெலுங்கு, மலையாளம் முதன்மை யானவை.

கி.மு.1000 முதல் இன்றைக்கு இந்தியா என்று அழைக்கப்படும் நிலப் பகுதிகளில் வடமொழி, தென்மொழி எனும் பாகுபாடு உருப் பெற்றுள்ளது. தொல்காப்பியம் இதனை உறுதிப்படுத்துகிறது. கடந்த மூவாயிரம் ஆண்டுகளில் இவ்விரு மொழிப்பிரிவுகள் குறித்த பதிவுகள் வெவ்வேறு வகையில் இடம்பெற்றுள்ளன. இம்மொழிகளைப் பேசிய மக்கள் வெவ்வேறு வகையான நம்பிக்கைகளையும் அவற்றை வெளிப்படுத்தும் சடங்குகளையும் செய்து வந்துள்ளனர். இம்மக்களது இவ்வகையான வாழ்முறை கலை இலக்கிய உருவாக்கமாக வடிவம் பெற்றுள்ளது. வடமொழிகளில் சமஸ்கிருத மொழி பிற்காலங்களில் செல்வாக்குப் பெற்றது. பாலி, பிராகிருத மொழிகள் பௌத்த சமய மொழிகளாக அமைந்து போக, சமஸ்கிருத மொழி வைதீக சமயத்தின் மொழியாகப் பின்னர் அமைந்துவிட்டது. இவ்விதம் உருவான மொழிசார்ந்த அடையாளம் முதன்மையாக இரண்டு வகையில் அமைந்து போயிற்று. புராணியக்கதை மரபுகளை முதன்மைப்படுத்தும் தன்மை சமஸ்கிருத மொழியில் வளர்ச்சி பெற்றது. அவை பெரும் காப்பியங்களாகப் பின்னர் வடிவம் பெற்றன. இயற்கைக் கூறுகளை நேரடியாகக் கூறும் மரபு தமிழ் மொழியில் உருவானது. இவை செந்நெறி இலக்கியப் பிரதிகளாக வடிவம் பெற்றன. இந்த வரலாற்றைப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் காலங்களில் தான் தெளிவாகப் புரிந்து கொள்ளமுடிந்தது.

**தொடக்ககால சுயமரியாதை இயக்கம், பிற்பட்டோர் நலன் என்பதோடு பகுத்தறிவு சமதர்மம், மூடநம்பிக்கை ஒழிப்பு எனும் கோட்பாடுகளை முதன்மைப்படுத்தியது. சோவியத் நாட்டுக்குச் சென்று வந்த பெரியார், சமதர்மம் குறித்துப்பேசினார்**

மேற்குறித்த இரு மரபுகளும் கி.பி.ஏழாம் நூற்றாண்டு அளவில் தம்முள் இரண்டற உறவு கொண்டு செயல்பட்டன. இதில் இயற்கை மரபு சார்ந்த கருத்துநிலை இரண்டாம் பட்சமாகி, புராணியக்கருத்து நிலை சார்ந்த வைதீக மரபு முதன்மை பெற்றது. அதுவே பாடும் பாசுரங்கள் ஆயின் தமிழில் பக்தி இலக்கியங்களாக வடிவம் பெற்றன. அரசு இத்தன்மைக்கு ஆதரவாக இருந்தது. அரசாங்க மொழியாகச் சமஸ்கிருத மொழி உருவானது. கி.பி.ஏழாம்



அண்ணாவுடன் என்.எஸ்.கிருஷ்ணன், உடுமலைநாராயணகவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெரியாருடன் கி.வீரமணி

நூற்றாண்டளவில் தொடங்கிய இந்த மரபு கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டுவரை தொடர்ந்தது. இவ்விரு மரபுகளும் தம்முள் இரண்டறக் கலந்து பாசுரங்கள், நிகண்டுகள், இலக்கணங்கள், கட்டிடக்கலை மரபுகள், இசை மரபுகள் என்று பல் துறையிலும் செயல்பட்டன.இவை குறித்த பதிவுகள் அவ்வப்போது பதிவாகியுள்ளன. இவை பெரிதும் இலக்கண நூல்களில் தான் பதிவாகின. 'வீரசோழியம்' மற்றும் 'நன்னூல்' இதற்கு நல்ல சான்றுகள். ஆகம உருவாக்கத்தையும் இந்தப் பின்புலத்தில்தான் புரிந்து கொள்ளவேண்டும். இம்மரபுகள் ஐரோப்பிய புத்தொளிச்சிந்தனைகள் உள்வாங்கப்படும்போது வேறுவகையான புரிதல்கள் உருப்பெறுகின்றன. சமயங்கள் வைதீக சமயங்கள், அவைதீக சமயங்கள் என்று இனம் காணப்படுகின்றன. திராவிடமொழி, ஆரியமொழி எனும் அடையாளங்கள் உறுதிப்படுகின்றன. இம்மொழி பற்றிய புதிய புதிய சொல்லாடல்கள் உருவாகின்றன. தென்னிந்திய மொழிகள், குறிப்பாகத்தமிழ் குறித்த புதிய அடையாளங்கள் கண்டு பிடிக்கப்படுகின்றன. செம் மொழி, செவ்விலக்கியம், செவ்விலக்கணம், சிந்து சமவெளிப் பண்பாடு, லெமூரியாக் கண்டம் இன்னபிறவற்றைத் தமிழ் மொழியோடு இணைத்துக் காணும் சொல்லாடல் உருவானது. இதன் மூலம் தமிழ் குறித்தப்பழைமை எனும் அடையாளம் முன்னுக்கு வந்தது. இதன் இறுதிக்கட்டச் செயல்பாடு தான், மு.கருணாநிதி அவர்களின் தேர்தல் சார்ந்த உடன்படிக்கை அடிப்படையில், இந்திய அரசு, தமிழுக்குச் செம்மொழித்தகுதி வழங்கியிருப்பது. பெர்சியன், சமஸ்கிருதம் என்ற வரிசையில் தமிழையும் இணைத்து, இந்திய அரசு அரசாணையை வெளியிட்டது. இதற்கு முன் தமிழ் செம்மொழியாக இருந்தாலும் அரசாங்கபூர்வ அங்கீகாரம் இல்லை. இப்போதும் கூட அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகம், ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம், டெல்லி பல்கலைக் கழகம் ஆகியவற்றில் தமிழ், இந்தியச் சமகால மொழித் துறையில் தான் உள்ளது. அங்குள்ள செம்மொழித் துறையில் இணைக்கப்படவில்லை. விரைவில் மாறலாம்.

மேற்குறித்த வரலாற்றுப் பின்புலத்தில் கி.பி.1912 முதல் தமிழ்நாட்டுச் சூழலில் தென்னிந்தியர்களை முதன்மைப்படுத்தும் 'திராவிடர்' எனும் சொல்லாட்சி உருப்பெறுகிறது. சென்னை இராஜதானியாக இருந்த காலத்தில் திராவிட மொழிகள் அனைத்தையும் உள்ளடக்கிய பகுதியாக அது இருந்தது. இவர்களை 'மதராசிகள்' என்று வடஇந்தியர்கள் இன்றும் அழைக்கிறார்கள். இந்தப் பின்புலத்தில் 'திராவிட இயக்கம்' என்பது உருவாகிறது. 1912இல் உருவான திராவிட மாணவர் சங்



ராஜாஜியுடன் பெரியார்

கம், திராவிட இயக்கத்தின் முதல் அமைப்பாகக் கருதப்படுகிறது. இந்தப் பின்புலத்தில் 'திராவிட இயக்க வரலாறு' நூறு ஆண்டுகளைக் கடந்து கொண்டிருக்கிறது. இந்த நூறு ஆண்டுகளில் இந்த இயக்கத்தை வழிநடத்திய சக்திகள், விளைவுகள், இன்றைக்கு அதன் நிலை என்று புரிந்து கொள்ள வேண்டிய தேவை இருப்பதாகக் கருதலாம். இதனைப் புரிந்து கொள்ள வசதிக்காக பின்வரும் வகையில் தொகுத்துக் கொள்வோம்.

- இந்தியாவில் 1956இல் மொழிவழி மாநிலங்கள்உருவாக்கப்படுவதற்கு முன்பு திராவிட இயக்கம் என்பது எவ்வகையில் அடையாளப் படுத்தப்பட்டது?
- பெரியார் ஈ.வெ.ராமசாமி அவர்களுக்கும் இந்த இயக்கத்திற்கும் என்ன உறவு?
- சி.என்.அண்ணாதுரை இந்த இயக்கத்திற்கு எவ்வகையான அடையாளங்களைக் கொடுத்தார்?
- இன்றைய சூழலில் இந்த இயக்கத்தை எப்படி அடையாளப் படுத்துவது?

இந்தக் கேள்விகளுக்கான பதிலை அடிப்படையாகக் கொண்டு உரையாடும் தருணத்தில், தமிழ்மொழிபேசும் மக்களின் பொருளாதாரச் சூழல், இனப் போராட்டச் சூழல், பண்பாட்டுச் சூழல் எனப் பலபரிமாணங்களையும் புரிந்து கொள்ளும் வாய்ப்பு நேரலாம். அடுத்தகட்ட சமூக நகர்விற்கு, இந்த நூறாண்டு வரலாறு உதவுமா? உதவாதா? என்றும் புரிந்து கொள்ளலாம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கம் முதல், இந்திய உபகண்டத்தின் பொருளாதார உறவுகள் மாற்றம் பெறத் தொடங்கின. பொதுநிலங்கள், தனியார் நிலங்களாக வடிவம் பெற்றிருந்தன. ஜமீந்தார்கள், மிராசுதாரர்கள், சமஸ்தானங்கள், நவாப்புகள், மடங்கள் என்ற அமைப்புகளின் அதிகாரத்தில் நிலங்கள் கையகப்படுத்தப் பட்டிருந்தன. பிரித்தானிய அரசு



ராஜாஜியுடன் அண்ணா, மதியழகன், கருணாநிதி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இவ்வகையான அமைப்புகளோடு பெரிதும் உறவும் சிறிய அளவிலான முரணும் கொண்டு இயங்கியது. நிலமற்றவர்களுக்கு நிலம் வழங்கும் திட்டங்களையும் சில பிரித்தானியப் பிரபுக்கள் மேற்கொண்டனர். 'பஞ்சமி நிலங்கள்' என்பவை அவ்வகையில் ஏழைமக்களுக்கு வழங்கப்பட்டவை. இவற்றைப் பிற்காலத்தில் உள்ளூர் நிலச்சுவான்தார்கள் பறித்துக் கொண்டனர். ஏழைமக்களுக்கான நிலம் வேண்டும் போராட்டத்தில் அத்திப்பாக்கம் வேங்கடாசல நாயகர் (தொண்டை மண்டலப்பகுதி) போன்றோர் போராடினர். பின்னர் அயோத்திதாசரும் இவ்வகையான கோரிக்கைகளை முன்வைத்தார். நிலங்களிலிருந்து பெறும் வருவாய், பல்வேறு பஞ்சங்களால் படிப்படியாகக் குறையத் தொடங்கியது. பிரித்தானிய அரசு உருவாக்கிய சாலை வசதிகள், புகை வண்டிப்பாதை வசதிகள் ஆகிய பிற, புதியதொரு பொருளாதார முறைகளைக் கொண்டு வந்தது. புதிய பள்ளிக்கூடங்கள், பல்கலைக்கழகங்கள், அரசாங்க அலுவலகங்கள், நீதிமன்றங்கள் என வேலைவாய்ப்புக்கான கூறுகள் உருவாயின. புதிய 'வெள்ளைக் காலர்' வேலைகள் உருவாயின. இவை அரசாங்க வேலைகள் எனும் சமூகத் தகுதியையும் பெற்றன. (இன்றுவரை அது தொடர்கிறது). இவ்வேலைகளில் படிப்படியாக வெள்ளைக்காரர்களோடு உள்ளூர்வாசிகளும் ஈடுபடத் தொடங்கினர். இவவகையில் ஈடுபட்டவர்கள் குறித்து, சமூக நிலையில் புதிய புரிதல்கள் உருவாயின. இங்கு சாதி வடிவம் புதிய அதிகாரத்தோடு செயல்படத்தொடங்கியது. சமூகத்தில் இருந்த ஆதிக்கச் சாதியினர் மட்டுமே, குறிப்பாகப் பிராமணர்கள் மட்டுமே அரசாங்கப்பணியாளர்கள் ஆகும் தகுதி பெற்றனர். யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளில் வெள்ளாளர்களுக்கு அந்த வாய்ப்பு உருவானது. இந்த வேலைவாய்ப்புகளைப் பெற்ற பிராமண வெள்ளாள சாதிக்குள் அதிகார முரண்பாடுகள் உருவாயின. நிலங்களுக்குச் சொந்தமான தமிழக வெள்ளாளர்கள், பிராமணர்களுக்குக் கிடைக்கும் புதிய அதிகாரத்தைக் கண்டு முரண்படத் தொடங்கினர். அதன் வெளிப்பாடுகள் பல்வேறு வடிவங்களில் வெளிப்பட்டன.



பெரியார் - மணியம்மை

ஆதிக்கச்சாதிக்குள் உருவான முரண்பாடுகள் ஒரு பக்கம் இருக்க, நடுநிலைச்சாதிகள் மற்றும் ஒடுக்கப்பட்ட சாதிகள், இவ் வகையான வாய்ப்பு தங்களுக்குக் கிடைக்கவில்லையே என்ற நியாயமான கோபத்தைப் பெற்றனர். இவ்வகையில் பிற்பட்ட வகுப்பினர் எனும் சொல்லாட்சி உருவானது. பிற்பட்டோர் நலம் வேண்டிப் போராடுவோம் எனும் அடையாளம் உருப்பெற்றது. பிற்பட்ட சாதிகளில் இருந்த படித்த, பணக்காரர்கள் இவ்வகையான போராட்டங்களை 1912-1917ஆம் ஆண்டுகளில் முன்னெடுக்கத் தொடங்கினர். அதுவே 'தென்னிந்திய நலவுரிமைச் சங்கம்', பிற்பட்டோர் நலன் கருதிய 'திராவிடர் மாணவர் சங்கம்' எனும் பெயர்களில் உருவாயின. அதுவே 'நீதிக்கட்சியாக' வடிவம் பெற்றது. பிற்பட்டோர் நலன் ஆதிக்கச்சாதி எதிர்ப்பு, ஆதிக்கச் சாதிகளுக்குள் முரண்பாடு எனப் பல்வேறு புதிய சமூக நிகழ்வுகள் 1920களில் உருவானது. இதனைத் திராவிட இயக்கம் என்று அடையாளப்படுத்தினர்.

திராவிட இயக்கம் என்பது ஆதிக்கச் சாதி எதிர்ப்பு இயக்கமாகவே உருவானது. அதில் பொருளாதார நலன் முதன்மைப்பட்டிருந்தது. பிரித்தானியருக்கு எதிராகக் காங்கிரஸ் கட்சியில் ஒரு தரப்பும், அவர்களுக்கு ஆதரவாக



இன்னொரு தரப்பும் செயல்பட்டது. நீதிக்கட்சி, பிரித்தானியருக்கு எதிரான செயல்பாடுகளில் தம் கவனத்தைக் கொள்ளவில்லை. மாறாக வளர்ந்து வரும் புதிய பொருளாதாரச் சூழலில் புதிய புதிய சலுகைகளை, வசதிகளைப் பிராமணர் மற்றும் பிற ஆதிக்கச்சாதியினர் பெறுவதை இவ்வமைப்பு எதிர்த்தது. வட்டார ஆட்சியைக் கோரியது. இரட்டை ஆட்சி முறை வந்தபோது அதில் நீதிக்கட்சி பங்கெடுத்தது. சாதிய, மதவாதக் கட்சியாக இருந்த காங்கிரஸ் கட்சிக்கு நீதிக் கட்சி மாற்றாகச் செயல்பட்டது. சாதி மற்றும் சமய அடையாளங்கள் இக்கட்சிக்கு இல்லை. இவ்வகையில் திராவிட இயக்கத்தின் தோற்றம் என்பது, பிற்பட்டோர் நலன், சாதி

சி.என்.அண்ணாதுரை போன்றவர்களுக்குப் பெரியார் முன்னெடுத்த குடிமைச் சமூகத்தின் சீர்கேடுகளை சீர்திருத்தும் நடவடிக்கைகளை முற்றும் ஏற்றுக்கொள்ளும் மன நிலை படிப்படியாகக் குறையத் தொடங்கியது. இந்தியாவில் பிரித்தானியர் உருவாக்கிய பொருளாதார மாற்றங்கள், தேர்தல் முறை சார்ந்த அரசியல் கட்சிச் செயல்பாடுகள் ஆகியவை குடிமைச் சமூகத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இந்திராவுடன் காமராஜன், அண்ணா

மறுப்பு, ஆதிக்கச் சாதி எதிர்ப்பு எனும் கருத்தாடல்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

நீதிக்கட்சி, வட்டாரம் சார்ந்த குட்டி முதலாளிகளால் முன்னெடுக்கப்பட்டது. இவர்கள் மலையாளம், தெலுங்கு, தமிழ் ஆகிய மூன்று மொழிகளைப் பேசியவர்கள். சமயவாதிகளான காங்கிரஸ் அமைப்பை எதிர்த்த சமயச் சார்பற்றவர்கள், மொழி அடையாளம், சாதி அடையாளம், சமயஅடையாளம் ஆகியவை முதன்மை பெறாத நீதிக் கட்சி காலப்போக்கில் பகுத்தறிவை முதன்மைப்படுத்திய சுயமரியாதை இயக்கத்தோடு இணைந்து செயல் படுவது என்பது சாத்தியமாயிற்று. 1925இல் பெரியார் உருவாக்கிய


பராசக்தியில் சிவாஜி கணேசன்

சுயமரியாதை இயக்கம், திராவிட அடையாளத்தை முன்னெடுத்த அடுத்தகட்ட அமைப்பாக அமைந்தது. நீதிக்கட்சியினர் கடவுள் நம்பிக்கை உடையவர்களாக இருந்தாலும், சமய அடையாளம் இல்லை. சாதி அடையாளமற்ற இன அடையாளம்


அண்ணா, கலைஞர், எம்.ஜி.ஆர்.

இருந்தது. அதுவே திராவிடர் என்பது. பெரியார் பிராமணக் கருத்தியலை, வைதீக சமயமாக வெளிப்படுத்தினார். அதனால் வைதீகத்தை எதிர்ப்பது என்பதன் அடையாளமாக, பிராமணியத்தை எதிர்ப்பது, அதனை முதன்மைப்படுத்தும் பிராமணர்களுக்கு எதிரான செயல்பாடு என்று தமது சுயமரியாதை இயக்கத்தை வடிவமைத்தார். தொடக்ககால சுயமரியாதை இயக்கம், பிற்பட்டோர் நலன் என்பதோடு, பகுத்தறிவு சமதர்மம், மூடநம்பிக்கை ஒழிப்பு எனும் கோட்பாடுகளை முதன்மைப் படுத்தியது. சோவியத் நாட்டுக்குச் சென்று வந்த பெரியார், சமதர்மம் குறித்துப் பேசினார். இந்தச் சூழலில் சிங்கார வேலர், ஜீவானந்தம், சாத்தன்குளம் இராகவன் ஆகியோர் அவருக்கு ஆதரவாக இருந்தனர். சுயமரியாதை சமதர்மக் கட்சித்திட்டம் ஒன்றை இவர்கள் உருவாக்கினர். இது ஈரோட்டுத்திட்டம் என்று கருதப்பட்டது. தொடக்கத்தில் இதனை


ஏற்றுக்கொண்ட ஜீவா, பின்னர் அதிலிருந்து வெளியேறி சாத்தன்குளம் இராகவனோடு சேர்ந்து 'அறிவு' எனும் இதழை நடத்தினார். 'சுயமரியாதை சமதர்மக் கட்சி' ஒன்றைத் தொடங்கினார். இது பின்னர் 'காங்கிரஸ் சோசலிஸ்டு'க்கட்சியாக மாற்றப்பட்டது.

1917-1940 இற்கு இடைப்பட்ட காலம், திராவிட இயக்கம் என்பது மேற்குறித்த அடையாளங்களோடு செயல்பட்டது. 1944இல் திராவிடர் கழகமாக பெரியாரால் உருவாக்கப் பட்டது. தொடக்கக் காலத் திராவிடர் இயக்கம் குறித்த புரிதலை மேற்கண்ட வகையில் புரிந்து கொள்ளலாம். அது பின்னர் வேறு வடிவங்களில் செயல்படத்தொடங்கியது. எனவே, திராவிடர் இயக்கம் என்பது பிரித்தானியர் வழங்கிய புத்தொளி மரபை உள்வாங்கி, சமயம், சாதி, பொருளாதாரம், அரசியல் எனும் பலநிலைகளில் வேறுபட்ட கண்ணோட்டத்தைக் கொண்ட இயக்கம். அத்தன்மை பின்னர் தொடரவில்லை என்பதும் உண்மை. இவ்வியக்கம் பின்னர் முற்று முழுதாகப் பெரியார் செயல்பாடுகளால் அறிமுகப்படுத்தப்பட்டது. இக்காலத் திராவிட இயக்கத்தைக் காங்கிரஸ் மற்றும் இடதுசாரிச் சிந்தனையாளர்கள் எதிர்நிலையில் பார்த்தனர். அந்த வரலாறே இன்று பதிவாகியுள்ளது. மாறாக அவ்வமைப்பின் அடிப்படை நோக்கம் குறித்த புரிதல் வரலாற்றில் புரிந்து கொள்ளப்பட்டதாகக் கூறமுடியாது.

பெரியார், தமிழ்ச்சமூகத்தின் நவீன சிந்தனையாளர். பெண் ஒடுக்குதலை அதன் பல பரிமாணங்களில் மிக விரிவாகப் பேசியவர். இஸ்லாமிய சிறுபான்மை மக்களோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐக்கியமாக இருந்தவர். உலக மதங்களில் சாதியற்ற மதமாக இஸ்லாம் இருப்பதாகக் கருதினார். அம்மதத்திற்கு மாறும்படி பரிந்துரை செய்தார். இந்துமதம் என்பது சாதி, மூடநம்பிக்கை, பொருளாதார முரண் உள்ளிட்ட அனைத்திற்கும் மூலமாக இருக்கிறது. இந்து மதத்தை ஒழிப்பது என்பது மக்களுக்கு விடுதலை வழங்குவது என்று அவர் கருதினார். வாழ்நாள் முழுவதும் இந்துத்துவத்தை அதன் வேரடி மண்ணோடு அம்பலப் படுத்தினார். இராமன் சிலையைச் செருப்பால் அடித்தார். பிள்ளையார் சிலைகளை உடைத்தார். இவரது கலகச் செயல்பாடுகள், தமிழகத்தை சமயச் சார்பற்ற வெகுசன மக்கள் வாழும் பகுதியாக உருவாக்கியது. இந்தியா முழுவதும் மூடநம்பிக்கையில் வெகுமக்கள் சூழ்ந்து கிடந்த சூழலில், தமிழகத்தில் அதற்கு மாற்றான செயல்பாடுள்ள இயக்கமாகத் திராவிட இயக்கத்தை அடையாளப் படுத்தினார். இந்தியாவிலிருந்து திராவிட நாடு பிரிய வேண்டுமென்றார். சமயம், மொழி, சடங்கு ஆகிய அனைத்திலும் வடநாட்டிலிருந்து வேறுபட்ட மக்கள் கூட்டம் சேர்ந்து வாழ வேண்டும் என்னும் அவசியமில்லை என்றார். நடைமுறையில் உள்ள குடிமைச் சமூக வாழ்முறை சார்ந்தே நாடு இருக்க வேண்டும். மாறாக உருவாக்கப்பட்ட நாட்டை அவர் ஏற்றுக் கொள்ள வில்லை. பிரித்தானியர் வழி உருவான குடியரசு எனும் ஆட்சி முறை சார்ந்த தேர்தல் பங்கேற்பு அரசியலை அவர் மறுத்தார். அதில் பங்கெடுக்கவில்லை. குடிசைச்சமூகத்தில் சாதி, சமய ஏற்றத்தாழ்வுகளை ஒழிப்பதற்கு வைதீக சமய ஒழிப்பு அவசியம் என்றார். இதனை நடைமுறைப்படுத்தியது அவரது இயக்கமாக அடையாளப்படுத்தலாம். முதல் கட்டத்திலிருந்து பெரிதும் மாற்றங்களை உள்வாங்கியதாகப் பெரியாரின் திராவிட இயக்க





அண்ணாவுக்கு அஞ்சலி செலுத்தும் எம்.ஜி.ஆர்.

அடையாளம் இருந்தது.

இந்தியாவில் பெரியார் முன்னெடுத்த சமூகச் சீர்திருத்த மரபுகளை வேறு எந்த இயக்கமும் முன்னெடுக்கவில்லை. பெண் அடிமை ஒழிப்பு, மூடநம்பிக்கை ஒழிப்பு, பிற்படுத்தப்பட்டோர் - ஒடுக்கப்பட்டோர் முன்னேற்றம் என்று அவர் செயல்பட்டார். இதுவே பெரியார் அடையாளப்படுத்திய திராவிட இயக்கம். சமயச் சீர்திருத்தம் பேசிக்கொண்டிருந்த சூழலில் சமயத்தை அறவே ஒழிப்பது தொடர்பான வேலைத்திட்டத்தைப் பெரியார் முன்வைத்தார். அதுவே சுயமரியாதை இயக்கம் என முன்னெடுக்கப்பட்டது. தனிப்பட்ட குழுவினர் நலன் மற்றும் முன்னேற்றம் பற்றிப் பேசிய பெரியார், அதற்கான பொருளாதார அணுகுமுறைகள், கோட்பாடுகள் என்று விரிவாக முன்னெடுத்தாரா? என்ற கேள்வியையும் எளிதில் புறக்கணிக்க முடியாது. அவரது வேலைத்திட்டத்தில் பொருளாதாரம் சார்ந்தவை இரண்டாம் பட்சமாகவே இருந்தன. 1925இல் தொடங்கிய சுயமரியாதைப் பகுத்தறிவு இயக்கம், 1944இல் தொடங்கிய திராவிடர் கழக ஆகிய அனைத்தும் மேற்குறித்த பின்புலத்தில் செயல்பட்டன. அச்செயல்பாடுகளைத் 'திராவிட இயக்கச்' செயல்பாடுகளாகப் புரிந்து கொள்ள வேண்டும். 1972 இல் பெரியார் மறையும் வரை மேற்குறித்த கருத்துநிலைகளில் அவர் எவ்விதச் சமரசமும் மேற்கொள்ளவில்லை. தமிழகத்தில் செயல்பட்ட ஆதிக்கக் சாதி ஊடகம், அவரை வெறும் பிராமண எதிர்ப்பாளர் என்றே அடையாளப்படுத்தியது. ஊடக ஆதிக்கம் ஆதிக்க சாதிகளிடம் அன்று முதல் இன்று வரை இருந்து வருகிறது. அதில் பெரியார் சரியாகப் பதிவு செய்யப்படுவார் என்று எதிர்பார்ப்பது சரியாக இருக்க முடியாது.

நீதிக்கட்சி எனும் திராவிட இயக்க அடையாளம் 'திராவிடர் கழகம்' எனும் திராவிட இயக்க அடையாளமாக்கப்பட்ட போது, சி.என்.அண்ணாதுரை போன்ற எண்ணற்ற நபர்கள் அவ்வியக்கத்தில் இணைந்தனர். பெரியாரோடு செயல்பட்ட குத்தூசி குருசாமி போல பலர் திராவிட இயக்கத்தில் தம்மை இணைத்துக் கொண்டனர். எழுத்தறிவு பெற்றவர்கள், குடிசைச்சமூகத்தில், தங்களுடைய அடையாளங்களை வெளிப்படுத்த முயன்றபோது, அதற்கு ஏற்புடையதாக பகுத்தறிவு இயக்கமான திராவிட இயக்கம் இருந்தது. இவ்வகையில் பெரியார் முதன்மைப்படுத்திய திராவிட இயக்க அடையாளம் 1972 இல் அவர் மறையும் வரை செயல்பட்டது.

சி.என்.அண்ணாதுரை போன்றவர்களுக்குப் பெரியார் முன்னெடுத்த குடிமைச் சமூகத்தின் சீர்கேடுகளை சீர்திருத்தும் நடவடிக்கைகளை முற்றும் ஏற்றுக்கொள்ளும் மனநிலை படிப்படியாக குறையத் தொடங்கியது. இந்தியாவில் பிரித்தானியர் உருவாக்கிய பொருளாதாரமாற்றங்கள், தேர்தல் முறை சார்ந்த அரசியல் கட்சிச் செயல்பாடுகள் ஆகியவை குடிமைச் சமூகத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. தேர்தல் மூலம் பெரும் அதிகாரத்தைப் பெறமுடியும் என்ற சூழல் உருவானது. எனவே தேர்தல் சார்ந்த அரசியல் கட்சிச் செயல்பாடுகளுக்கு உந்தப்படுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1969 பெப்ரவரி சென்னையில் அண்ணாவின் இறுதி யாத்திரை

சாத்தியமாயிற்று. தேர்தல் சார்ந்த அரசியல், வெகுசனக் கருத்தியலுக்கு எதிரானதாக இருக்கக்கூடாது. அதனால் பெரியார் முன்னெடுத்த கடவுள் மறுப்புக்கோட்பாட்டை அண்ணாத்துரை, 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்று எதுகை மோனை மொழியில் வெளிப்படுத்தத்தொடங்கினார். பிரித்தானியரிடமிருந்து அதிகாரம் பெறும்போது, அது ஆதிக்கச்சாதி மற்றும் இந்துத்துவச் சக்திகளுக்குச் சாதகமாகவே அமையும் என்று பெரியார் கருதி அந்நாளைத் துக்கநாளாக அறிவித்தார். அண்ணாத்துரை அந்நாளைப் பெரும் விடுதலை நாளாகக் கொண்டாட விரும்பினார். பெரியார், திராவிடக் கழகத்தின் எதிர்கால நலன் கருதி மணியம்மையை சட்டப்படித் திருமணம் செய்து கொண்டார். இதனை விழுமியம் சார்ந்த செயல்பாடாகவே சி.என். அண்ணாத்துரை போன்றோர் கருதினர். பெரியாரின் திருமண அறிவிப்பை ஏற்றுக் கொள்ளும் மனநிலை இல்லை. இந்தச்சூழலில் 1948இல் திராவிட முன்னேற்றக்கழகம் உருவாகியது. இதனைத் திராவிட இயக்க அடையாளங்களை, முன்னெடுத்த அமைப்பாக கொள்வதெப்படி? என்பது சுவையான உரையாடல்...

திராவிட முன்னேற்றக் கழகம், தன்னை இன்றுவரை திராவிட இயக்க அமைப்பாகவே கூறிக்கொள்கிறது. மு.கருணாநிதி திராவிட இயக்க நூற்றாண்டைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறார். ஆம் 1948-1967 காலங்களில் இவ்வமைப்பினர் பேசிய பேச்சுகள், எழுத்துகள், நாடகங்கள், பத்திரிகைச்செய்திகள், சினிமா என அனைத்திலும் திராவிட இயக்கத்தின் கடவுள் மறுப்பு, பிராமண மறுப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய ஆக்கங்களை மிகுதியாக வெளிக்கொண்டு வந்தார்கள். தாங்களே பகுத்தறிவுவாதிகள், தாங்களே சுயமரியாதைக்காரர்கள் என்று முழங்கினார்கள். 1967இல் ஆட்சிக் கட்டில் ஏறி இருபத்து மூன்று மாதங்கள் முதலமைச்சராக இருந்துவிட்டு அண்ணாத்துரை மறைந்தார். அவரது காலத்தில் சுயமரியாதை திருமணத்திற்குச் சட்டபூர்வ அங்கீகாரம் வழங்கினார். இந்தி மொழி தமிழகத்தில் பாடமொழி மற்றும் ஆட்சி மொழியாக வர இயலாத சட்டத்தைக் கொண்டு வந்தார். இவ்விரண்டு செயல்பாடுகளும் திராவிட இயக்கம் என்று அவர்கள் சொல்லிக் கொள்வதற்கான அடையாளமே. ஆனால் அவரது மறைவிற்குப் பின்பு, பெரியார் முன்னெடுத்த மூட நம்பிக்கை ஒழிப்பு, வைதீக சமய மறுப்பு ஆகியவை எதிலும் கவனம் செலுத்தவில்லை. பிற்பட்டோர் நலம் சார்ந்த திட்டங்களில் கொஞ்சம் கவனம் செலுத்தினார். வழக்கமாக ஆட்சி அதிகாரத்தில் செய்ய வேண்டிய அனைத்தும் வெற்றிகரமாக நிறைவேறியது. வடக்கு, தெற்கு மறைந்தது. திராவிட நாடு மறைந்து போயிற்று. மாநில சுயாட்சி அவ்வப்போது மேடைப்பேச்சுக்கு உதவியது. அனைத்துக் கட்சிகளுடன் உறவு. இலவசம் வழங்குதல் என்னும் தேர்தல் ஓட்டு வேட்டை அணுகுமுறை திராவிட நாடு திராவிடக் குடும்பம். பின்னர் குறிப்பிட்ட கட்சித் தலைவர் குடும்பமே திராவிட இயக்கமாகியது.

இந்தச் சூழலில்தான் சமயவாதி, கடவுள் நம்பிக்கையுள்ள எம்.ஜி. இராமச்சந்திரன் உருவாக்கிய திராவிட இயக்க அடையாளம் உறுதிப்படுத்தப்பட்டது. அதனை இன்றைய தமிழக முதலமைச்சர் நடைமுறைப்படுத்துகிறார். பெரியார் இக்கட்சிகளின் விளம்பரமாகப் பயன்படுகிறார். அதுதான் அவர்கள் திராவிட இயக்கத்திற்குக் கொடுக்கும் மரியாதை. 1912 - 1972 இல் பெரியார் காலம் வரை இந்த இயக்கம் இருந்தது. அதற்குப் பின் சீரழிந்தது. கடந்த நாற்பது ஆண்டுகளில் அந்தச் சொல், திராவிட இயக்கம் என்னும் சொல் படாத பாடுபடுகிறது. இத்தன்மை ஏன் உருவானது? இதனை எப்படிப் புரிந்து கொள்வது? இதற்கான அடிப்படைக் காரணங்கள் எவை? என்ற உரையாடல்களை முன்னெடுப்பது மிக அவசியம்.

- வரலாற்றில் சீர்திருத்தக் கருத்து நிலை சார்ந்த இயக்கங்கள், காலம் கடந்தும் வாழமுடியுமா? என்ற உரையாடல் அவசியமாகிறது.
- திராவிட இயக்கம் முதன்மைப் படுத்திய பிற்படுத்தப்பட்டோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எம்.ஜி.ஆரின் இறுதிச் சடங்கு

நலன் எனும் கருத்துநிலையின் மாற்றங்கள், அவ்வியக்கத்தின் தேவையைக் குறைத்து விட்டதா கக் கருதலாமா?

- நில உறவுகள், நவீனத் தொழில்சா ர்ந்த சொத்து உறவுகள் ஆகியவை குறித்த செயல்திட்டம் இல்லாத இயக்கம் அதிகாரத்தைக்கைக் கொள்ளும்போது, குட்டி முத லாளிகளாக இருப்பவர்கள் பெரு முதலாளிகளாக வடிவம் பெறுவது சாத்தியமாகும். பொருளாதார முரண்கள் சீர்செய்வதற்கான வாய்ப்புகள் இல்லாது போவதன் மூலமாக அவ்வியக்கம் சீரழிவது தவிர்க்க முடியாத ஒன்றாகவே அமைந்து போகும்.

தமிழகத்தில் பெரியார் தொடக்க த்தில் சுயமரியாதை, பகுத்தறிவு, சமதர்மம் ஆகியவற்றைக் குறித்து விரிவாகப் பேசினார், எழுதினார். இந்திய உபகண்டத்தில் இத்தன்மை கள் குறித்து இடதுசாரிகள் பேசினர். பொருளாதார உறவு முரண்கள் சார்ந்த போராட்டங்களை முன்னெடுத்தனர். விவசாயிகள் இயக்கம், தொழிலாளர் இயக்கம் ஆகியவை உருவாயின. பெரியார் இவ்வகையான இயக்கங்கள் குறித்த வேறுபட்ட கருத்துநிலை கொண்டிருந்தார். அதனைத் தமது முதன்மையான வேலைத்திட்டமாகக் கொள்ளவில்லை. அவ்வகையான இயக்கங்கள் செயல்பட மூடநம்பிக்கை ஒழிப்பு மூலம் உருப்பெறும் பகுத் தறிவுச் சமூகத்தின் மூலமாகவே சா த்தியப்படும் என்று அவர் நம்பினார். சமூகப் போராட்டங்களை, மக்களின் கருத்துநிலைகளை முதன்மையாகக்

**பிற்படுத்தப்பட்டோர் நலன் எனும் திராவிடக் கருத்தியல், இன்றைய வளர்ச்சியில் பிற்படுத்தப்பட்ட சாதி, ஒடுக்கப்பட்ட சாதி என்று பேசும் நிலை உருப்பெற்றுள்ளது. இதனால் சாதிய அடையாளத்தோடு இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் கட்சிகள் உருவாயின**

கொண்டு நிகழ்த்தினார். அது மட்டுமே தனது வேலை என்றும் கூறிக்கொண்டார். பெரியாரின் இவ்வகையான வேலைத் திட்ட முறைக்கு அவரது வாழ்நாள் முழுதும் உண்மையாக இருந்து செயல்பட்டார். அவரிடமிருந்து உருவானவர்கள் பெரியாரின் கருத்துநிலைகளைப் படிப்படியாக நீர்த்துப் போகச்செய்து, இடதுசாரி கருத்துநிலைக்கு எதிரா னவர்களாக உருவானார்கள். ஆனால், தாங்களே இடதுசாரிகள் எனும் பொய்ப்பிரசாரத்தையும் நெடுங் காலம் செய்து வந்தனர். இன்று, பல பெரும் முதலாளிகள் திராவிடக் கட்சி அரசியலைப் பயன்படுத்தி உருப்பெற்ற சூழலில் தங்களை இடதுசாரிகள் என்று கூறிக் கொள்ளும் வாய்ப்பு இல்லாமல் போயிற்று.

இந்தியாவில், குறிப்பாகத் தமிழகத் தில் செயல்பட்ட இடதுசாரி அரசியல் இயக்கச் செயல்பாடுகளுக்கும் பெரியாரின் செயல்பாடுகளுக்கும் உள்ள பல்வேறு உறவு முறைகள் குறித்து உரையாடுவது அவசியம். பெரியாரின் கருத்துநிலை சார்ந்த திராவிட இயக்கம் அழிந்து விட்டது. வெறும் அடையாளங்கள் மட்டுமே எஞ்சியுள்ளன. இடதுசாரி இயக்கங்கள், பெரியார் வாழ்ந்த காலங்களில் (1948-1952) செல்வாக்குள்ள அமைப்பாக உருவானது. அது பின்னர் ஏற்பட்ட பல்வேறு மாற்றங்களால் பல்வேறு அமைப்புகளாக இன்று உருப்பெற்றுள்ளன. பெரியார் இடது சாரிகளை விட்டு அந்நியப்பட்டாரா? அல்லது இடதுசாரிகள் பெரியாரை அந்நியப்படுத்தினார்களா? என் பது குறித்தும் பேச வேண்டும். இவ்வகையான உரையாடல்கள் குடிமைச்சமூகத்தில் சீர்திருத்த இயக்கங்களுக்கும் பொருளாதார மாற்றம் கோரும் இடதுசாரி இயக்க ங்களுக்கும் இடையே உள்ள உறவைப் புரிந்து கொள்ள உதவும். திராவிட இயக்கம் அதன் தேவை ச ார்ந்து மீண்டும் உருப்பெறுவது என்பது வரலாற்றில் சாத்தியமில்லை. ஆனால், இடதுசாரிகள் திராவிட இயக்கக்கருத்தியலில் எதனைத் தமது இயக்கம் சார்ந்த கருத்தியலாக அடையாளப்படுத்துவது? என்று விவாதிப்பது அவசியமாகிறது. பிற்படுத்தப்பட்டோர் - ஒடுக் கப்பட்டோர் நலன் சார்ந்த செயல் பாடுகள், மொழி அடையாளம், இன அடையாளம், சாதியச் சமூகத்தை வேரறுப்பதற்கான திட்டங்கள், நிலஉறவு மாற்றங்களை உள்வாங்குதல், உலகமயம் என்னும் பொருளாதார மாற்றம் வழி மூலதனம் குறித்த புரிதல் எனப் பல நிலைகளில் செயல்படும் இடதுசாரிகள், பெரி யாரைத் தமக்குள் உள்வாங்கிக் கொள்ளுதல் அவசியமாகிறது. குறிப்பாக, அவரது சமயம் சார்ந்த சீர்திருத்த மரபுகளை முன்வைப்பது அவசியம். வெகுமக்களை 'அறிவியல் மனநிலை' சார்ந்தவர்களாக உரு வாக்குவதற்கான திட்டங்கள் அவசியம். இதற்குக் குடிமைச் சமூகத்தின் கல்விமுறையில் கவனம் செலுத்தி, அதனைத் தலைகீழாக மாற்றுவதன் மூலம், சமூகம் சார்ந்த புதிய வகையிலான நம்பிக்கைகளை வளர்த்தெடுக்க முடியும். இதற்கான திட்டங்கள் இடதுசாரிகளிடம் செயல்பாட்டில் உள்ளதா? என்ற உரையாடலும் அவசியமாகிறது.

நீதிக்கட்சி முதன்மைப்படுத்திய பிற் படுத்தப்பட்டோர் நலன் என்பதைப் பெரியார் வகுப்புவாரி பிரதிநிதித்துவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என்று அடையாளப்படுத்தினார். இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத இட ஒதுக்கீடு என்பது கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் உருவாக்கப்பட்ட முதல் மாநிலம் தமிழ்நாடு. இதற்கு மூலமாக அமைந்தவர் பெரியார். அந்தத் திட்டத்தைக் கவனப்படுத்தியவர்கள் நீதிக்கட்சிக்காரர்கள். திராவிட இயக்கம் வழி உருவான திராவிடக் கட்சிகளின் தேர்தல் அறிக்கைகளில் இன்றும் இடம்பெறும் திட்டமாக இது இருக்கிறது. தலித் இயக்கங்கள் உருவான சூழலில் இத்தன்மைகள் குறித்த பல பரிமாண உரையாடல்கள் உருப்பெற்றுள்ளன. ஆனால் பெரியாருக்குப் பிந்தைய திராவிடக் கட்சிகள், பிற்பட்டோர் நலன் குறித்தபார்வைகளில் மாற் றங்களைக் கொண்டு வந்தனர். எம்.ஜி.இராமச்சந்திரன் பொருளாதார அடிப்படையில் இட ஒதுக்கீடுகளைச் செய்ய வேண்டும் என்றார். ஆனால், அதனை நடைமுறைப்படுத்தவில்லை. இந்தத் திட்டம், ஓட்டு வங்கியோடு தொடர்புடையது. பிற்படுத்தப்பட்டோர் நலன் எனும்திராவிடக்கருத்தியல்,இன்றைய வளர்ச்சியில் பிற்படுத்தப்பட்ட சாதி, ஒடுக்கப்பட்ட சாதி என்று பேசும் நிலை உருப்பெற்றுள்ளது. இதனால் சாதிய அடையாளத்தோடு இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் கட்சிகள் உருவாயின.

சாதி ஒழிப்பை முதன்மைப்படுத்திப் பேசிய பெரியார் முன்னெடுத்த பிற்படுத்தப்பட்டோர் நலன் எனும் கருத்தியல்,இன்றைய சூழலில்தேர்தல் சார்ந்த ஓட்டு முறை அதிகாரத்தால் சாதியக்கட்சிகள் உருவாகத் தளம் அமைத்து இருப்பதைக் காண்கிறோம். சாதியக் கட்சிகளும் பெரியாரைத் தங்கள் அடையாளங்களுள் ஒன்றாகக் கட்டமைக்கின்றன. சாதியக் கருத்தியல் சார்ந்த இத்தன்மையை இன்றைய சூழலில் எப்படிப் புரிந்து கொள்வது? சாதியக்கட்சி என்பதைப் பிற்படுத்தப்பட்டோர் - ஒடுக்கப்பட்டோர் நலம் என்று கொள்ளும் பட்சத்தில் 'சாதியம்' எனும் கருத்தாக்கத்தின் நிலவுடைமை சார்ந்த நச்சுத் தன்மையை ஏற்றுக் கொள்வதா? பெரியாரின் சாதி ஒழிப்பு இவ்வகைக் கூறுகளை வளர்த்தெடுக்க உதவியதா? என்ற உரையாடலும் அவசியமாகிறது. பிற்படுத்தப்பட்டோர், ஒடுக்கப்பட்டோர் நலன் சாதியக்கட்சிகள், தேர்தல் சார்ந்த குடிமைச் சமூகம்



ஆகியவற்றிடையே உள்ள உறவுகளைப் பெரியார் பார்வையில், இடதுசாரிகள் பார்வையில் எப்படி அணுகுவது? திராவிட இயக்க வரலாற்றின் போக்குகளைப்பற்றிய உரையாடலின் போது இத்தன்மை முக்கியத்துவம் மிக்கதாக மாறுகிறது. இதனை உரையாடலுக்கு உட்படுத்துவது அவசியம்.

பெரியார் சமூகச் சீர்திருத்தங்களை முன்னெடுத்தார். அவரது கட்சி வேலைத்திட்டங்கள் அவ்வகையில் மிகச் சிறப்பாக அமைந்திருந்தது. அவரது காலத்தில் அதற்காக உழைத்தார். ஆனால் அவரது காலத்திற்குப் பின்பு, அத்தன்மை தொடராமல் போவதற்கான காரணங்கள் எவை? அது அவரது அடையாளத்தைப் பேசியவர்களுக்கும் பெரியார் உருவாக்கிய வேலைத்திட்டமுறைகளுக்குமான உறவுகள் எவை? தேர்தல் சார்ந்த அளவற்ற அதிகாரச் சீர்கேடுகள் உருவாகும் போது பெரியார் வெறும் அடையாளமாக மிஞ்சுகிறார். அவரது கருத்துக்களைப் பரப்புதல் என்பது, தேர்தல் வழி பெறும் அதிகாரங்களைப் பெறுவதற்கு எதிராக உள்ளது. கடவுள் மறுப்பு, சாதிய முரண்பாடு ஆகியவைகளுக்கும் தேர்தல் ஓட்டு அரசியலுக்கும் நெருக்கமான உறவு இருக்கிறது. எனவே, தேர்தல் சார்ந்த அதிகாரமாகத் திராவிடக் கட்சிகள் குறுகின. அந்த அதிகாரமும் சமூகப் பொது வெளியின் நன்மைக்கான அதிகாரமாகக் கட்டமைக்க முயன்றிருக்கலாம். சமூகப் பொதுவெளி மறுக்கப்பட்டு, தனிப்பட்டவர்களின் சொத்துச் சேர்க்கும் வெறியாக மாறியது. இவ்வகையான சூழல் உருவாவதற்கும் பெரியாருக்கும் எவ்வகையில் தொடர்பு? பெரியாரின் பொருளாதாரம் சார்ந்த வேலைத் திட்டத்திற்கும் அவரைப் பொய்யாக அடையாளப்படுத்திச்சொத்துச் சேர்த்தவர்களுக்கும் என்ன தொடர்பு? பெரியாரை மட்டும் திராவிட இயக்கமாகப் பார்ப்பதா? திராவிடக் கட்சிகளையும் திராவிட இயக்கமாகப் பார்ப்பதா? திராவிட இயக்கக் கருத்துநிலைகளைத் திராவிடக் கட்சி

**பெரியாரின் கருத்துநிலை சார்ந்த திராவிட இயக்கம் அழிந்து விட்டது. வெறும் அடையாளங்கள் மட்டுமே எஞ்சியுள்ளன**



களுக்குரிய கருத்துநிலைகளாகப் பார்ப்பது சரியா? இக்கட்சிகளை விமர்சனம் செய்வது எனும் நோக்கில், திராவிடக் கருத்தியலையே திராவிட மாயை, திராவிட மயக்கம் என்று சொல்வதா? இவ்வகையான உரையாடல் திராவிட இயக்கத்தின் நூறாண்டு கடந்த நிலையில் தேவைப்படுகிறது. இதில் இடதுசாரிகள் திறந்த மனத்தோடு பங்கேற்பது அவசியம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலையுலகம்



# தமிழ்ப் படம் காட்டும் பொலிஸ் சாகசம்

தமிழரகரன்




இன்றைய ஊடகங்களில் பொலிஸ் காரர்கள் தொடர்பில் பல்வேறு செய்திகள் நல்லதாகவோ கெட்டதாகவோ அதிகம் வந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாகக் கெட்ட செய்திகள்தான் அதிகமாக வருகின்றன. தமிழ்நாட்டில் இந்தப் போக்குக் காரணமாக பொலிஸ்காரர்களை மையமாக வைத்துப் படம் எடுக்கும் சூழல் சாதகமாக உருவாகியுள்ளது. அத்தகைய படங்கள் வெற்றியும் பெறுகின்றன.

குற்றங்கள் அதிகரித்து கிரிமினல்கள் பிடிபடாமல் போகும்போது இன்றைய சூழலில் அத்தகைய அநியாயங்களைத் தட்டிக்கேட்கும் ஒரு பொலிஸ் அதிகாரியைப் பற்றிய கதை வெற்றி பெறுவதில் ஆச்சரியமேயில்லை. ரசிகர்களும் ஒரு கதாநாயகன் என்பவன் சகல வசதிகளும் வகித்தவனாக இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கின்றனர். அப்படிப்பட்டவன் பொலிஸ் அதிகாரியாக வரும்போது அவனது அதிகாரங்களுக்கு ஒரு தர்க்கம் கிடைத்து விடுகிறது. பார்வையாளர் கதாநாயகனின் சாகசங்களை நம்ப ஆரம்பித்து விடுகின்றனர். கதாநாயகனின் கருத்தியல்வழியில் இயங்க ஆரம்பிக்கின்றனர். இம்மாதிரிக் கதைகளின் வெற்றிக்கு அது ஒரு முக்கிய காரணம் என தெளிவாகக் கூறலாம். இதனால் ஒவ்வொரு கதாநாயகனும் போட்டி போட்டுக்கொண்டு பொலிஸ் அதிகாரியாக வலம்வரும் காட்சிகளை அண்மைக்காலப் படங்களில் அதிகமாகக் காணலாம்.

தமிழ் சினிமாவில் அந்தக் காலத்தில் எல்லாம் பொலிஸ் பாத்திரங்களுக்குப் பெரிய மரியாதை இருந்ததில்லை. 1960களில் வந்த படங்களில் வணக்கம் போடுவதற்குச் சற்று முன் வந்து ஹீரோக்களை அடித்துப் போட்ட வில்லனின் அடியாட்களை 'யு ஆர் அண்டர் அரஸ்ட்' என்று சொல்லி அள்ளிக் கொண்டு போகும் நகைச்சுவைக் காட்சியில் மட்டுமே வந்து போய்க் கொண்டிருந்தார்கள். இது பின்னர் ஒரு நகைச்சுவைக் காட்சியாகவும பல படங்களில் திரும்பத் திரும்ப இடம்பெறத் தொடங்கியது. 1970 களில் ஒரு நேர்மையான பொலிஸ் அதிகாரியை மையமாக வைத்து எடுக்கப்பட்ட சிவாஜி நடித்த 'தங்கப் பதக்கம்' படத்தின் வெற்றிக்குப் பிறகு பொலிஸ் அதிகாரி சம்பந்தமான கதையைக் கொண்ட படங்கள் அவ்வப்போது பெரும் வெற்றி பெற்றாலும் கோலிவூட்டில் அது ஒரு பெரிய அலையாக உருவானதேயில்லை.

ஆனால் விக்ரம் நடித்து வெளிவந்த 'சாமி' படம் வெற்றி பெற்ற பிறகு நேர்மையான பொலிஸ் அதிகாரியைப் பற்றிய படங்கள் தொடர்ந்து வரிசையாக வர ஆரம்பித்தன. ஆனால் சிவாஜி நடித்த தங்கப் பதக்கத்திலும் சரி, ரஜினி நடித்த 'மூன்று முகம்' படத்திலும் சரி, காவல்த் துறையினர் எதிர்கொள்ளும் நிஜமான சவால்களை அந்தப் படத்தில் கதாநாயகர்கள் எதிர்கொண்டதில்லை. தங்கப் பதக்கத்தில் கடமைக்கும் மகனுக்கும் இடையிலான போராட்டத்தை முன்வைத்து குடும்பம், பாசம் போன்ற உணர்வுகளைத் தூண்டிவிடும் காட்சிகள் முன்னிறுத்தப்பட்டிருந்தன. இது போல் மூன்று முகம் படமும் பெரிய அளவில் பொலிஸ் அதிகாரியின் நிஜ வாழ்க்கையை பிரதிபலிக்கவில்லை. ஆனால்



சாமி படத்தில் ஆறுச்சாமி எதிர்கொள்ளும் சவால்கள் சற்று சினிமாத்தனம் என்றாலும் ஒரு பொலிஸ் அதிகாரியின் வாழ்வைச் சற்றேனும் தொட்டுக்காட்டிய படம் எனக் கூறலாம்.

சாமி படத்தை அடுத்து தொடர்ந்து பல படங்கள் பொலிஸ் அதிகாரியை மையமாகக் கொண்ட படங்களாக வெளிவரத் தொடங்கின. இவை வசூலிலும் அதிகம் வெற்றி பெற்றன. விக்ரம், சூர்யா, அஜித், விஜய்... என இந்த நடிகர்களின் படங்கள் வெளிவரத் தொடங்கின. 1960 களில் இருந்தே கதாநாயகர்கள் காவல்த்துறை அதிகாரிகளாக அவ்வப்போது வலம் வருவார்கள். அந்தக் காலகட்டத்தில் வந்த நிறையப் படங்களில் எம்.ஜி.ஆர். காவல்த் துறை அதிகாரியாக நடித்தாலும் பாதிப்படம்வரை சாதாரண உடையில் வந்து இரண்டு கதாநாயகிகளுடன் பாட்டுப் பாடிவிட்டு, தான் ஒரு காவல்த்துறை அதிகாரி என்ற ரகசியத்தை இடைவேளைக்குப் பிறகு தான் சொல்வது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வழக்கம்.

தங்கப் பதக்கம் படத்திற்குப் பிறகும் சொல்லிக் கொள்ளும்படி காவல்த்துறை அதிகாரிகள் திரையில் வலம் வரவில்லை. 1980களின் பிற்பகுதியில் சந்தானபாரதி இயக்கிய கடமை கண்ணியம் கட்டுப்பாடு படத்தின் கதாநாயகனும் காவல்த்துறை அதிகாரிதான். இப்படமும் நன்றாகவே ஓடியது. ஆனாலும் பலனில்லை. தொடர்ந்து காவல்த்துறை அதிகாரிகள் வில்லன்களாகவும் கான்ஸ்டபிள்கள் நகைச்சுவைப் பாத்திரங்களாகவுமே வலம் வந்தார்கள்.

அந்த சமயத்தில் டாக்டர் ராஜசேகர் நடித்து வெளிவந்த 'இது தாண்டா பொலிஸ்' ஒரு சின்ன திருப்புமுனையை ஏற்படுத்தியது. தொடர்ந்து விஜயசாந்தி தெலுங்கில் காவல்த்துறை அதிகாரியாக நடித்த படங்கள் தமிழுக்கு இறக்குமதியாகின. பிறகு திரைப்படக் கல்லூரி மாணவர்களின் யுகம் வந்தது. கிராமத்து வேடங்களிலேயே நடித்து சலித்துப் போயிருந்த விஜயகாந்த் இந்த மாணவர்களது உழைப்பில் உருவான ஊமை விழிகள் படத்தில் நடித்தார். படம் பெரிய வெற்றி பெற்றது. மீண்டும் அதே மாதிரியாக மாநகர காவல், கேப்டன் பிரபாகரன் படங்களிலும் காவல்த்துறை உயரதிகாரியாக நடித்தார். இவற்றுக்கு நடுவில் தங்கப் பதக்கத்தின் மறுபதிப்பைப் போல பி.வாசு வால்டர் வெற்றிவேல் எனும்




படத்தை எடுத்தார். இதில் சத்தியராஜ் நடித்தார். இதுவும் வெற்றி பெற்றது.

பின்னர் யாரும் பொலிஸ் வேடங்களைக் கண்டு கொள்ளவில்லை. இச் சந்தர்ப்பத்தில் தான் சாமி படம் வெளியானது. பொலிஸ் அதிகாரி பற்றிய புனைவுகள் நிஜமாக்கப்பட்ட காட்சிகளாக மாறின. 2000 ஆண்டுகளின் பின்னர் தமிழக காவல்த்துறை என் கௌண்ட்டர்களை நடத்திக் கொண்டிருக்கிறது. இதுவே பின்னர் திரைப்படங்களில் மையம் கொள்ளத் தொடங்கின. சூர்யா நடித்த காக்க... காக்க... திரைப்படம் மாபெரும் வெற்றி பெற்றது. சூர்யாவுக்கும் வெகுஜன மட்டங்களில் நல்ல வரவேற்புக் கிடைத்தது. இன்று காவல்த்துறையினரின் பெயர் கெட்டுக் கிடக்கும் நிலையில் சினிமாவில் காட்டப்படும் அல்லது கட்டப்



படும் நேர்மையான காவல்த்துறை அதிகாரிகள் மக்களுக்கு மாபெரும் ஆறுதலாக அமைகிறார்கள். வில்லன்களையும் ரவுடிகளையும் திரையில் வரும் பொலிஸ் அதிகாரிகள் அடித்துத் துவைக்கும் கெட்டவர்கள் நிஜமாகவே அடித்து நொருக்கப்படுவதாக நினைத்துப் பார்வையாளர் சந்தோசமடைகின்றனர்.

பொதுவாக இம்மாதிரிப் படங்கள் காவல்த்துறையின் அடிதடியையும் அராஜகங்களையும் நியாயப்படுத்தும் போக்கு இருக்கிறது. இதற்கான கருத்தியல்வெளி திரைப்படம் சார்ந்து கட்டமைக்கப்படுகிறது. அது திணிக்கப்படுகிறது என்பதையும் மறுக்க முடியாது. வன்முறைகளைக் கொண்டாடும் மனோபாவம் பார்வையாளரிடம் வளர்க்கப்படுகிறது. காவல்த்துறை நிகழ்த்தும் என்கௌண்ட்டர்களையும் அராஜகங்களையும் சினிமாவோடு ஒப்பிட்டுப்



பார்த்து இவற்றையும் சரி என்றே நியாயப்படுத்தும் பார்வைக் கோணமும் உருவாகிறது. நிஜ வாழ்க்கையில் நடக்கும் ஒடுக்குமுறை, சுரண்டல் மற்றும் வாழ்வியலுக்கான நெருக்கடிகள் போன்றவற்றுக்கு எதிராகப் போராடும் மனப்பாங்கை முழுமையாக அழித்தொழிக்கும் கருத்தியல் ஆயுதமாக இன்றைய பொலிஸ் அதிகாரிகளை மையப்படுத்திய திரைப்படங்கள் அமைகின்றன. அரச பயங்கரவாதத்தை நியாயப்படுத்தும் புதிய பண்பாடு உருவாகிறது.


சாமி, காக்க.. காக்க.., சிங்கம் போன்ற பெயர்களைச்சூட்டும் சினிமாத்தனங்களையும் மீறிய கதாநாயகத்தனம் பார்வையாளர்களால் விரும்பப்படுகிறது, கொண்டாடப்படுகிறது. வாழ்வியலுக்கும் திரைப்படக் காட்சிகளுக்கும் இடையிலான நிஜம் புனைவு தொடர்பிலான மாற்றுச் சிந்தனைகள் வளர்க்கப்பட வேண்டும். நல்ல சினிமா மீதான காட்சி, வாசிப்பு, பார்வை நமக்கு புதியதாக உருவாக்கப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைஞர் பொறுப்பு

## உணர்வும் பகிர்வும்

ஆதிசேனன்




**தொடர்ந்து அதிகாரமும் மேலாதிக்க ஒழுங்கும் கட்டி எழுப்பி வருகிற பிம்பங்களையும் உண்மைகளையும் கலைஞர்கள் புரிந்து கொள்ள வேண்டும். இதற்கு மாற்று ரீதியிலான செயற்பாடுகளில் இயங்கும் பண்பாட்டை வளர்க்க வேண்டும்**

இலங்கையில் நடந்து முடிந்தவை சோகமானவை தான். மிகுந்த எதிர்பார்ப்புகளுடன் புறப்பட்ட ஒரு பயணம் நந்திக்கடற்கரையில் முடிந்துள்ளது. அது மட்டுமா? இலட்சக்கணக்கானவரையும் பலியாக்கி இன்னும் பலரையும் அகதிகளாக்கி நாலா பக்கமும் துரத்தியடித்து ஒரு முடிவுக்குக்கொண்டு வரப்பட்டுள்ளது.

இதுவரையான ஆயுதப் போராட்டத்தின் விளைவாகத் தமிழ்ச் சமூகத்தில் உள்ளுறைந்து கிடக்கும் பல்வேறு உணர்வு நிலைகள் தற்போது மேலெழுச்சி பெறுகின்றன. இதனால் பல்வேறு கேள்விகளும் சிந்தனைகளும் உருவாகின்றன.

ஆனால் வெளிப்படையான பன்முகப்பட்ட கருத்தாடல்கள் இன்னும் ஆழமாகவும் தெளிவாகவும் வெளிப்படுவதாக இல்லை.

எங்கும் ஒருவித அச்சமும் மௌனமும் நிலை பெற்றுள்ளது. கலை இலக்கிய வெளிகளில் ஆரோக்கியமான அசைவுகள் உருவாகவில்லை. அவற்றைத் திட்டமிட்டு உருவாக்குவதற்கான பண்பாட்டு நிறுவனங்கள் சமூகப் பொறுப்புணர்வுடன் செயற்படுவதாகவும் இல்லை.

இன்னொரு விதத்தில் கூறுவதாக இருந்தால் கலை இலக்கிய அமைப்புகள் சமகாலத்தில் செல் நெறிகளை விளங்கிக் கொண்டு செயலாற்றும் அறிவுப்புலம், சமூக அக்கறை எதுவுமற்றவர்களாக உள்ளன. காத்திரமான கலை இலக்கியப் பண்பாட்டு இதழ்களைக் கூட நடத்த முடியாதளவிற்கு சிந்தனை, வறுமை, படைப்பாக்க வரட்சி, சோம்பேறித்தனம் மேலாட்சி பெற்றுள்ளது. சிந்தனை, வாசிப்பு மற்றும் கலந்துரையாடல்கள் முதலானவற்றில் குறுக்கீடு செய்ய முடியாதவர்களால் ஆரோக்கியமான மாற்றங்களை உருவாக்குவதற்கான சூழலை உருவாக்க முடியுமா? இது கேள்வியாக மட்டுமல்ல, அகப்புற உள்ளுணர்வாகவும் இன்னும் இழையோடவில்லை. இப்படியிருக்கையில், நாம் எதனைச் சாதிக்கப் போகிறோம் அல்லது நமக்கான தெளிவான தளங்களை அடையாளம் காட்டும் முன்னோக்கிய பார்வைகளை விதைக்க நாம் உரத்துச் சிந்திக்க முடியுமா?

நமது இலக்கிய வகைமைகள் மற்றும் கலை வடிவங்கள் மீதான ஆழமான பார்வைகளைக் கூர்மையான விமர்சனங்களை உருவாக்கும் கூட்டுழைப்பில் இறங்க ஏன் தயங்குகிறோம். நமக்கான விமர்சனக் கருவிகள் அல்லது கருத்தியல் தளங்கள் எதுவும் இல்லையா? அல்லது இருந்தவற்றை தொலைத்து விட்டோமா? அல்லது அவற்றைக் கையில் எடுப்பதற்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதிர்ச்சியும் பக்குவமும் இல்லாதவர்களாக உருமாற்றப்பட்டுள்ளோமா? இப்படிக் கேள்வி மேல் கேள்விகள் உருவாகி பல்வேறு உணர்வு நிலைச் சூழலில் மாட்டிக் கொள்ள வேண்டியதாக உள்ளது.

எமது இதுவரையான வாழ்வனுபவம், அறிவுத் தேடல் இந்த இரண்டும் இன்னும் இணைய முடியவில்லை. கடந்த காலங்களை எவருமே முற்று முழுதாகத் தகவலும் விவரணமும் சார்ந்து வெளியே கொண்டு வர முடியாது. எப்போதுமே நடைமுறைச்சிக்கல்களையும் அறம் சார்ந்த சிக்கல்களையும் தேர்வு, தெரிவு எழுப்புகின்றன. கடந்த கால அனுபவங்களைப் புதிய வகையிலே இணைப்புச் செய்து அல்லது மீள்கட்டுமானம் செய்து அவற்றோடிணைந்த மனவெழுச்சிகளோடு அமிழ்தல் முக்கியம். இதுவே படைப்புத்தளமாக கற்பனையாகின்றது. ஆக சிந்தனையைப் புதிய வகையிலோ அல்லது மாற்று வழியிலோ இயங்கிச் செல்லும் கற்பனையில் அடங்கும். இந்தப் புரிதல் ஆழமாக்கப்பட வேண்டும். அப்போதுதான் புதிய முயற்சிகள் நமக்குச் சாத்தியப்படும்.

நாம் மாதிரிக்கு கவிதை பற்றிச் சிந்திக்கலாம். கடந்த பல்லாண்டுகளாக ஈழத்துத் தமிழ்க் கவிதைகளில் நுண்ணிய பல்வேறு குரல்களில் பல்வேறு பொருளெனப் பேசும் பல கவிஞர்கள் உருவாகியுள்ளார்கள். எண்பதுகளுக்குப் பின்னர் கவிதையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை நுட்பமாகப் பதிவு செய்ய வேண்டும். இந்த மரபிலும் கூட தொண்ணூறுகளில் கவிதை என்பதற்கும் இரண்டாயிரத்தில் கவிதை என்பதற்கும் அப்பால் புதிய புதிய கவிச் செழுமையான குரல்களைக்கேட்க முடிகிறது. ஆனால் இந்தக் குரல்களில் தனித்தன்மைகள், வித்தியாசங்கள் இன்னும் முழுமையாக அடையாளம் காணப்படவில்லை. குறித்த ஒவ்வொரு படைப்பாளியின் படைப்பாளுமை மொழிச்சிறப்புக் குறித்து அதிகம் பேசவில்லை.

ஒவ்வொரு வகையினரும் தத்தமக்குரிய கவிதைத் தளங்கள் வழியே தமக்குரிய அரசியல் அழகியலோடு இயங்கியுள்ளனர். இவற்றை ஒற்றைத் தன்மையில் புரிந்து கொள்ள முடியாது. பொதுவாக கவிதா உணர்வுத் தளங்கள் வடக்கு, கிழக்கு முஸ்லிம்கள், மலையகப் பெண்கள் போன்ற தளங்களில் வெளிப்பட்டுள்ளன.

இந்த வரலாற்றுப் புரிதல் நமக்கு முக்கியம். இதனை மறுத்துப் பார்க்கும் பொழுது அனைத்தையும் ஒரே சிமிழுக்குள் அடைத்து வைக்கும் அபாயம் நேர்ந்து விடுகிறது. நமது இந்த வேறுபட்ட கவிதா உணர் நிலைகளோடு பரிச்சயம் அற்றிருக்கும் ஒரு வாசகருக்கு தமிழ்க் கவிதைத் தளங்களின் பன்முகப்பாட்டைப் புரிந்து கொள்வது கடினமாக இருக்கும். இந்தப் பன்முகப்பாடு தான் நமது கவிதைகளின் சிறப்பான அரசியலாகவும் வெளிப்படுகிறது. இவ்வாறு உருவாகும் 'கவிதையும் அரசியலும்' தான் நமக்கான பன்முகப்பாட்டின் அவசியத்தையும் தொடர்ந்து வலியுறுத்தும். இந்தப்பின்புலங்களைக் கண்டடையும் உழைப்பு நமக்கு இப்போது தேவையாகிறது.

எல்லாக் காலகட்டங்களிலும் கலைஞர்களுக்கு இருக்கிற முக்கியமான பணி அவர்கள் நல்ல பொறுப்புமிக்க சமூகக் கலைஞர்களாகத் தொடர்ந்தும் தம்மைப் பேணி வருவதில்தான் உள்ளது. இதற்கான சுய சிந்தனையும் சுய தேடலும் சுய உறுதிப்பாடும் கலைஞர்களுக்குத் தேவையாகிறது. இதற்காக உழைக்கும் ஆர்வமும் மனப்பாங்கும் முக்கியம்.

கலைஞர்கள் எப்போது எவ்வகையான அதிகாரங்களுக்கும் கீழ்ப் படிந்து சேவகம் செய்யாமலிருக்க வேண்டும். சமூகநீதியின் பாற்பட்டு விடுதலை அரசியல் சார்ந்து இயங்கும் பண்பு கொண்டவர்களாகவும் வாழ வேண்டும். [illegible] வாய்ப்புகளுக்குள் ஒத்தோடிகளாக வாழும் இயல்பை நிராகரிக்கும் இயல்பு கொண்டவர்களாகவும் திகழ வேண்டும். கலைஞர்கள் ஆத்துமத்தின் கழகக் குரலாகவும் இருக்க வேண்டும்.

முன்னைய காலத்தில் இயங்கியது போல் இன்றைய காலத்தில் இயங்க முடியாது. இன்று நாம் முகங்கொடுக்கும் சவால்கள், நெருக்கடிகள் எண்ணற்றவை. உலகமயமாக்கல், நுகர்வியல் முதலானவற்றின் படையெடுப்பால் பல்வேறு பன்முகப் பிரச்சினைப்பாடுகளையும் முகங்கொடுக்கின்றோம். இதனையும் புரிந்து கொண்டு கடந்து செல்லும் ஆற்றலைப் பெருக்கிக் கொள்ளும் காலத்தில் வாழ்ந்து வருகின்றோம்.



தொடர்ந்து அதிகாரமும் மேலாதிக்க ஒழுங்கும் கட்டி எழுப்பி வருகிற பிம்பங்களையும் உண்மைகளையும் கலைஞர்கள் புரிந்து கொள்ளவேண்டும். இதற்கு மாற்று நீதியிலான செயற்பாடுகளில் இயங்கும் பண்பாட்டை வளர்க்க வேண்டும்.

நாம் எங்கிருந்து தொடங்குவது? இது சமகாலத்தில் உடனடியாகக் கடக்கப்பட வேண்டிய விரி நிலைச் சிந்தனையுடன் வாழ்வதற்கான பொருத்தப்பாடுகளை உருவாக்குவது அவசியமாகிறது. தொடர்ந்து புதிய சிந்தனைகள், புதிய கற்பனைகள், புதிய படிமங்கள், புதிய கண்டுபிடிப்புகளை நோக்கி நமது பயணம் தொடரட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# OBTAIN A PRESTIGIOUS DEGREE FROM University of the West of England

the 6th Largest University in the United Kingdom,

JOIN

# NORTHSHORE

## College of Business and Technology

- State-of-the-art Campus in Colombo with excellent facilities to accommodate 2500 students
- Assurance of highest standards
- Excellent teaching by lecturers with experience at reputed local and foreign Universities
- Students are registered as full-time undergraduates of UWE from the first year itself

Degree Programmes in
### Information Technology

BSc (Hons) Software Engineering
BSc (Hons) Computer Science
BSc (Hons) Computing
BSc (Hons) Business Information Technology

Degree Programmes in
### Engineering

BSc Eng (Hons) Civil Engineering
MEng/BEng (Hons) Electrical & Electronic Engineering





**Northshore College of Business and Technology**
141, Church Road, Colombo 15, Sri Lanka
Phone: +94 11 4369092
Email: info@northshore.lk
Web: www.northshore.lk

NORTHSHORE COLLEGE OF BUSINESS & TECHNOLOGY

UWE BRISTOL University of the West of England


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவியல் களரி

# பேசும் உதடுகளின் பேசாத இரகசியங்கள்

வைத்தியக் கலாநிதி
எம்.கே. முருகானந்தன்



ஒத்தடம்
காயம் தருமென்பதை
உன் உதடுகள் தானடி
உறுதிப்படுத்தின

எனக் கவிதை புனைந்தார் ஜோசப் சேவியர் தாசப்பன். இதழோடு இதழ் பிணைந்து ஆசையோடு கொடுக்கும் முத்தமானது ஒத்தடம் கொடுப்பது போன்று உள்ளத்திற்கு இதமானதுதான். ஆயினும் அங்கு வேட்கை மிகும்போது காயங்களும் ஏற்பட்டுவிடலாம் என்கிறார்.

ஆம்! உதடுகள் என்றால் எமக்கு எப்பொழுதும் நினைவுக்கு வருபவை காதலும் காமமும் முத்தங்களும்தான். இதனால்தான் அது கவிஞர்கள், கதாசிரியர்கள் போன்றவர்களின் கற்பனையின் ஊற்றாக எப்பொழுதும் இருந்து வந்திருக்கிறது.

ஆனால் அண்மைக் காலங்களில் அது படைப்பாளிகளுக்கு அப்பால் பல்வேறு தரப்பட்டவர்களைக் கவர்ந்திழுக்கத் தொடங்கி யிருக்கிறது. விஞ்ஞானிகள், நீதித்துறை, சட்ட மருத்துவர்கள் ஏன் கடுகடுப்பான பொலிஸ் காரர்களையும் தான். துப்புத்துலங்காத கொலை வழக்கில் குற்றவாளியைக் கண்டு பிடிப்பதற்கும் இது உதவியிருக்கிறது. லிப்ஸ்டிக் தயாரிப்பாளர்களைக் கவர்ந்திருப்பது மற்றொரு சமாச்சாரம்.

அதற்குக் காரணம் என்ன? உதடுகளில் உள்ள மென்கோடுகள்தான். உதட்டின் மேற்பகுதி முற்று முழுதாக வழுவழுப்பானதல்ல. அதில் மென்மையான பல திட்டுகளும் பள்ளங்களும் உள்ளன. இவை தமக்கேயுரிய சிறப்பியல்புடைய வடிவமைப்பைக் கொண்டிருக்கின்றன. இவற்றை அச்சு எடுக்க முடியும். அவ்வாறு எடுப்பதை உதட்டு அச்சு (Lip Print) என்கிறார்கள்.

எழுத முடியாதவனது ஒப்பந்தத்திற்குப் பதிலாக எவ்வாறு பெருவிரல் அடையாளம் பெறப்படுகிறதோ அவ்வாறே உங்கள் உதட்டு ரேகைகளையும் அச்சு எடுக்க முடியும். அதை பயன்படுத்தவும் ஆராயவும் செய்கிறார்கள். அதைக் கொண்டு சில சிக்கல்களைத் தீர்க்கவும் முடிகிறது. அவ்வாறு உதட்டு அச்சை ஆராய்வது ஒரு கற்கை நெறியாகவும் வந்துவிட்டது. cheiloscopy என்பது அதன் பெயராகும். உண்மையில் cheilo என்றால் உதடு என்று அர்த்தம். மேலைத்தேய மருத்துவத்திலுள்ள பெரும்பாலான சொற்கள் கிரேக்க மொழியிலிருந்து வந்தவை. இதுவும் அவ்வா



றானதே. அதனை ஆராய்வு செய்பவர்களை cheiloscopists என்கிறார்கள்.

உதடுகளின் வரிவடிவை முதல் முதலில் 1902 ஆம் ஆண்டிலேயே அவதானித்து அதனை விபரித்து பதிவு செய்தவர் மனிதவியல் ஆய்வாளரான திரு. பிஸர் (R.S. Fischer) ஆகும். இருந்தபோதும் அதனால் மனித வாழ்விற்கு பயன்பாடுகளும் உள்ளன என்பதை உணர சுமார் 50-60 ஆண்டுகள் கழிய நேர்ந்தது.

அதன் பயன்பாடு நோக்கிய முன்னோடி ஆய்வைச் செய்து அடிப்படை உண்மைகளை வெளியிட்டவர்கள் ஜப்பானைச் சேர்ந்த ஆய்வாளர்கள்தான். டோக்கியோ பல்கலைக் கழகத்தைச் சார்ந்த யாசுவோ Tsuchihashi மற்றும் Tazuo சுசுகி ஆகியோர் 1,364 நபர்களின் உதடுகளை ஆராய்ந்து பார்த்தார்கள். மனித உதடுகளின் சிவப்புப் பகுதியிலுள்ள வரிவடிவங்கள் ஒவ்வொரு மனிதனுக்கும் தனித்துவமும் பிரத்தியேகமுமானவை என்பதை நிறுவினார்கள்.

மற்றொரு விடயமும் சுவாரஸ்யமானது. இது பாலினம் சார்ந்தது.

ஒரு உதட்டு அச்சு ஆணினதா அல்லது பெண்ணினதா என்பதைப் பிரித்து அறிய முடியுமா என்பதைப் பற்றியும் மற்றொரு ஆய்வு நடந்துள்ளது. இது இந்தியாவின் மீரட்டில் உள்ள சுபார்தி பல்மருத்துவ கல்லூரியில் செய்யப்பட்டிருக்கிறது. இவ் ஆய்வில் 20 பெண்களில் 18 பேரையும், மற்றும் 20 ஆண்களில் 17 பேரையும் பாலின ரீதியாக அவர்களால் அடையாளம் காண முடிந்துள்ளது. இது நம்பிக்கை அளிக்கும் செய்தியாகும்.

இந்த முடிவுகளின் தொடர்ச்சியாகவே சட்ட மருத்துவத்தில் இன்று உதட்டு அச்சுவிற்கு ஒரு இடம் கிடைத்துள்ளது.

ஆனால் இதில் ஒரு பிரச்சினை உள்ளது. இந்த வரிவடிவங்கள் மிகவும் நுண்ணியமானவை. மரணத்திற்குப் பின்னர் இவற்றில் மாற்றங்கள் ஏற்படுகின்றனவா? மாற்றங்கள் உண்டெனில் அவை எப்படியான மாற்றங்கள் என்பதேயாகும். இதைக் கண்டறிவது குற்றவியல் துறைக்கு மிகவும் அவசியமானது. ஆனால் இதைப் பற்றிக் கண்டறிவதில் ஒரு பின்னடைவு ஏற்பட்டது. அது அறிவியல் ரீதியான பின்னடைவு அல்ல. ஒப்பீட்டு ஆய்விற்குத் தேவையான எண்ணிக்கை கிட்டாததேயாகும். பிரேத அறையை வந்தடையும் சடலங்களினது உதட்டு அச்சுகளை, அவை உயிருடன் இருந்தகாலத்து உதட்டு வரிவடிவங்களுடன் ஒப்பீடு செய்வதற்கு போதிய எண்ணிக்கையான மாதிரிகள் ஆய்வாளர்களுக்கு கிடைக்கவில்லை என்பதே அதுவாகும். காலகதியில் போதியளவு மாதிரிகள் கிடைக்கும்போது இது பற்றிய தெளிவான அறிவு கிட்டுமென நம்பலாம்.

உதட்டு வரிவடிவங்களைப் பெறும்போது மற்றொரு பிரச்சினை உதட்டுச் சாயங்களால் ஏற்பட்டது. நீண்ட காலம் அழியாமல் தமது சாயங்களை விட்டுச் செல்லும் புதிய உதட்டுச் சாயங்களாலேயே இது ஏற்பட்டது. இவை விட்டுச் செல்லும் தடங்கள் காரணமாக இயற்கையான உதட்டு அச்சுகளை தெளிவான அச்சுகளாக எடுப்பதில் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. ஸ்பெயின் நாட்டின் வாலென்சியா பல்கலைக்கழகத்தின் ஆய்வு இதற்கு விடை கண்டது. நைல் ரெட் என்ற நிறமியைப் பயன்படுத்தி உதட்டுச் சாயங்களால் மறைந்திருக்கும் உதட்டு ரேகைகளை சரியாகக் கண்டறிய முடியும் என்பதை வெளிப் படுத்தினார்கள்.

உதடுகள் இரகசியம் பேச வல்லன. பேசும் அந்த உதடுகளிலும் பல பேசாத இரகசியங்கள் இன்னமும் ஒளிந்து மறைந்துள்ளன.

இவற்றை ஆய்ந்து கண்டறிவது விஞ்ஞானத்திற்குச் சவாலாக இருந்தபோதும் பல முடிச்சுகளை அவை தமது விடா முயற்சியால் தொடர்ந்து அவிழ்த்து வருகின்றன. போர்த்துக் கேயத்தைச் சார்ந்த ஆய்வாளர்கள் உதட்டு வடிவங்களை இனமாதிரிகளாக தொகுத்தறியும் முயற்சியில் கடுமையாக உழைத்து அதில் தாம் கண்டறிந்தவற்றை ஆய்வுக் கட்டுரையாக வெளியிட்டிருக்கின்றனர். ஆயினும் அவர்களுக்கும் ஒப்பீட்டுப் பார்ப்பதற்கான முன்னைய மாதிரிகள் இல்லாமை ஒரு பிரச்சினையாகவே இருக்கிறது. எதற்கும் முத்தமிடுவதில் அவதானமாக இருங்கள். உங்கள் உதட்டு அச்சு ஒரு வேளை உங்களுக்கு எதிரான சாட்சியமாக ஒரு காலத்தில் மாறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பனுவல் பார்வை

## நீர்வையின் நினைவலைகள்

ந.இரவீந்திரன்

அறுபது வருடங்களுக்கு மேலாக இடதுசாரி அரசியல் களத்தில் காத்திரமான பங்களிப்பினை நல்கிய நீர்வை பொன்னையன் தனது அனுபவச் செழுமையை 'நினைவலைகள்' எனும் நூலாகப் படைத்தளித்துள்ளார். நினைவலைகள் என்ற இந்த நூல் என் சுயசரிதையல்ல. நான் அரசியல்வாதியல்ல. இலக்கியவாதியுமல்ல. அரசியல், இலக்கியச் செயற்பாட்டாளன் என முன்னதாக அவர் எச்சரித்துக் கடிவாளமிட்ட போதிலும், சுயசரிதைக்கான அடிப்படைப் பண்புகள் இந்நூலில் உண்டு. (முழுக்க முழுக்க சுயசரிதையாக அமை ந்துவிடாமல், தனது கால அரசியல், சமூக, கலை, இலக்கியப் பண்பாட்டு விவாதங்களில் தன் கருத்தியல் வெளிப்பாட்டைப் பதிவு செய்வதையே முதன்மைப் பணியாக வரையறுத்துள்ளார்) தேர்ந்த ஒரு அரசியல்வாதியாகவும் இலக்கியக் கர்த்தாவாகவும் அவர் துலங்கினார் என்பதை இந்நூல் வாயிலாகவும் புறத் தகவல்களூடாகவும் நாம் அறிவோம்; இருப்பினும் தீவிரமான களச் செயற்பாட்டாளராகவே தன்னை அவர் அடையாளப்படுத்த விருப்பம் கொள்வதற்கு எதிர்ப்புக்கூற எவராலும் இயலாது என்பது உறுதி.

ஒரு பூரண மனிதருக்கான வயதுக்காலமான 60 வருடங்களில் அரசியல்- சமூகப் பங்களிப்பின் பதிவு என்கிற வகையில் 355 பக்கங்களில் இந்நூல் விரிவடைந்துள்ளமை வியப்புக்குரியதல்ல. அவ்வாறிருந்தும், இறுதியில் அவசரமாக எழுதி முடித்துவிட வேண்டும் என்ற அவதியில் சுருங்கக்கூற முனைந்துள்ளார். நீர்வை என்ற விமர்சனக் குரலைக் கேட்க முடிந்துள்ளது. தொடக்கம் முதல் உச்ச நிலைவரையான வளர்ச்சிப் படிகளை நிதானமாகப் படைப்பிலக்கியப் பாங்கோடு வளர்த்துச் செல்கிறார் என்ற கருத்து ஏற்புடையதே. அரசியல் களத்தின் வீறார்ந்த போர்க் குணங்கள் அதற்கான கட்சி ஊழியனின் பார்வையிலன்றி, ஒரு தேர்ந்த இலக்கியக் காரரின் பாணியில் பதிவாகியுள்ளது. இன்னும் செப்பனிட்ட வடிவில் ஒழுங்கமைத்து வழங்கியிருப்பின் மேலும் செழிப்பான அனுபவப் பகிர்வைப் பெற்றிருக்கவியலும் என இந்நூல் குறித்து எழுந்த குரல் கவனிப்புக்குரியது.




நீர்வேலியிலிருந்து 7 மைல் தூரம் நடந்து வந்து யாழ்ப்பாணத்தில் தோழர் கார்த்திகேசனைச் சந்திக்க எடுத்த முதல் முயற்சி தோற்றாலும் கொழும்பு தலைமைக்கட்சிக் காரியாலயத்துக்கு முன்னர் கடிதமெழுதி விபரம் அறிந்தது போலக் கண்டனக் கடிதம் உடனே எழுதினார்; நேரில் தோழர் ஒருவர் தொடர்பால் சரியான விபரம் தெளிவான நிலையில் தோழர் கார்த்தியைச் சந்தித்து தொடர் வளர்ச்சியில் கொம்யூனிஸ்ட்டாக பரிணமித்தார். அவரது சிபாரிசுக் கடிதத்துடன் கல்கத்தாவுக்கு படிக்கச் செல்லும் வழியில் தோழர் ப. ஜீவானந்தத்தைச் சென்னையில் கண்டு பேசினார். அதன் பேறாக வீறுடன் போராட்டங்களை முன்னெடுத்த வங்கத்தின் கட்சியின் கிளையிலும் கலை- இலக்கிய-பண்பாட்டுக் களங்களிலும் நான்கு ஆண்டுகள் தீவிரமாக இயங்கினார். இயங்கியும் கூடப் படிப்பைக் கோட்டை விட்டாரில்லை; முன்னதாகத் தோழர் கார்த்தியும் சரி, தீவிரமாகச் செயற்படும்போது வங்கத் தோழர்களும் சரி, படிப்பை நிறை வேற்றுவது அவசியம் என்ற எச்சரிக்கையை வலியுறுத்தியிருக்கின்றனர்.

நாடு திரும்பியவர் லஞ்சம் கொடுத்து ஆசிரியராக வேண்டியதில்லை எனும் நிலையில் கட்சி முழு நேர ஊழியராக கொழும்பு சென்று புத்தகக் கடை சீரமைப்பிலும் தொழிற்சங்க வேலைகளிலும் மூழ்கினார். தலைமைத் தோழர்களிலிருந்து அடிமட்ட ஊழியர்கள் வரை அனைவரோடும் நல்லுறவு வலுக்கையில் கட்சிப் பிளவு 1964 இல் சோவியத் சீனப் பிளவின் பேறாக வந்தமைகிறது. பின்னரும் புரட்சிகர மார்க்சிய-லெனினிசக் கட்சியில் பிளவுகள்; 1972 இல் தோழர் சண்முகதாசனைத் தலைமையிலிருந்து மத்திய குழு நீக்கியதாகக் கூறிய பிரேமலால் குமாரஶ்ரீ, கார்த்திகேசன், வீ.ஏ. கந்தசாமி ஆகியோரின் அணியில் நீர்வை.

முந்திய சோவியத் சார்பு 'திரிபுவாதிகளை' மிகுந்த நட்புணர்வோடு தொடர்ந்து எழுதிச் செல்லும் நீர்வை, தோழர் சண் மற்றும் தோழர் கே.ஏ. சுப்பிரமணியம் அணிகளை மட்டும் காரசாரமாகத் தாக்குவார்; ஒருவகையில் இவர்களை அம்பலப்படுத்துவதே இந்த நூலின் பிரதான பணி என்பது போலவே நீர்வையின் எழுத்து அமைந்துள்ளது. புரட்சிகர அணி அறுபதுகளில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் வாயிலாக மகத்தான சாதனையை நிக ழ்த்தி இருந்தது. இதற்கான பெறுபேறை கார்த்தி, வி.ஏ. கந்தசாமி, நீர்வை என்ற தமது அணி பெறுவதா- சண், மணியம், செந்தில் அணி பெறுவதா எனும் போட்டா போட்டியில் இறங்கியது போன்ற தொனி வெளிப்பாட்டையே இங்கு காண்கிறோம். அந்தப் போராட்டம் யாழ்ப்பாணத்தின் தலித் மக்கள் அனைத்துச் சாதியினரோடும் ஐக்கியப்பட்டுப் போராடி கொம்யூனிஸ்ட் கட்சியின் தீர்க்கமிக்க வழிகாட்டலில் பெற்றுக் கொண்டது. மக்களைத் தலைமை தாங்கிய சண், மணியம், கார்த்தி, வி.ஏ.கந்தசாமி, செந்தில் உட்பட பலரது தியாகப் பங்களிப்புக்கள் மதிக்கத்தக்கன. இதனைப் பேதப்படுத்த வே ண்டாம். சரியான உட்கட்சிப் போராட்டங்களை முன்னெடுக்காமல் அன்று பிளவுகள் ஏற்பட அந்தத் தலைவர்கள் எல்லோரும் காரணமாய் இருந்தார்கள். அதையும் மீறி அவர்களது மகத்தான பங்களிப்பே போற்றப்பட வேண்டியது.

தலித் பிரச்சினை குறித்தும் தவறான புரிதலை இந்த நூலில் வெளியிட்டுள்ள நீர்வை, அதன் பேறாக டானியல், டொமினிக் ஜீவா ஆகியோரைக் கடுமையாகத் தாக்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுள்ளார். அவர்கள் விமர்சனத்துக்கு அப்பாற்பட்டவர்கள் அல்ல என்ற போதிலும் நீர்வை தாக்குதல் விமர்சனத்தை மேற்கொண்ட முறைமை மார்க்சியருக்கு உரியதாக அமையவில்லை.

அவ்வாறே தமிழ்த் தேசியம் குறித்தும் புரிதல் கொள்ள முயற்சியெடுக்காது புதிய ஜனநாயகக் கட்சியையும் தேசிய கலை இலக்கியப் பேரவையையும் நீர்வை தாக்குகிறார். புலிகள் இந்த அமைப்பினரைக் கொல்லாமல் இயங்கவிட்டது, தமிழ்த் தேசியர்களாகி- புலிகளை ஏற்றுக் கொண்டதன் பேறு என அபாண்டமாகக் கூறுகிறார். இதன் தலைமைத் தோழர்கள் யாழ்ப்பாணத்தில் வாழ முடியாத சூழல் இருந்தன. அங்கு தலைமறைவாக இருந்து பின்னர் புலம்பெயர நேர்ந்தது. தொடர் மரண அச்சுறுத்தலுக்குள்ளே தீரமுடன் இயங்கிய நிலையில் பின்னாலே புலிகள் தங்கள் தந்திரோபாயத்தை மாற்றி புதிய அணுகுமுறையை வரித்தனர். அதன் பேறாக சில சரிவுகள் வந்தபோதிலும் பாட்டாளி வர்க்க நோக்கில் தலித் பிரச்சினையை அணுகியதுபோலவே தமிழினத் தேசியத்தையும் புதிய ஜனநாயகக் கட்சி கையாண்டது. அப்பால் நேர்ந்த தவறுகள் தொடர்ப்போராட்டங்கள்- விமர்சனம், சுய விமர்சனம் வாயிலாகத்திருத்தப்பட வேண்டியவை.

இந்த அம்சங்களில் எவரையும் அம்பலப்படுத்துவது என்பதற்கு அப்பால் எதிர்காலச் சந்ததிக்கு எமது அனுபவச் செழுமையை எவ்வகையில் கையளிக்கப் போகிறோம் என்ற உணர்வுடன் படைக்கப்பட்டிருப்பின் இந்நூல் அதியுன்னதம் எனும் வரவேற்பைப் பெற்றிருக்கும்.

இப்போதும் கூரிய வர்க்கப் போராளியாக பாட்டாளி வர்க்க நோக்கில் செழுமைமிக்க வரலாற்று அனுபவத்தைக் கையளிக்கும் வகையில் ஒரு உன்னதமான படைப்பாக நீர்வையின் 'நினைவலைகள்' அமைந்துள்ளது என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.



# பௌதிகப் புவியியல்


**ம.அருண்**

தமிழ்மொழி மூலப் பாடசாலைக் கலைப் பிரிவு மாணவர்களுக்கான சமூக அறிவியல் துறை சார்ந்த பாட நூல்களின் பற்றாக்குறை ஒரு பெரும் குறைபாடாகக் கூறப்பட்டு வருகின்றது. அதிலும் குறிப்பாக இன்று புவியியற் கற்கை நெறியில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் புதிய அணுகுமுறைகள், கோட்பாடுகள், பிரயோகங்கள் சார்ந்து வருகின்ற நூல்கள் மிக அரிதாக உள்ளன.

1960களில் ஆரம்பமான சுயமொழிக் கல்வி மூலம் தரமான ஆங்கில புவியியல் நூல்கள் தமிழுக்கு மொழி மாற்றம் செய்யப்பட்டன. இருப்பினும் 1980களின் பின்னரான காலப் பகுதியில் மொழி மாற்ற முயற்சிகள், புத்தாக்க புது முயற்சிகள் ஒரு வரண்ட நிலையினையே கொண்டிருந்தது. 1990களின் நடுப்பகுதியின் பின்னர் தமிழ்ச் சூழலில் பேராசிரியர் எஸ். அன்ரனி நோர்பேட் அவர்களது புவியியல் நூல்களின் ஆக்க முயற்சிகள் தமிழ் மூலப் புவியியல் கற்கையில் புத்தாக்கமான புதுமரபை உருவாக்கத் தொடங்கின. இதனால் மாணவர்களும் நிறைய நன்மைகள் பெற்றனர்.

தற்போது பேராசிரியர் பௌதிகப் புவியியல்: செயன்முறையும் நிலவுருவங்களும் எனும் புதிய தமிழ் நூலொன்றை நமக்குத் தந்துள்ளார். இந்நூல் தமிழ் மொழி மூலமான புவியியல் துறையில் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுக்குப் புதுவரவாகும். க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கு ஏற்ற வகையில் புவியியலின் உட்கூறான புவிவெளியுருவவியலை சுய கற்றலுக்கான ஏற்பாட்டில், விளக்கப்படங்களின் துணையுடன், ஒரு முறையியலைப் பயன்படுத்தி நூல் அமைவு பெற்றிருக்கின்றது.

புவிவெளியுருவவியல் என்பது புவியில் காணப்படுகின்ற நிலக்காட்சிகள், நிலவுருவங்கள் அவற்றின் புவிச்சரிதவியற் கட்டமைப்புக்கள், தோற்றம், தோற்றத்திற்கான காரணிகள், அழிவுகள் போன்றவற்றை அவற்றின் இடைத் தொடர்புகளை அறிவியல் ரீதியாக விளக்குவதாகும். இந்நூலில் ஐந்து அத்தியாயங்களில் அமைவுற்ற புறவிசைக் காரணிகள் பற்றிய அறிமுகங்கள் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. அவற்றின் செயன்முறைகள், நிலவுருவங்கள் போன்றன விளக்கப்படங்களின் துணையுடனும் உதாரணங்கள் மூலமாகவும் எளிதில் விளக்கப்பட்டிருக்கின்றது. காற்றரிப்பு நிலவுருவங்கள், கரையோர நிலவுருவங்கள், சுண்ணக்கற் நிலவுருவங்கள் முதலானவை மீது ஆழமான பார்வையும் புதிய விடயங்களும் அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதும் இந்நூலிற்கு வலுச்சேர்த்திருக்கின்றது.




புவியியல் கல்வித் துறையினருக்கு மட்டுமின்றி பொது வாசிப்பு நிலையிலும் முக்கியம் பெறுகின்ற துறையாகும். அவ்வகையில், இன்றைய கோளமய வெப்பமாதல், பனிக்கட்டி உருகல், கடல்மட்ட மாற்றங்கள் போன்றவை அவ்வவ் பிரதேசங்களின் நிலக்காட்சிகளில் எவ்வாறான மாற்றத்தை ஏற்படுத்துகின்றன? அவற்றின் போக்குகள் பற்றியும் இந்நூலில் இன்னும் ஆராய இடமுண்டு. எனவே இவ்வாறான தரமான புவியியல் நூல்கள் பொது வாசிப்பு நிலைக்கும் எடுத்துச் செல்லப்பட வேண்டும். இதற் கான வல்லமையினை பேராசிரியரது நூல்கள் கொண்டிருக்கின்றன.

தமிழ்ப் பிராந்தியங்களில் அமைவுற்ற வளாகங்கள், பல்கலைக்கழகங்கள் அவற்றின் மனித வளங்கள் முயற்சிக்கத் துணியாத விடயங்களைத் தட்டிக் கழிக்கும் நிலையில் சமூகப் பொறுப்புணர்வு சார் விடயங்களை பேராசிரியர் அன்ரனி நோர்பேட் செவ்வனே நிறைவேற்றுகின்றார். 1990களின் பின்னரான தமிழ் மொழி மூல புவியியல் வளர்ச்சியில் பேராசிரியரது பங்கு தனித்துவமானது. இவரது நூல்கள் புதிய அறிகை மரபிற்குட்பட்டது. மேலும் இற்றைப்படுத்தும் தன்மை வாய்ந்தது. புவியியலின் உட் கூறுகளில் புதிய புதிய வீச்சுகளைக் கொண்டது. அறிவியல் ரீதியான பார்வையால் வலுப்பெறுகிறது. இவரது சிந்தனைகளால் உருவானவர்களும் முரண்படுபவர்களும் இவருக்கு கடமைப்பட்டவர்கள் எனக் கூறலாம். எவ்வாறெனில் இவர் ஆதரிப்பவர்களுக்கும் எதிர்ப்பவர்களுக்கும் இடையில் நின்று தமிழ் மொழி மூல புவியியற் கற்கையினை வளப்படுத்துவதனால் ஆகும். பேராசிரியரது சிந்தனை முறைமை, செயல் வடிவம் போன்றவற்றால் மீண்டும் ஒரு தரமான இளம் புவியியலாளர்களின் வருகை இடம்பெறும் என்பதனை நாம் துணிந்து கூறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பதிவுகள்**

# இடைவெளிகளில் குடியிருத்தல்

## அடையாளத் தேடலுக்கான புகைப்படப் போராட்டம்

து.தமிழ்ச்செல்வன்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைப்பீடம் சில முன்மாதிரியான அறிவுசார் புலங்களை அறிமுகப்படுத்துவதிலும் அதனை முன்னெடுப்பதிலும் முன் நிற்கின்றது. பல்கலைக்கழகக் கற்றல், கற்பித்தல் எனும் வரையறைக்குள் நின்று கொண்டு தமிழ்ச் சமூகத்தோடு அது கொண்டிருக்கும் ஈடாட்டப் பெறுமதியினைச் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் வலுப்படுத்திக் கொள்கின்றது.

இந்த எண்ணத்தைப் பிரதிபலிக்கும் நிகழ்வொன்று அண்மையில் யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பீடத்தினரின் ஏற்பாட்டில் இடம்பெற்றது. வெளியாரின் அறிவைப் பகிர்ந்து கொள்ளுதல் என்ற நோக்கோடு 'இடைவெளிகளில் குடியிருத்தல்' எனும் தலைப்பிலான புகைப்படக் கண்காட்சி காண்பியப்படுத்தப்பட்டிருந்தது.


சுவீடன் நாட்டு புகைப்படக்காரரான நயினா மங்கலநாயகத்தின் பல்வேறு கால கட்ட படங்கள் காட்சியாக்கப்பட்டிருந்தன. நயினா லண்டன் றோயல் கலைக் கல்லூரியில் புகைப்படத்துறையில் கலாநிதிப் பட்டத்தினை நிறைவு செய்திருக்கின்றார். மங்கலநாயகம் என்ற இலங்கைத் தந்தைக்கும் சுவீடன், டெனிஸ் தாய்க்கும் பிறந்த இவர் புகைப்படங்களினூடே தன்னைத் தேடத்





யாழ்ப்பாணத்துத் தந்தையின் நடை, உடை, பாவனை, உணவுப்பழக்கவழக்கம், சுவீடன் தாயின் குணாதிசயங்கள் இரண்டையும் பின்பற்றும் குழந்தை இவற்றை எதிர்கொள்ளும்போது ஏற்படும் பண்பாட்டு வெறுமையை அல்லது சலிப்பை படங்களில் பரவ விட்டிருக்கிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தொடங்கியிருக்கின்றார்.

ஆண்வழிப்பட்ட சமூக அமைப்பில் பெண் பெறுமானம் குறைக்கப்பட்டவளாகின்றாள். ஆகவே அவளின் அனைத்து அடையாளங்களும் ஆணின் ஊடாகவே ஒழுங்குபடுத்தப்படுகின்றது. ஐரோப்பிய நாடுகளில் இப்போது உருவாகியிருக்கும் பால்நிலைச் சமத்துவத்துக்கான தேடல் அடையாள நிரூபித்தலுக்கான வழிகளையும் திறந்துவிட்டுள்ளது. கறுப்புத் தந்தைக்கும் வெள்ளைத் தாய்க்கும் அல்லது வெள்ளைத் தந்தைக்கும் கறுப்புத் தாய்க்கும் பிறந்த குழந்தைகள் தம் அடையாளத் தேடலுக்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றன.


இவ்வாறு கலப்பினமாகப் பிறந்த நயினா மங்கலநாயகத்தின் அடையாளத் தேடலுக்கான பயணம் தான் 'இடைவெளிகளில் குடியிருத்தல்' என்ற புகைப்படக் கண்காட்சி ஆகும். தனது வாழ்வில் கடந்து வந்த ஒவ்வொரு நிகழ்கணத்தின் நிழலையும் படமாக்கியிருக்கும் இவர், அவற்றை



ஒரு மையத்தில் நின்றபடி தன் அடையாளத்தையும் அதனூடாகக் கண்டுபிடிக்க முயற்சித்திருக்கின்றார். யாழ்ப்பாணத்துத் தந்தையின் நடை, உடை பாவனை, உணவுப் பழக்கவழக்கம், சுவீடன் தாயின் குணாதிசயங்கள் இரண்டையும் பின்பற்றும் குழந்தை இவற்றை எதிர்கொள்ளும்போது ஏற்படும் பண்பாட்டு வெறுமையை அல்லது சலிப்பை படங்களில் பரவ விட்டிருக்கிறார்.

ஒவ்வொரு புகைப்படத்தின் பின்னாலும் யாழ்ப்பாணத் தந்தைக்கும், சுவீடன் தாய்க்குப் பின்னாலும் நான் யார்? என்னுடைய நாடு எது? நான் எந்தக் கலாசாரத்துக்குரியவள்? எந்த வழிகாட்டுதலைப் பின்பற்றுவது? போன்ற கேள்விகளை நயினா பலமாக விட்டுச் செல்கின்றார்.

அடிப்படையில் அடையாளம் தேடும் படலமாகப் படைக்கப்பட்ட இந்தக் கண்காட்சி யாழ்ப்பாணத்தில் காட்சிப்படுத்தப்பட்டமை மிகவும் வரவேற்கத்தக்கது. ஏனெனில் அவரின் அடையாளத் தேடலுக்குரிய நிலம் இதுதான். அவர் இங்கிருந்து தான் தனது பண்பாட்டின் பாதிக்கூறுகளைக் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கின்றது. இப்படியான கலாசாரக் கலப்புக்குள்ளாகும் குழந்தைகள் எதிர்கொள்ளும் எதிர்காலச் சிக்கல்களை கற்பிக்க வேண்டிய தேவையும் அவருக்கு இருக்கின்றது. எப்போதும் பாதிக்கப்பட்டவர் பேசும் மொழிக்குத் தானே வலி அதிகம். அது நயினாவின் வழியே சாத்தியமாகியிருக்கின்றது என்று தான் சொல்ல வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடைசிப் பக்கம்



நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்

## தமிழர் ஒற்றுமை

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் நிறுவனத்தினர் மாதம் இருமுறை வெளியிடவிருக்கும் தமிழ்ச்சஞ்சிகையின் முதல் வெளியீட்டில் பிரத்தியேகமாக இடம்பெறும் கடைசிப்பக்கக் கட்டுரையை நானே எழுதவேண்டும் என்று ஆசிரியர் தனபாலசிங்கம் அவர்கள் கேட்டுக்கொண்டபோது சற்று துணுக்குற்றேன். இளைப்பாறிய என்னிலும் பார்க்க பதவியில் இருக்கும் என் மாணவர்களான உச்ச நீதிமன்ற, மேன் முறையீட்டு நீதிமன்றத் தமிழ்ப்பேசும் நீதியரசர்களிடமோ வேறு உயர் பதவிகளில் இருப்பவர்களிடமோ கேட்டிருக்கலாமே என்றேன்.

ஆனால் நண்பர் தனபாலசிங்கம் அவர்கள் கண்டிப்பாக நான் தான் எழுதவேண்டும் என்றார்.

"எதைப் பற்றி?" என்றேன். "அது உங்கள் பொறுப்பு. நாங்கள் எதையுமே குறிப்பிடமாட்டோம்" என்றார்.

பல தடவைகள் சிந்தித்துப் பார்த்தேன். "அரசியல் பற்றி, சட்டம் பற்றி, சமூகவியல் பற்றி, சமயம் பற்றி, பொருளாதாரம் பற்றி, சுற்றாடல் பற்றி, ஏன் எதைப்பற்றியுமே எழுத வாய்ப்பு கிடைத்துள்ளது. நான் எதைப்பற்றி எழுத....?" மீண்டும் மீண்டும் ஒரே கருத்துத் தான் மனதில் மேலோங்கி நின்றது.

என்னைப் போன்றவர்களுக்கு இன்னுஞ் சில வருடகாலமே இவ்வுலக வாழ்க்கையில் மீதம் உள்ளது. பல வருடங்களாக என் மனதில் ஒரு அபிலாசையாக, ஆசையாக அலைபாய்ந்து கொண்டிருக்கும் "அதை"ப்பற்றி எழுதினால் என்ன என்றது மனம். எதைப்பற்றி...? அது தான்

"தமிழர் ஒற்றுமை" பற்றி. தமிழ்ப் பேசும் மக்கள் உலக-ளாவிய ரீதியில் வேற்றுமையில் ஒற்றுமையைக் கடைப்பிடிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பது எனது நெடுநாளைய ஆசை. அதனால்த்தான் அதையே தலையங்கமாகத் தேர்ந்தெடுத்தேன்.

வட மாகாணத் தமிழ்ப் பேசும் மக்களின் எண்ணிக்கை இருபது சதவிகிதத்துக்கும் அதிகமாக அண்மைக்காலத்தில் குறைந்துள்ளது என்று கேள்விப்பட்டேன். பலர் வெளிநாடு சென்று விட்டார்கள். வேறுபலர் மாண்டுவிட்டார்கள். இன்னுஞ் சிலர் கொழும்பிலும் அதைச் சுற்றிய பகுதிகளிலும் குடியேறி உள்ளார்கள். வேறு சிலர் இடம் பெயர்ந்து புள்ளி விபரஞ் சேகரிப்பவர்கள் கண்களுக்குத் தென்படாமல் வாழ்கின்றார்கள். மக்கள் தொகை குறையக் குறைய பள்ளத்தினுள் நீர் சென்று நிரம்புவது போல் வேற்று இடத்தில் உள்ளோர் தமிழ்ப்பேசும் மக்கள் விட்டுப்போன அல்லது விடாது போன நிலங்களை, ஆதனங்களைப் பொறுப்பேற்கத் துணிவர் இல்லை! துணிந்து விட்டார்கள்.

இந்த நிலையில் தமிழ்ப் பேசும் மக்கள் நிலைமை புரியாமல் தம்முள் பழங்கதைகள் பேசி முரண்டு பிடித்துக் கொண்டிருந்தால் என்னாகும் என்று சிந்தித்தது மனம்.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே ஒற்றுமை இன்றேல் அனைவருக்குந் தாழ்வே" என்ற பழமொழி தான் அண்மைக் காலமாக என் மனதில் வலுவான ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்டிருக்கிறது.

என் அன்பான தமிழ்ப்பேசும் வட, கிழக்கு இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ மக்களுக்கு, மலையகம் வாழ் சகோதர, சகோ தரிகளுக்கு நான் சொல்ல விரும்புங்கருத்து "ஒன்றுபடுங்கள்" என்பது தான். தமிழ்ப் பேசும் மக்கள் என்ற வகையில் "ஒன்றுபடுங்கள்" என்பது தான். ஒரு பரந்த குடையின்கீழ் வந்து விட்டோம் என்ற எண்ணமே எங்களுக்குப் பலத்தையும் உத்வேகத்தையும் அளிப்பன.

வேற்றுமைகள் இருக்கலாம், இருக்க வேண்டும். அவை கருத்தில் இருக்கலாம், நாம் செய்யும் கடமைகளில் இருக்கலாம், வாழும் முறைமையில் இருக்கலாம், பொருளாதாரம், சமூகத்தரம் என்று பலவற்றில் வேற்றுமைகள் இருக்கலாம். ஆனால் நாங்கள் யாவரும் உலகின் மிகப்பழமை வாய்ந்த ஒரு பாரம்பரியத்தின், மொழியின், கலாசாரத்தின், இலக்கியத்தின் வழிவந்தவர்கள் என்பதை மறந்து விடக்கூடாது. "யாதும் ஊரே: யாவருங் கேளிர்" என்ற இரண்டாயிரம் ஆண்டு பழமை வாய்ந்த கோட்பாட்டின் வார-சுகள் நாம் என்பதை நாங்கள் சதா நினைவுறுத்தி வைத்திருக்க வேண்டும். எல்லா நாடுகளும் எம் நாடு, எல்லா மக்களும் எங்கள் சுற்றத்தார் என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் எங்கள் மூதாதையரில் ஒருவர் கூறியிருந்தாரானால் எங்கள் பாரம்பரியத்தின் விரிந்த நோக்கை, பரந்த கருத்தை நாங்கள் எங்கள் உள்ளத்தினுள் உள்ளீர்க்க வேண்டும்.

எம்முள் கருத்து வேற்றுமைகள் இருக்கலாம். ஆனால் நாங்கள் யாவரும் தமிழ்த்தாய் மக்களே என்ற உணர்வு பிறக்க வேண்டும். தமிழரின் நாளைய வருங்காலத்திற்காக இன்று நாங்கள் விட்டுக் கொடுக்க முன்வரவேண்டும். "நான்" "என்" கருத்து என்பதை விட நாங்கள் ஒன்று சேர்ந்து தமிழ் மக்களுக்கான ஒரு பொதுக் கருத்தை உருவாக்க முன்வரவேண்டும். சுவர் இருந்தால்த் தான் சித்திரம் எழுதலாம். காணிகள் பறிபோய், கலைகள் பறிபோய், மொழியும் பறிபோய், மதங்கள் பறிபோய், நாமெலாம் தமிழர் என இனி இங்கு மானமுடன் வாழமுடியுமோ என்பதைச் சிந்திக்க வேண்டும்.

இன்றைய பெரும்பான்மையினரின் கோஷம் என்ன? இது ஒரு சிங்கள பௌத்த நாடு. நாட்டின் எந்த இடத்திலும் நாங்கள் வாழலாம். தனிப்பட்ட வேறு பாரம்பரியங்கள் சேர்ந்து ஒன்றுபட்டு குறிப்பிட்ட இடங்களில் நிலைக்க எம்மால் இடம் அளிக்க முடியாது. இந்த நாட்டில் இருக்கும் சிங்கள பௌத்தர் அல்லாதோர் யாவரும் வந்தேறு குடிகளே அல்லது வந்தோரின் வழிவந்த குடிகளே. அதாவது சிங்கள கிறிஸ்தவர்கள் கூட அந்நியர்களே என்பது தான் இன்றைய கோஷம். 2009ஆம் ஆண்டு மே மாதத்தின் பின்னர் ஒலிக்கப்படும் கோஷம் இது.

ஆனால் இந்தக் கோஷம் சர்வதேசச் சட்டத்திற்கும் உடன்பாடுகளுக்கும் ஐக்கிய நாடுகளின் குறிக்கோள்களுக்கும் முரணானது. அரசியல் பலம், இராணுவப்பலம், மதத்துறையினர் பலம் என்று பல்வகைப்பலங்கள் பாவிக்கப்பட்டு பாரம்பரியமாகத் தமிழ் மொழி பேசும் மக்கள் வாழ் இடங்களை, பாரம்பரியமாக பௌத்தமதம் அல்லாத வேறு மதங்களைப் பின்பற்றிவரும் மக்களை, ஒரு சிங்கள பௌத்த பாரம்பரியத்துடன் இணைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

பன்மொழி, பன்மத நாடாக அன்றி இலங்கையைக் கூடிய மட்டும் ஒரு மொழி, ஒரு மத நாடாக மாற்ற பிரயத்தனங்கள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதில் பிழையேதும் இல்லை என்று வாதிப்போர் பலர் எம் தமிழ்ப் பேசும் மக்களிடையே இருக்கத் தான் செய்கின்றனர். தமக்கு வேண்டியவை கிடைக்கின்றன என்ற எண்ணத்தில் இவர்கள் இவ்வாறு வாதிக்கக்கூடும். ஆனால் வருங்காலத்தில் தமிழ்ப் பாரம்பரியம் அழிந்து போக நாங்கள் கருவிகளாக இருக்க வேண்டுமா என்ற கேள்விக்கு நாங்கள் ஒவ்வொருவருமே எங்கள் நெஞ்சங்களில் கை வைத்துப் பதில் கூறும் காலம் வந்து விட்டது.

சிந்திப்போம்! அவ்வாறு ஒரு காரணமாக நாங்கள் இருக்கக் கூடாது என்றால் எம்மவர்கள், அதாவது தமிழ்ப் பேசும் மக்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டும். ஒரே குரலில் எமது உரிமை களுக்காகப் போராட வேண்டும். இதுவே எனது தாழ்மையான வேண்டுகோள். இதுவே இன்றைய காலத்தின் தேவையுங் கூட!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Windsor Gardens

*A new generation of retirement living*





*Windsor Gardens is located at Visaka Road , Colombo 4. The concept of Windsor Gardens is to create an environment suitable for individuals who are still independent, but would like to enjoy their lives without the daily concerns of cooking and other household responsibilities.*



*Therefore at Windsor Gardens we offer a living Standard that incorporates a host of activities and health care. Windsor Gardens offers large luxurious rooms, distinctive common areas, services to enhance comfort, longevity of residence, health, activities and security.*



*Our on-site trained staff provides care and assistance to our residents 24 hours a day*



29/8, Visaka Road, Colombo 04.
**☎Contact: 077 357 6592**
**www.WindsorGardens.lk**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# EVERYTHING A HYBRID SHOULD BE AND MUCH MORE

**Eco friendly | Virtually silent engine | 40 Miles per Gallon | 0 - 60MPH in 5.9 Seconds | 340 bhp**

**For queries on this breathtaking offer call: 011 2875666**

Limited number of cars available

**Rs.17,187,500 + vat ***

*Conditions Apply

**Prestige Automobile (Pvt) Ltd.** # 234-238, Pannipitiya Road, Battaramulla, Sri Lanka. Tel : 94-11-2875666 Email: prestigeauto@sltnet.lk

**Printed and published by Express Newspapers (Ceylon)(Pvt)Ltd.at No.185,Grandpass road,Colombo -14, Sri Lanka.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org